
# ஆட்டத்தின் நாயகன்



சித்ரா பாலா

# ஆட்டத்தின் நாயகன்



## 1

அந்த விடியற்காலையில் பீச் ரோட்டில் காரை நிறுத்திவிட்டு இறங்கிக் கையில் இருந்த ரிமோட் கண்ட்ரோல் 'கீ'யால் காரைப் பூட்டியபடி நடக்கத் தொடங்கினாள் யுக்தா.

முகத்தில் சிந்தனைக் கோடுகள்.

உதடுகளால் பற்களைக் கடித்தபடி நடக்கத் தொடங்கினாள். நடையில் வேகம் இருந்தது.

யுக்தா, வழக்கமாக மற்றவர்களைப் போன்று உடற் பயிற்சிக்காக பீச் வந்து நடக்கும் ரகம் இல்லை. மனசில் எப்பொழுதாவது குழப்பம் ஏற்படுகையில் இப்படி வந்து கால் ஓய நடப்பாள். அப்படி நடக்கையில் குழப்பத்திற்குத் தீர்வும் கண்டு பிடித்துவிடுவாள். அதுவும் சமீப காலமாக அவள் இப்படி வந்து நடப்பது அதிகமாகத்தான் ஆகி விட்டது.

காரணம் பிரச்சனைகள்.

ஆனால் இப்பொழுதுள்ள குழப்பத்திற்கு, பீச்சோரமாக நடந்து பூமி முழுவதும் சுற்றி வந்தாலும், எந்தத் தீர்வும் கிடைக்கப் போவதில்லை என்று அவள் மனம் அடித்துச் சொன்னது.

அவளால் இந்தச் சிக்கலில் இருந்து மீள முடியுமா?

பாட்டியைச் சமாளிப்பது எப்படி?

பலநூறு முறை இதைப் பற்றிச் சிந்தித்தும் அவளுக்குப் பதில் விடிந்தபாடில்லை.

அவள் வேண்டாம், முடியாது என்று சொல்லிப் பாட்டி கேட்டுவிட்டால், இந்தப் பூமி சுழலுவதை நிறுத்தி விடாதா..? பாட்டி.. பாட்டி... என்று அவளின் சிவந்த இதழ்களில் இருந்து கன அழுத்தமாக, கோபமாக வார்த்தைகள் அவளறியாமலே தெறித்தன.

யுக்தாவின் பாட்டி!

அவளுக்கு விவரம் தெரியாத வயதிலேயே தாய் தந்தையர் இருவரும் விமான விபத்தில் இறந்துவிட, அவளுக்கு எல்லாமே பாட்டிதான். பெற்றோரை நினைத்துக் குழந்தை ஏங்கி விடக் கூடாதே என்று நினைத்த பாட்டி குழந்தையிடம் காட்டியதோ பேரன்பு.



கண்ணின் கருவிழியை இமை காப்பது போல யுக்தாவைக் கண்ணும் கருத்துமாய்ப் பார்த்தார். அதில் இம்மியளவு கூடக் குறை சொல்ல முடியாது. படிப்பு, விளையாட்டு, அவளுக்குப் பிடித்த பொழுதுபோக்கு என்று அவள் விருப்பத்திற்கு வளைந்து கொடுத்த பாட்டி கொஞ்ச காலமாக மாறியே போனார். மாற்றத்திற்கு என்ன காரணம் என்பது மட்டும் யுக்தாவிற்குப் புரியவில்லை.

பாட்டியின் வயது ஏறி விட்டதால் வந்த மாற்றமா? வயதின் கோளாறா...? அப்படியும் தோன்றவில்லை.

எப்பொழுதும் விளையாட்டு, சிரிப்பு, சினிமா என்று விளையாடிக் கொண்டிருந்த யுக்தாவிற்குத் திடீரென்று ஆபீஸ், கமிட்டி மீட்டிங், ஃபேக்டரி, ஃஷேர்... என்று பலதும் திடீரென்று போதிக்கப்பட முதலில் திண்டாடிப் போனாள்.

அன்பான பாட்டி திடீரென்று கார்கோடனாக மாறி, அப்படிச் செய்.. இப்படிச் செய்... என்று அவளை ஒரு வழி செய்துவிட்டார்கள். ஒரு வழியாக மிகவும் கஷ்டப்பட்டு மனதைப் பக்குவபடுத்தி, அடக்கிக் கொஞ்ச காலமாகச் சரி நமக்குக் கடவுள் அளித்த வரம் இதுதான் என்று வாழ்க்கையை அதன் போக்கில் ஏற்றுக் கொண்டாள் யுக்தா.

எதையும் சட்டென்று கிரகித்துக் கொள்ளும் புத்திசாலியான யுக்தா, பாட்டி கொண்டு சென்ற பாதையில் இறுதியில் ஈடுபாட்டுடன் செயல்பட்டாள். அதிலும் சுவாரசியம் இருக்கத்தான் செய்தது. காலை ஆறு மணிக்கு எழுந்தால், இரவு எட்டு மணி வரை செய்வதற்கு ஏதாவது வேலை இருந்து கொண்டே இருக்கும்.

ஆனால் பாட்டி திடீரென்று சொன்ன செய்தியில் பொறி கலங்கிப் போனாள்.

திருமணம்.

யுக்தாவின் திருமணம்.

மாப்பிள்ளையும் அவரே முடிவு பண்ணி, அவளிடம் ஒரு அபிப்ராயமும் கேட்காமல் பாட்டி சர்வாதிகாரமாகச் சொன்னது அவளுக்கு மிகுந்த எரிச்சலைக் கிளப்பியது.

அவள் என்ன குழந்தையா? இல்லை, ரோபோட்டா..? அவளுக்கென்று மனம் என்று ஒன்று இருக்கிறதே..!

எதைச் சொன்னாலும் சரி சரி என்று தலையாட்டும் பூம் பூம் மாடு என்று நினைத்து விட்டார்களா?

அதுவும் சமீப காலமாக அவர்களின் ஆபீஸில் கமிட்டி மீட்டிங் சமயங்களில் மட்டும் தலையைக் காட்டிவிட்டுப் போகும் பொறுப்பற்ற நிதின்... அவளுக்குக் கணவனாக முடியுமா? என்ன தகுதி அவனுக்கு இருக்கிறது என்று பாட்டி முடிவெடுத்தார்கள்..? 'சோளக் கொல்லை'ப் பொம்மைக்கு கோட் சூட் போட்ட மாதிரி, கமிட்டி மீட்டிங் என்றால் வந்துவிடுவான். வாயைத் திறந்து இரண்டு வார்த்தை சபையில் அவன் பேசிப் பார்த்ததில்லை. இவளானால், வார்த்தைக்கு வார்த்தை மல்லுக் கட்டுவது, டிபேட் என்று எந்த கருத்தரங்குகளிலும் முதல் ஆளாய் நிற்பவள்.

ஆனால்... இது அராஜகம்.. தோழியரிடம் சொன்னால் கேலிக் கூத்தாகிவிடும்.

இந்தக் காலத்தில் அவள் வளர்ந்த வட்டத்தில் திருமணம் பெரும்பாலும் காதல் மணம்தான். மனம் ஒத்து, கண்களால் காதல் கவிதை பேசி, எஸ்.எம்.எஸ்-ஸில் வார்த்தைகள் பரிமாறப்பட்டு, காஃபி டேக்களில் வளர்ந்து, நாட்கள் பல பழகிப் பின் பெரியவர்கள் சம்மதத்துடன் மணம் புரிவார்கள்.



அப்படியும் காதல் கல்யாணம் என்றில்லாவிட்டால், பெற்றோர்கள் பார்த்துச் செய்யும் அரேன்ஜ்ட் மேரேஜ் என்றாலும், ஆண் பெண் இருவரின் சம்மதத்தையும் பெற்று, இருவரையும் ஒருவருடன் ஒருவர் பேச அனுமதித்து, பின் அவர்களின் சம்மதத்தைப் பெற்றுத்தான் நிச்சயமே நடக்கும்.

இந்தப் பாட்டி என்னவென்றால்...

''திஸ் இஸ் டூ... மச்...'' - என்று அவளின் மெல்லிய அதரங்கள் மெல்ல முணுமுணுத்தன.

அவனின் போட்டோவைக் காலையில் கொடுத்து இதுதான் நீ மணந்து கொள்ளப் போகும் மாப்பிள்ளையின் 'போட்டோ' என்று நீட்டித் திருமணம் அடுத்த மாதம், தேதியும் குறித்தாகிவிட்டது என்று முடித்த போது யுக்தா அதிர்ச்சியின் முழுப் பரிமாணத்தில் கண்களை விரித்தாள்.

தாய் தந்தையரின் பிரிவு அப்பொழுதுதான் நெஞ்சில் பெரிய அடியாக விழுந்தது.

அப்பா, அம்மா இருந்திருந்தால் இப்படி அவளைக் கேட்காமல் முடிவெடுத்திருப்பார்களா?

அதுவும் அவள் வேறொருவனை விரும்புவது தெரிந்தும்.. அதற்குப் பாட்டி சம்மதம் கொடுத்த பின்பும்... கடும் கோபம் கிளம்பியது யுக்தாவிற்கு.

கோபமா...? அது சாதாரண வார்த்தை. உள்ளே எரிமலையல்லவா வெடித்துச் சிதறியது.

பரத்.

காலேஜ் முடிக்கும் பருவத்தில் வந்த காதல். பாட்டியின் சம்மதத்தையும் பெற்ற காதல். சந்தோஷத்துடன் மேற்படிப்புப் படிக்க லண்டன் போயிருக்கும் அவன் நிலைமை???

ஏமாற்று...

ஏமாற்று...

எத்தனை நம்பிக்கையோடு வருவான்.

கடவுளே...!

அவனுக்கு என்ன பதிலை அவளால் கொடுக்க முடியும்?

"வேண்டாம்.. முடியாது.. எப்படி அவனை எனக்குக் கல்யாணம் செய்து வைக்க கேட்பீர்கள்.. அதுவும் பரத்திற்குச் சம்மதம் சொல்லிவிட்டு...?" - என்று அவள் பாட்டியிடம் படபட பட்டாசாகக் கோபத்தில் வார்த்தைகள் சிக்கக் கேட்டாள்தான்.

"நிதின்தான் உன்னை மணக்கக் கேட்டான்!" பாட்டியிடம் இருந்து வார்த்தைகள் மெல்ல முணுமுணுப்பாக வந்தன.

கேட்பான்... கேட்பான். சோளக்கொல்லைப் பொம்மை.

"யார் கேட்டாலும் உடனே சரி.. சரி... என்று சொல்ல நான் என்ன..." அவள் பேசியதைக் கேட்கப் பாட்டி அங்கு நிற்கவே இல்லை. பதில் சொல்ல முடியாதில்லையா? ஆனால் முடிவு மட்டும் அவரிடம். ஏன்?

மணக்கக் கேட்டது அவனா?



என்ன திமிர்! என்ன திமிர்! மீண்டும் மீண்டும் யோசித்தவளுக்குள் மின்னலென யோசனை பிறந்தது. யோசிக்க யோசிக்க அது மட்டுமே தீர்வு என்று அவளுக்குப் புரிந்து போனது. நெஞ்சுத் துடிப்பும் சீரானது.

அவனே அவன் வாயால் வேண்டாம்.. வேண்டாம்.. இந்தப் பெண் வேண்டாம்.. ஏன், கல்யாணமே வேண்டாம் என்று அலறி அடித்து ஓட விடுகிறேன் பார் என்று மனதில் கறுவினாள் யுக்தா.



## 2

யுக்தா வீட்டிற்கு வந்த போது பாட்டி இல்லை. பாதி நேரம் அவர் வீட்டிலேயே இருப்பதில்லை. எங்கு போகிறார், என்ன செய்கிறார் என்பது அவருக்கே வெளிச்சம்.

வீட்டின் கதவைத் திறந்த பைரவி, யுக்தாவை விழி வழியப் பார்த்தாள்.

"என்ன யுக்தா. உலகமே இடிந்து உன் மேலே விழப் போகுதா?" - என்றார், முகத்தில் சிறு கவலையுடன்.

"ஏன்.. அத்தே?"

"முகம் பார்க்கச் சகிக்கவில்லை. ஏன் இப்படி அலமலந்து நிற்கறே. யுக்தான்னா அந்தச் சிரிப்பில் மலர்ந்த அழகு முகம்தான் தெரியணும்."

''வாழ்க்கையே என்னைப் பார்த்துச் சிரிப்பா சிரிக்குதே அத்தே. இதில் சிரிப்பு எங்கிருந்து வரும்?'' - எரிச்சலுடன் யுக்தா சொல்ல.

''யுக்தா... வாட் இஸ் ராங்? என்ன ஆச்சு?'' - எப்பொழுதும் சிரிக்கச் சிரிக்கப் பேசும் யுக்தாவின் இன்றைய எரிச்சலான தொனியில் அதிர்ந்தாள் பைரவி.

''உங்களுக்கு விஷயம் தெரியாதா அத்தே? பாட்டி எனக்குக் கல்யாணம் முடிவு பண்ணியிருக்காங்களாம்!'' - வார்த்தைகள் தெளிவாக இருந்தாலும், கோபத்தில் கண்கள் சிவந்தன.

''அம்மா என்னிடமும் பேசினார்கள்...'' என்று சொல்லும் முன் பைரவியின் குரல் இறங்கிவிட்டது. ஆனால் தொடர்ந்து,

''ஏன் உனக்குப் பிடிக்கலையா, யுக்தா? மாப்பிள்ளைப் பையன் நல்ல மாதிரி, பணவசதியும் உண்டுன்னு அம்மா சொன்னாங்களே.''

''அப்போ... பரத். அவன் விஷயம் பாட்டி சம்மதித்தது உங்களுக்குத் தெரியுமில்லையா? நிமிஷத்துக்கொரு நிறம் மாற்றிக் கொண்டிருக்கிற உங்க அம்மாவை என்ன அத்தை பண்ணறது?'' - குதி குதி எனக் குதித்தாள் யுக்தா.

''நீ பரத்தைக் காதலிக்கவில்லையே யுக்தா. அந்தப் பையனா பிரியப்பட்டு வந்து கேட்டதுதானே. அழகான, வசதியான, படிச்ச பொண்ணுன்னா நாலு பேர் வந்து கேட்பாங்கதான். அதுலே உனக்கேத்த ஜோடியை உன் பாட்டி கரெக்டாகத்தான் செலக்ட் பண்ணியிருப்பாங்க.''



''போங்க அத்தை. நீங்க எப்பவும் பாட்டி சொன்னதையே தெய்வ வாக்கா எடுத்துப்பீங்க. மனுஷங்க சில நேரம் தவறுகள் செய்யலாம் இல்லையா? இந்த முறை பாட்டி செலக்ஷன் சரி கிடையாது. தப்பு, நூறு சதவீதம் நான் அடித்துச் சொல்வேன்!'' என்று விரலை மறுப்பாக ஆட்டிப் பேசியபடி சோபாவில் அமர்ந்தாள் யுக்தா.

''உனக்குக் கெட்டது பண்ணப் பாட்டி நினைப்பாங்களா?''

''இவ்வளவு நாள் கெட்டது பண்ண மாட்டாங்கன்னுதான் நம்பிக்கிட்டு இருந்தேன். ஒரு சொல் பாட்டியை எதிர்த்துப் பேசியிருப்பேனா? பாட்டியினால் என்னோட வாழ்க்கை முறையையே மாத்தியிருக்கேன். ஆனா... இது கல்யாண விஷயம் அத்தை. என் எதிர்காலம். எனக்கு என் கணவனாக வருபவனைப் பிடிக்க வேண்டும்.''

''ஏன், நீ அவனைப் பார்த்து இருக்கிறாயா? அவனை எப்போது பார்த்தாய்? ஏன் பிடிக்கவில்லை?'' யுக்தாவின் அருகில் தானும் அமர்ந்து கொண்டு கேட்டாள் பைரவி.

''ம்ம்...'' வெறுப்பாக வார்த்தைகள் வந்தன. ''இரண்டு மூன்று முறை பார்த்திருக்கிறேன். ஹி இஸ் நாட் மை சாய்ஸ்.'' - நெற்றியை ஒற்றை விரலால் அழுத்தினாள்.

''அப்பறம் பரத்துக்கு என்ன பதில் சொல்லுவீங்க?''

''நீங்களாவது பாட்டியிடம் சொல்லுங்களேன் அத்தே. எனக்காக.. ப்ளீஸ்...'' - என்று கண்களில் நீர் துளிர்க்க யுக்தா சொல்ல, பைரவியின் முகம் கலங்கியது. நெற்றிப் பொட்டை ஆள்காட்டி விரல்களால் அழுத்தித் தன்னை நிலைப்படுத்திக் கொண்டாள்.

''நான் சொன்னா அம்மா கேட்பாங்களா?'' என்று யோசித்தவரை ஆச்சர்யத்தோடு பார்த்தாள் யுக்தா.

''நீங்க கோர்ட்-லே வாதாடுறதை நானே நேர்ல பார்த்து இருக்கேன். பாயிண்ட் பை பாயிண்டா நீங்க போடற போட்டில், எதிராளியைச் சிக்க வைக்கிற வாதத்தில் உங்களை மிஞ்சற வக்கீலைப் பாக்க முடியாது. நகரத்தின் பிரபலமான வக்கீல்... ஏன் பாட்டியிடம் வார்த்தைகளைப் பிரயோகிப்பதேயில்லை. எப்பவுமே ஆமாம் சாமி. யு ஆர் சர்ப்ரைசிங் அத்தை.''

விரக்தியான முறுவல் வெளிப்பட்டது பைரவியிடம்.

''ஒரு முறை அம்மாவை எதிர்த்தது போதும் யுக்தா. அதனால் நான் படித்த வாழ்க்கைப் பாடம்.. இழந்த விஷயங்கள்..'' - மனதினுள் நினைத்ததைப் பைரவியி னால் வெளியே சொல்ல முடியவில்லை.

''ஏன் அத்தை, உங்களை எப்படி பாட்டி சும்மா விட் டாங்க. நீங்க ஏன் கல்யாணமே பண்ணிக்கவில்லை...!'' என்று பேசியவள்... ''ஆகா... பாட்டியிடம் என்னையும் ஆளை விட்டு விடுங்கன்னு சொல்லிவிடப் போறேன். எனக்கும் கல்யாணமே தேவையில்லை. உங்களுக்கும் இதே மாதிரி மாபிள்ளையை மாற்றி மாற்றிக் காட்டி னாங்களா... நானும் உங்களை மாதிரி...'' - என்றவளின் வாயை நடுங்கும் விரல்களால் மூடினாள் பைரவி. ''அப்படிச் சொல்லாதே கண்ணம்மா!'' என்றபடி.

''பின்னே என்ன அத்தை.. அன்று பரத் ஒகே என் றார்கள். இன்று நிதின் ஒகே என்கிறார்கள். என்ன நினைச்சுகிட்டாங்க...?''



பதில் பேச வாயைத் திறந்த பைரவி, அதற்குள் அவ ளுடைய ஜூனியர்ஸ் மூன்று வக்கீல் அன்றைய கேஸ் கட்டைத் தூக்கி கொண்டு கறுப்பு யுனிஃபார்ம் சகிதமாக வர, சட்டென்று அவரும் சமாளித்துக் கொண்டு எழுந்து, யுக்தாவிடம் கையாட்டியபடி, இது பற்றி இன்னொரு நாள் பேசலாம் என்று 'கோர்ட்'டுக்குச் சென்றார்.

எத்தனை அழகு இந்த அத்தை! வயது போன வருடம் முப்பத்தொன்பது முடிந்தது. ஆனால் பார்ப்பதற்கு யுக்தாவின் தோழி... அல்லது சகோதரி என்று சொல்ல லாம். அத்தனை இளமை.

பாட்டி அத்தையையும் சும்மா விட்டதில்லை. ஆனால் பாட்டி சொல்வதற்கெல்லாம் மறு வார்த்தை பேசாமல் அத்தனையும் செய்யும் அத்தை, பாட்டி அவரின் திருமணப் பேச்சை எடுத்தால், கண்களால் அவரைச் சுட்டெரிப்பதைச் சின்ன வயதில் யுக்தா பார்த் திருக்கிறாள். ஓரிரு முறை இது பற்றிய சூடான வாக்கு வாதத்தில் பாட்டியும், அத்தையும் பேசிய விதத்தில் விவரம் ஒன்றும் புரியாமல் பயந்து யுக்தா மிரண்டு விழித்ததுண்டு. ஏன்? ஏன் இந்தச் சண்டை என்று அழுது அழுது யுக்தா விசாரித்ததும் உண்டு.

இவர்களின் சண்டையில் சிறுமி யுக்தா பாதிக்கப்படு கிறாள் என்று தெரிந்தவுடன், யுக்தா பார்க்க இத்தனை வருடங்களில் பாட்டியும் அத்தையும் அவள் இருக்கும் போது முரண்பாடாகப் பேசியதே இல்லை.

''என்ன, ஆபீஸுக்கு லேட் ஆயிடுச்சு, பிடிச்சு வைச்ச பிள்ளையார் மாதிரி ஒரே இடத்துல ரொம்ப நேரமா உட்கார்ந்து இருக்க. ஆபீஸ் கிளம்புற வழியைப் பார்!'' -

வெளியேயிருந்து வந்த பாட்டி விரட்டியதில் துள்ளிக் குதித்த யுக்தா, பாட்டி என்று எழுந்து சலுகையுடன், அவள் தோளில் முகம் வைத்துக் கடைசி முயற்சியாகக் கெஞ்சலான குரலில்,

''பாட்டி... எனக்கு இப்போதைக்குக் கல்யாணமே வேண்டாம். பாட்டி, கொஞ்ச நாள் போகட்டுமே!'' என்றாள்.

''கொஞ்ச நாள் இல்லை. எவ்வளவு நாளானாலும் உனக்கு நிதின்தான் மாப்பிள்ளை யுக்தா. பாட்டி மேலே நம்பிக்கை வை. உனக்குக் கெட்டதா நான் பண்ணவே மாட்டேன். உன்னோட எதிர்காலம் வளமா இருக்கும் யுக்தா. ஜாதகத்தில் வரலாற்றுப் பொருத்தம் உனக்கும் நிதினுக்கும்..'' பாட்டி மூச்சு விடாமல் யுக்தாவை கன்வின்ஸ் பண்ணிவிட வேண்டும் என்ற கண்ணோட்டத்தில் பேசிக் கொண்டே இருந்தார்.


''பாட்டி. ப்ளீஸ் பாட்டி... தப்பு பண்ணறீங்க. எத்தனை பொருத்தம் இருந்தாலும் மனசுப் பொருத்தம் வேண்டாமா, பாட்டி. பிடிக்காத கல்யாணம் எத்தனை நாள் ஓடும்? டைவோர்ஸ் என்று மீண்டும் இங்கே வந்துதான் என் வாழ்க்கையைத் தொலைத்துவிட்டு நிற்பேன்!'' - கொஞ்சம் மிரட்டலோடு பேசினாள் யுக்தா.

''சில விஷயங்களை வெளிப்படையாகப் பேச முடியாது யுக்தா. ஆனால்.. நீ நினைப்பது போல் இல்லை. இந்தத் திருமணம், அந்த வாழ்க்கை உனக்கு அமோகமாக இருக்கும். வீணே மனசைப் போட்டுக் குழப்பிக் கொள்ளாதே.''

''முதலில் என்னோட பரத்துக்கு என்ன பதில் சொல்வீங்க. அவனைக் கட்டிக்கிட்டாலும் நான் சந்தோஷமாகத்



தான் இருப்பேன் என்று நீங்கள்.. நீங்களே சொன்னீகளே பாட்டி.... இப்படி மாற்றி மாற்றிப் பேசுவதைப் பார்த்தால்.. இந்தத் திருமணத்தால் என்னை விற்க.. பணையம் வைக்க.. ஏதாவது மிரட்டல்..'' யுக்தா தீவிரமாகப் பிரச்சனையைத் தீர்க்க ஏதாவது வழி இருக்குமா? என்று கேட்கக் கேட்க, ''யுக்தா...'' - என்று நெஞ்சைப் பிடித்துக் கொண்டே கண்கள் செருக மயங்கினார் பாட்டி.



## 3

ஆஸ்பிட்டலில் மூன்று நாட்கள் ட்ரீட்மெண்ட் எடுத்துவிட்டு வீட்டிற்கு வந்தார் பாட்டி நீலவேணி.

டாக்டர்களின் அட்வைஸில் முகம் சுருங்கியது யுக்தாவிற்கு.

பாட்டியை எமோஷனலாக ஆக்கக் கூடாதாம். இரத்தக் கொதிப்பு ரொம்ப 'ஹை' ஆக எகிறியிருக்கிறதாம். இதயம் மிகவும் பலவீனமாக இருக்கிறதாம். ரொம்ப ஸ்ட்ரெஸ்ஸில் இருக்கிறார்களாம். இதைப் போல இன்னொரு முறை மயங்கினால் ''ஆஞ்சியோ'' ஆபரேஷன்தான் தீர்வாம். பிறகு இதய ஆபரேஷன். நிறைய காம்பிளிகேஷன் இருக்காம். கூடுமானவரை அவர்களைச் சந்தோஷமாகவே வைத்திருக்க வேண்டுமாம்.

நிஜமாகவே பாட்டிக்கு முடியவில்லையா? இல்லை, டாக்டர் அங்கிள் பாட்டி சொல்லச் சொன்னதைக் கிளிப் பிள்ளையாய் அவளிடம் சொல்கிறாரா?

நம்பிக்கையே இல்லை யுக்தாவிற்கு.

பாட்டியிடம் இனிப் பேசிப் பயனில்லை.

அந்தச் சோளக்கொல்லைப் பொம்மையிடம்தான் பேச வேண்டும். எவ்வளவு தைரியமாக என்னைக் கல்யாணம் செய்ய நினைத்திருப்பான்?

அவனைக் கேட்கிற நாலு கேள்வியில் அவன் ஊரை விட்டே ஓடிட வேண்டாமா.. அவனின் அட்ரஸைப் பாட்டியிடம் அவள் விசாரிக்க, ஒரு கெஸ்ட் அவுஸ் அட்ரஸ் தான் கிடைத்தது. யுக்தாவின் உதடு இளக்காரமாக வளைந்தது.

'கெஸ்ட் அவுஸ்'ஸா?

இதுவும் சொந்த ஊர் இல்லையா? அல்லது அவன் வீட்டின் லட்சணத்தை இவள் பார்த்து விடக் கூடாது என்று ''கெஸ்ட் அவுஸ்'' ஐடியாவா?

இந்தப் பாட்டிக்குத் திடீரென்று புத்தி ஏன் இப்படிப் போனது..? ஏன்..? எப்படி..? ஊர் பேர் தெரியாதவன்.. அவன் கேட்டானாம்... இவர்.. சரி என்று சொல்லி விட்டார்களாம். மீண்டும மீண்டும் மனம் அதிலேயே சுழன்றது.

அப்படி என்ன அவளுக்கு அவசர அவசரமாகக் கல்யாணம் செய்ய வேண்டும். இருபத்தோரு வயதில் திருமணத்திற்கு என்ன அவசரம். பரத் யுக்தாவைப் பிடித்திருக்கிறது என்றபோது, பாட்டி அவளின் விருப்பத்தையும் அறிந்த போது, இது சின்ன வயது, இன்னும் நான்கைந்து வருடம் போகட்டும். பக்குவப்படுங்கள். பிறகும் திருமணத்தின் மேல் நாட்டமிருந்தால் கண்டிப்பாகத் தடையேதும் இல்லாமல் செய்து வைக்கிறேன் என்று பெருந்தன்மையாகச் சொன்ன பாட்டி எங்கே காணாமல் போனார்.



எங்கேயோ இடித்தது யுக்தாவிற்கு! புரியவில்லை.

ஏன் பாட்டி?

ஏன்?

என்ன அவசரம்?

ஏதாவது பிரச்சனையா?

அதற்கு அவள் வாழ்க்கையையா பாட்டி பணையம் வைப்பார்கள்?

நம்ப மறுத்தது மனம்.

ஆனால் முன்னுக்குப் பின்னாக நிறைய முரண்பாடுகளுக்கு அர்த்தம் புரியவில்லை.

காரண காரியங்களுடன் பேசும் பேத்தியை எதிர்நோக்கும் சக்தி பாட்டிக்கில்லையா...!

பாட்டி உடல்நிலை பற்றி டாக்டர் சொன்ன விஷயத்தில் இருந்த சந்தேகம் யோசிக்க யோசிக்க இரட்டிப்பானதுதான் மிச்சம்.

டாக்டர் அவர் ஏதோ ஸ்ட்ரெஸ்ஸில் இருப்பதாகச் சொன்னார். என்னவாக இருக்கும்? இல்லை, இவள் பாட்டியைத் தொல்லை செய்யக் கூடாது என்று டாக்டர் போடும் நாடகமேதானா?!

குழப்பமாக இருந்தது யுக்தாவிற்கு.

கல்யாணத்தையும் நீலவேணிப் பாட்டி அவர் இஷ்டத்திற்கு அந்த மாதக் கடைசியில் நடத்தத் தீர்மானித்தார். இத்தனை சீக்கிரமாக, அவசரமாக அவளுக்கு மணம் புரிய வேண்டிய கட்டாயம் என்ன?

மாப்பிள்ளையும், பெண்ணும் நேருக்கு நேர் சந்திக்க வேண்டும் என்ற சம்பிரதாயம் கூடச் செய்து வைக்க நீலவேணிப் பாட்டி முயற்சிக்கவே இல்லை. அந்தச் சோளக் கொல்லைப் பொம்மையும் அவளை எந்த வகையிலும் தொடர்பு கொள்ளப் பிரயத்தனம் செய்யாதது யுக்தாவிற்கு எரிச்சலைத் தந்தது. கோழை...

பாட்டி அவளின் மறுப்பை, ஈடுபாட்டின்மையை, வருத்தத்தை, கோபத்தைத் துளிக் கூட மதிக்கவேயில்லை. பாதி நேரம் அவள் கண்களில் படுவதேயில்லை.

இடையில் பைரவி,

''நிதின் வீடு இருப்பது பாம்பேயாம், யுக்தா. கல்யாணம் ஆனதும் நீ பாம்பே போயிட்டா.. இந்த வீடே வெறிச்சென்று ஆகிவிடும்!'' - என்று கண் கலங்க,

''அதான் நான் போகமாட்டேன் என்றேனே, அத்தை. இந்தக் கல்யாணம் நடக்காது. சோளக் காட்டுப் பொம்மையை மிரட்டிக் கல்யாணத்தை நிறுத்தி விடுவேன்!'' - கண்களைச் சிமிட்டினாள் யுக்தா.

ஈமெயிலிலும், எஸ்.எம்.எஸ்ஸிலும் பரத் அவள் தொடர்பில் இருந்தான்.

எப்படியும் திருமணத்தை நிறுத்தத்தான் போகிறோம் என்ற நினைப்பில், பரத்தை எதற்குக் கலவரப்படுத்த வேண்டும் என்று அவளின் தற்போதைய நிலை



மையைப் பற்றி அவனிடம் தகவல் அனுப்பாமல் முற்றிலும் தவிர்த்தாள் யுக்தா.

அந்தச் சோளக் கொல்லைப் பொம்மையாவது கையில் அகப்படும் என்று கெஸ்ட் அவுஸில் காலை, மாலை நேரங்களில் என்று எந்த நேரம் போனாலும், அவன் கிடைக்கவேயில்லை. இனி கெஸ்ட் அவுஸ் வேலைக்கு உதவாது. அவனைத் தொடர்பு கொள்ளக் கிடைத்த செல் போன் என்றும் எப்போதும் ஸ்விட்ச் ஆப் செய்த நிலையிலேயே யிருந்தது.

சிறிது நேரம் யோசித்தவளுக்குப் பாட்டி தப்பாக போன் நம்பர் கொடுத்திருப்பார்களோ என்று சந்தேகம் உதித்தது. சட், ஏன் இது முதலிலேயே புரியவில்லை. அவர் தூங்கிக் கொண்டிருந்த நேரம், அவர் மொபைலில் இருந்து நம்பர் எடுத்தாள். அவன் பெயரில் நான்கு எண்கள் இருந்தன.

''அடயேப்பா...''

நாட்டிலே எல்லோரிடமும் கடனை வாங்கி வைத்திருப்பானா? தைரியமாக உபயோகிக்க ஒரே 'போன்' நம்பர் இல்லை. ஏமாற்றுபவர்கள்தான் நிறைய நம்பர் மாற்றி மாற்றி உபயோகித்து, பின் யாராலும் 'ட்ரேஸ்' பண்ண முடியாமல் ஒளிந்து தப்பித்துக் கொள்வார்கள். நிலையான இருப்பிடம் கூட அமைத்துக் கொள்ள மாட்டார்கள். 'கெஸ்ட் ஹவுஸ்'ஸும் மர்மக் கதைதான் போலிருக்கிறது. இதே போல எவ்வளவு கெஸ்ட் ஹவுஸில் எண்ட்ரி போட்டு வைத்திருக்கிறானோ?

நிதின் பெர்சனல் என்று எழுதியிருந்த செல் நம்பரை இதழில் ஏளன வளைவுடன் அவளுடைய மொபைலில் அழுத்தினாள்.

ஏமாற்றமாக... அதிலும் பதிலில்லை.

இரண்டு மூன்று முறை முழு ரிங்கும் போகவிட்ட பின்பும், அந்தப் புறம் இருந்து எந்தப் பதிலும் கிடைக்க வில்லை.

மற்ற நம்பர்கள் உபயோகத்தில் இல்லை. தொடர்பு கொள்ளும் நிலையில் இல்லை என்று கிளிப்பிள்ளை யாகச் சொல்லின.

மீண்டும் வேறு நம்பர் மாற்றி விட்டானா?

அட்ரஸ் இல்லாதவன்,

இல்லை என்றால், போன் அடித்தால் எடுத்துப் பேசக் கூடத் தைரியம் இல்லாதவனா? கெஸ்ட் அவுஸ், செல்போன் என்று எந்த முறையிலும் தொடர்பு கொள்ளக் கூட முடியாதவனைப் பாட்டி அவளுக்காகத் தேர்ந்தெடுத் திருக்கிறார்.

ஏன் பாட்டி?

ஆனால் ஏன்?

அவன் யார்? யார்? யார் பாட்டி?

கண்ணின் கருவிழிகள் கண்ணீரில் தத்தளித்தன. விரல்களால் கண்ணீரைச் சுண்டியவள் செல்போன் மணி அடிக்க,

ஆஹா... அதே நம்பர்... சோளக் கொல்லைப் பொம்மை. இடறிய குரலைத் தொண்டையைச் செருமியபடி,

''ஹலோ...'' - என்று யுக்தா சொல்ல, மறுமுனையில்,

''இந்த நம்பரில் இருந்து மூன்று முறை 'மிஸ்ட் கால்' எனக்கு வந்திருக்கிறது. நான் மீட்டிங்கில் இருந்ததால்



பதிலளிக்க முடியவில்லை. மறு பக்கம் பேசுவது யார் என்று தெரிந்து கொள்ளலாமா?'' - என்று தெளிவான ஆங்கில உச்சரிப்பில் மிகச் சரளமாகப் பேசிய கன கச்சிதமான கம்பீரமான ஆண்மையான குரல் யுக்தாவின் காதில் ஒலிக்க, அந்தக் குரலில் சில நொடிகள் அவ ளறியாமல் மூளை வேலை நிறுத்தம் செய்தது.

''ஹலோ... ஹலோ...'' - என்று அதற்குள் அவன் இரு முறை சொல்ல, தன்னை நிந்தித்தபடி இயல்புக்கு மாறினாள்.

''நான் யுக்தா. எனக்கு உங்களிடம் பேச வேண்டும்,'' - என்று திருத்தமான குரலில் யுக்தா பேச,

''எஸ்... கோ அஹெட்..'' - என்று அவனும் கொஞ் சமும் அலட்டிக் கொள்ளாமல், யோசிக்காமல், அவள் யார் என்று புரிந்த மாதிரிக் காட்டிக் கொள்ளாமல் அவ ளையே பேசுமாறு ஊக்குவிக்க,

இதைப் போன்று அதிகாரமும், அலட்சியமுமான ஆண்மையான குரலை முற்றிலும் எதிர்பார்க்காத யுக்தா சில விநாடிகள் பேச்சற்றுப் போனாள். ஆனாலும் தன்னைச் சமாளித்துக் கொண்டு இவனுக்கு நான் யார் என்று புரிந்ததா? இல்லையா? இல்லை, இது ஏதேனும் தவறான நம்பரா? என்ற சந்தேகத்தோடு,

''அம் ஐ டாக்கிங் டு மிஸ்டர் நிதின்?'' - என்று கேட்க.

''எஸ் யூ.. ஆர் ரைட்!'' - என்ற அவன் குரலில் நிறைய ஸ்டெயில் தெரிந்தது.

யுக்தாவிற்குக் கோபத்தின் அளவு கூடியது. சரியான பார்ட்டி தான். மரமண்டை.

''நான் நீலவேணிப் பாட்டியின் யுக்தா... தெரிகிற தல்லவா?'' - அமர்ந்த குரலில் அதிகாரமாக அவள் கேட்க,

''உம்.. கொஞ்ச நாட்களில் என் யுக்தா.. ஆகப் போகிறவள். என்ன விஷயம்? எதைப் பற்றிப் பேச வேண்டும்?'' அவன் பேச்சில் கொஞ்சம் கூடத் தடுமாற்ற மேயில்லை.

அவன் பேச்சில் அவளின் நெஞ்சு உதறியது.

கோபம் எரிமலையாக வெடித்தது.

'எவ்வளவு தைர்யமாகப் பேசுகிறான்?'

என் யுக்தாவா?!

எல்லாம் பாட்டி கொடுத்த இடம் போலல்லவா தெரி கிறது?

''ந...'' என்று தொடங்கியவள், நாக்கைக் கடித்துக் கொண்டு, ''என் கல்யாணம் பற்றி...'' - என்று முடிக்க,

அவன்,

''நம் திருமணத்தைப் பற்றியா? அதைப் போனில் பேசினால் நன்றாயிராது. இங்கே வருகிறாயா? எனக்கும் இங்கே பிஸினஸ் மீட்டிங் மேரியட் ஹோட்டலில் போய்க் கொண்டிருக்கிறது. ஈவினிங் இங்கே ரெஸ்டாரண்டில் மீட் பண்ணுவோம். ஓகே.. மீட் யூ இன் தி ஈவினிங். அரவுண்ட் சிக்ஸ்'' - என்று போனை வைத்து.. வைத்தே விட்டான்.

மை காட்!!

லூசுத் தனத்திற்கு ஒரு அளவில்லையா...?



மறுமுனையில் பேசும் நபர் என்ன பதில் கொடுக் கிறார் என்று கேட்கும் அளவுக்கு ஞானம் இல்லாத ஞான சூனியமா?


ரெட்டிகுலஸ், பிரையின்லெஸ் மேன்.

இவன் கூப்பிடுவதற்குத் தான் இவள் காத்திருந் தாளா? நாலு கால் பாய்ச்சலில் அவன் முன் நிற்பாள் என்று எதிர்பார்த்தானா? இடியட் என்று மனசுக்குள் அவனுக்கு அர்ச்சனை செய்தாள்.

ஆனால்... ஒன்று.. இந்தக் குரலை மட்டும் முதலி லேயே கேட்டிருந்தால் அதன் அமைப்பில், அவள் அவனைப் பற்றிய கணிப்பில் கொஞ்சம் மாற்றம் கண் டிப்பாக இருந்திருக்கலாம். போனில் இந்த அலட்டல் பேச்சிற்கொன்றும் குறைச்சலில்லை.

குரலிற்கு முன்னால் ஆளையேதான் நேரில் பார்த் தாயிற்றே. கண்களில் கண்ணாடி, பட்டிக்காட்டான் மிட் டாய்க் கடையைப் பார்த்தது போன்ற பார்வை, பாவனை, சபையில் இரண்டெழுத்து சேர்ந்து பேசத் தெரியாத கோழைத்தனம். பாட்டிக்கு இருந்திருந்து இவன்தானா கிடைத்தான். பரத்துக்குச் சம்மதம் சொன்ன பாட்டி பின் ஏன் மாறினாள்? பதில் தெரியாத அந்தக் கேள்விக்கு நெஞ்சு பதில் தேடி அலைந்தது.

அவனை இந்த அளவிற்கு அவள் கரித்துக் கொட்டு வதற்குப் பெரிய காரணமும் இருந்தது. அவள் தன் கண்களால் பார்த்தது. யாரும் சொல்லிக் கேட்டிருந்தால் கூட எந்த அளவு அதில் உண்மை கலந்திருக்கும் என்று யோசித்திருப்பாளாயிருக்கும்.



# 4

சுமார் இரண்டு மாதத்திற்கு முன்பு.

அன்றுதான் கம்பெனி மேஜர் ஷேர் ஹோல்டர்ஸ் மீட்டிங் இருந்தது. எட்டுப் பேர் கலந்து கொண்டார்கள். பாட்டியின் சார்பில் இவள். ஆனால் எதிர்பாராத விதமாக அவனும் பாட்டியின் சார்பில் யோசித்து யோசித்துக் கையெழுத்திடவே அவளுக்கு உள்ளூரக் கனன்று கொண்டே இருந்தது. அதிர்ச்சியாக.

பிறகு மீட்டிங்கில், ஒவ்வொருவரும் ஒவ்வொரு வித மாகத் தங்கள் கருத்தே சரி என்பது போல் விவாதங்கள், பெரிய பட்டிமன்றம் போல் நடந்து கொண்டிருக்க, அவன் ஒரு முறை கூட வாயைத் திறக்கவேயில்லை. விஷயம் தெரிந்தால் அல்லவா பேசுவான்? அணிந் திருந்த கண்ணாடி வழியாகப் பார்க்காமல், தழைத்த பார்வையும், அந்தப் பார்வையுடன் அவளை நோட்டம் விட்டதும் வேறு அவளைக் கடுப்பாக்கியிருந்தது.

மீட்டிங் முடிந்து எல்லோரும் சென்றுவிட, அன்று ஏனோ அவளுக்கு மனசே சரியில்லாமல் போனது. கம்பெனி மீட்டிங் எதிர்பார்த்த அளவு போகவில்லை. கம்பெனி நஷ்டக் கணக்கில் ஓடுவது அதிர்ச்சியாக யிருந்தது.



வீட்டிற்குப் போக மனமில்லாமல் மக்கள் சந்தடி உள்ள அந்த மார்க்கெட் ஏரியாவில் காரை பார்க்கிங்கில் நிறுத்திவிட்டுக் கால் போன போக்கில் நடந்தாள். அவள் கண்கள் ஒரு காட்சியில் நிலைத்தன. கும்பலாக ஆறேழு பொறுக்கிகள் ஒரு பெண்ணைச் சுற்றி நின்றிருந்தார்கள். 'ஏதோ கலாட்டா' என்று அவள் புருவத்தைச் சுருக்க, அதற்கேற்றாற் போல, அந்த ரௌடிகளின் சப்தமும், விசிலும் பறக்க, நின்றிருந்த இளம் பெண்களும், பொது மக்களும், நமக்கெதுக்கு வம்பு என்று வேகமாக நகர, தவறு கண்டு பொறுக்காத யுக்தாவிற்குக் கோபம் நொடி யில் பெருகியது. அதற்குள் அந்தப் பெண் துப்பட்டா தூக்கி எறியப்பட, அந்தப் பெண்ணின் அபயக் குரல் அந்த இடத்தையே உலுக்கியது.

எத்தனை நிகழ்ச்சிகளை இதைப் போல் பேப்பரில் படித்திருக்கிறாள். எவ்வளவு வருத்தப்படுவாள். பெண் மைக்கு மரியாதை தராத இந்த மாதிரிப் பொறுக்கிகளை என்ன ஏது என்று விளக்கம் கூடக் கேட்காமல் பொது இடத்தில் தூக்கிலிட வேண்டும் என்று வாதம் புரி வாளே. இன்று அவள் கண் முன்னே இந்த மாதிரியான நிகழ்வு. ஏதாவது செய்ய வேண்டுமே. உதவுவதற்கு ஒருவரும் தயாராக இருந்தது போல் இல்லை. போலீ ஸுக்குப் போன் செய்தால் அவர்கள் வருவதற்குள் என்ன நடக்குமோ?

அங்கு ரௌடிகளின் எண்ணிக்கை அதிகமாக இருக்க, அட்லீஸ்ட் உதவிக்கு ஒருவர் வந்தாலும் நிலைமையைச் சமாளிக்கலாமே. கண்களை வேகமாகச் சுழற்றியபோது நிதினைக் கண்டாள். அப்பொழுதுதான் ஒரு ஷோரூமில் இருந்து வெளிவந்தவனின் கண்களும் அந்த நிகழ்ச் சியைக் கண்ணுற்றன.

அறிந்தவனைக் கண்டதும் சிறு நிம்மதி எழுந்தது. அவனும் உதவுவான் என்ற நம்பிக்கையோடு, அந்த நம்பிக்கை தந்த தைரியத்தோடு, நொடியில் முடி வெடுத்துப் புதுமைப் பெண்ணாய்ப் பாய்ந்தாள் யுக்தா. பத்து வருடமாகக் கற்று வரும் கராத்தே கலையில் அவள் கற்றதையெல்லாம் ரௌடிகளிடம் பிரயோகித்தாள். அவளை மிஞ்ச பலமிழந்த ரௌடிகளால் ஒன்றுமே முடிய வில்லை. ய்... ஓய்... என்று சப்தித்துக் கொண்டிருந்தார்கள். அதற்குள் அந்தப் பெண் கூட்டத்தில் நுழைந்து தப்பித் தாள்.

ஓடிப்போன சில ரௌடிகள் யுக்தா மேல் கடும் கோப மாக ரோட்டிலிருந்து பெரிய கற்களைப் பொறுக்கி அவள் மேல் விட்டெறிந்தனர். அதில் ஒரு கல் யுக்தா வின் நெற்றியைப் பதம் பார்க்க, உடனே கூட்டத்திலிருந்து வேடிக்கை பார்த்த வீரமான இருவர் பெண்ணுக்குள்ள தைரியம் நமக்கில்லையா என்றபடி வீரமாக அவர்களும் சண்டையில் இறங்கினார்கள். அவர்கள்தான் யுக்தா நெற்றியில் இருந்து முகம் வரை இரத்தம் வழிவதைக் கண்டு வேகமாக அங்கிருந்த வாகனம் ஒன்றில் அவளைத் தூக்கிக் கொண்டு போனார்கள்.

இத்தனையும் கோழை அவன் வேடிக்கை பார்த்தான். பாரம்பரிய ஆணின் வீரம் துளியும் இல்லாதவன்.

ஆண்களின் வசீகரமான அலங்காரம் வீரம். பண் டைய காலம் தொட்டு ஆண்கள் பால் பெண்கள் ஈர்க்கப் படுவது, வீரத்தால்.

ஐய்...யோ... பாட்டி... பாட்டி... அவன் பக்கத்தில் நின்றால் எனக்கு வாந்தியே வந்துவிடும். நினைத்தாலே குமட்டுகிறது. பாட்டி... ஏன்...?




வாழ்க்கை முழுவதும் திருமணம் என்ற பந்தத்தால் அவனுடன் என்னை இணைக்கப் பார்க்கிறாயே.

துளியும் நல்ல அபிப்பிராயமும், அபிமானமும் இல்லாதவனை மணந்தால் அவள் வாழ்க்கை எப்படி இருக்கும்?

கடவுளே.

ஆயிரம் வாலா பட்டாசுபோலக் கோபம் படபட வென்று பொரிந்தது யுக்தாவிற்கு.

நினைக்க நினைக்க மனசு ஆறவில்லை அவளுக்கு.



## 5

என்ன தைரியமாக ஹோட்டலுக்கு வா என்று கூப்பிடுகிறான்? அவன் கூப்பிட்டால், இவள் உடனே ஓடிப்போக, இவள் என்ன அவன் வீட்டு நாய்க்குட்டியா? முட்டாள். இந்தச் சோளக் கொல்லைப் பொம்மைக்கு யாரிடம் பேசுகிறோம் என்று மரியாதை கூடக் காணும்.

என்ன இருந்தாலும் அவனைப் பொறுத்தவரையில் முதன் முதலாக வருங்கால மனைவி ஆகப் போகிற பெண்ணிடம் பேசுகிறான். பேச்சில் ஒரு சுவாரசியம், லயிப்பு, ஆர்வம் ஒரு மண்ணாங்கட்டியையும் காண வில்லை. அவளுக்குள் இனம் புரியாத கோப உணர்ச்சி மேலிட்டது.

'வருவாளா? வர முடியுமா?' என்று எந்தக் கேள்வியும் கேட்காமல், என்ன அதிகாரமாக வா என்கிறான்!

வருவாள் என்று எத்தனை நம்பிக்கை. அவளிடம் ஒன்றும் கேட்காமல் போனை வைத்த அலட்சியம்.

இந்தச் சோளக் கொல்லைப் பொம்மை தெரிந்துதான் செய்கிறதா? இல்லை, தெரியாமல் செய்கிறதா? இதுவரை அவனைப் பார்த்த இரண்டு மூன்று முறையும், அவனைப் பற்றிப் பிரமாதமாக நினைக்க ஒன்றுமே இல்லை. கண்களை மறைத்துக் கண்ணாடி அணிந்து எல்லோர் பேசுவதையும் வேடிக்கை... வேடிக்கை பார்ப்பான்.

ஆனால் இன்று எல்லாவற்றுக்கும் சேர்த்து நிறையவே பேசி விட்டான். சற்று அதிகப்படியான பேச்சுதான். சரியாக ஆறு மணிக்கு யுக்தாவின் செல்போனில் மணி அடித்தது.

நிதின்!

''நான் உனக்காக இங்கே காத்துக் கொண்டிருக்கிறேன் யுக்தா. லேட்டாகுமா?'' வர மாட்டாள் என்று சந்தேகம் துளி கூடக் கிடையாதா அவனுக்கு என்றிருந்தது யுக்தாவிற்கு.

மாங்கா மடையன்!

''வர முடியவில்லை!'' - ஒரே வார்த்தையில் பேச்சை முடித்துக் கொண்டாள்.

''ஓ... இட்ஸ் ஆல் ரைட்!'' - அந்தப் பதிலில் ஏமாற்றம் இருந்ததா, இல்லையா என்று அவளால் இனம் காண முடியாத அளவிற்கு உணர்ச்சிகளற்றிருந்தது.

சில நொடிகள் மௌனம் சாதித்தான். பின் ஜீரணித்து -



''நீ ஏதோ பேச வேண்டும் என்று சொன்னாயே! டின்னர் வெளியே சாப்பிடலாம், வருகிறாயா? எட்டு மணி போல் உன்னை வீட்டிற்கு வந்து பிக்கப் செய்து கொள்கிறேன்... இஸ் இட் ஓகே...?'' - அனுமதி கேட்டான் அவன்.

அப்பாடா சோளக்கொல்லைப் பொம்மைக்கு அனுமதி கேட்கத் தெரிந்து விட்டது. புரிந்தால் சரி. இந்தப் பாட்டி எட்டு மணிக்கு மேல் அவளை இதுவரை எங்கும் செல்ல அனுமதித்ததே இல்லை. நீலவேணிப் பாட்டியின் எரிச்சலைக் கூட்டும் வேகத்தோடு 'சரி' என்றாள். எப்படியும் அவனிடம் பேசியாக வேண்டியதுதானே. எத்தனை சீக்கிரம் முடியுமோ, அத்தனை சீக்கிரமாக. நாட்கள் பறக்க வல்லவா செய்கின்றன!

கம்ப்யூட்டரில் 'மெயில்' செக் பண்ணிக் கொண்டிருந்த பாட்டியிடம் நிதினுடன் டின்னர் போறேன் என்றதும் நீலவேணிப் பாட்டி கண்களை உருட்டியதைப் பார்க்கச் சிரிப்பாக இருந்தது யுக்தாவிற்கு.

''இந்த வயசில் உன் அத்தையே ராத்திரி வெளியே போக பர்மிஷன் கேட்க இன்னும் பயப்படுவாள். வர வர உனக்குத் தைரியம், வாய் எல்லாம் நீளத்தான் செய்கிறது.''

''நிதின் கூட... பாட்டி... உங்க நிதின் கூட... அதற்குக் கூடவா பயப்படணும்!'' - அவளின் வார்த்தைகளில் கிண்டல் தொனித்தது.

உதட்டைக் கடித்தார் நீலவேணிப் பாட்டி.

''உன்னோட செல் நம்பர் அவனுக்கு யார் கொடுத்தது? டெய்லி பேசிட்டேயிருக்கே. ஏதும் ஏடா கூடமாக

நீ பேசிவிடவில்லையே! அவன் கூடக் கொஞ்சம் ஒத்துப் பேசு யுக்தா. நாவைக் கொஞ்சம் அடக்கி வாசி.''

பாட்டிக்கு நிதினிடம் ஏதாவது பேசி அவள் திருமணத்தை நடக்க விடாமல் செய்து விடுவாளோ என்ற பயம் இருப்பதைக் கண்டு திடுக்கிட்டுப் போனாள்.

இந்தத் திருமணம் நடக்க வேண்டும் என்பதில் பாட்டி முனைப்போடு இருப்பது யுக்தாவிற்குப் புரிந்தது.

ஆனால்... பாட்டி யுக்தாவையும் சரியாகத்தான் கணக்கிட்டு வைத்திருக்கிறார். அதனாலேயே திருமணம் முடியும் வரை அவனுடன் அவளைச் சந்திக்கப் பேச வைப்பதைத் தடுத்திருக்கிறார்.

மொத்தத்தில் சதுரங்கத்தில் ஜெயிப்பதற்காக ஜாக்கிரதையாகக் காய்களை நகர்த்துவதைப் போலப் பாட்டி விளையாடும் சதுரங்கக் காயா அவள்? அவர்கள் இஷ்டம்போல அவளை ஆட வைக்க அவர்களால் முடியுமா?

நீலவேணிப் பாட்டிக்குப் பதில் சொல்லாமல் சிட்டாகப் பறந்தாள் யுக்தா.

இன்றோடு நிதின் அத்தியாயத்திற்கு 'புல் ஸ்டாப்' என்றபடி குளித்து உடை மாற்றினாள் யுக்தா. 'சிக்' கென்று அவளின் வளைவு நெளிவுகளை அழகாகக் காட்டிய அந்த காப்பர் சல்பேட் நிறச் சுடிதார் ஒரு டிஸைனர் பீஸ். லோயர் கட் கூந்தலை ரப்பர் பாண்ட்டுக்குள் அடக்காமல் அப்படியே விரித்து விட்டாள். முகத்தில் மினுமினுக்கும் க்ரீம், கண்களில் காஜல், உதட்டில் மெல்லிய இளஞ்சிவப்புப் பளபளப்பு, சுவாசத்தை உறுத்தாத செண்ட். யுக்தா ரெடி.



பேரழகி யுக்தா!

வீட்டிலிருந்த சின்ன லைப்ரரியில் இருந்து வெளியே வந்த பைரவி, யுக்தாவைக் கண்டு கண்கள் விரித்தாள்.

"இந்த நேரத்தில் எங்கே வெளியே கிளம்பிட்டிருக்கே?'' கேள்வி கேட்டார் அவர்.

''அத்தே... அந்த சோ.கொ.பொ...'' என்று யுக்தா தொடங்க, புரியாமல் அவர் நெற்றியைச் சுருக்கவும், ''அதான் அந்தச் சோளக் கொல்லைப் பொம்மை என்னை டின்னர் கூட்டிட்டுப் போகுதாம். இன்னைக்கோட என் மேட்டரில் இருந்து விலகிடற மாதிரி கலங்கடிச்சிட்டு வரேன்!'' - என்று கண்ணடித்தாள் யுக்தா.

''இப்படித் தேவதை மாதிரி நீ டிரஸ் பண்ணிட்டுப் போனால், அவன் கலங்கித்தான் போவான்!'' - என்று லேசாகச் சிரித்த பைரவி தொடர்ந்து,

''எனக்கென்னவோ இந்தக் கல்யாணம் நடக்கும் என்றுதான் தோன்றுகிறது யுக்தா. அதுக்கு உன்னைத் தயார்ப் படுத்திக்கிறது நல்லதுன்னுதான் சொல்லுவேன். அம்மா செய்தால் நல்லதுதான் செய்வார்கள் யுக்தா. நம்பு.''

''போங்க அத்தே...'' என்று சிணுங்கியபடி நடந்தாள் யுக்தா.

அதற்குள் செல்போன் மணியடிக்க 'ஹலோ' என்றாள் யுக்தா.

''ஐ அம் வெயிட்டிங் அவுட் சைட். கேன் யு கம்?'' - அவன்தான். வந்து விட்டானாம்!

வீட்டில் பாட்டி அத்தை இருவரும் அவனை உள்ளே கூப்பிடு என்று பரபரக்க, ''ஆல்ரெடி டின்னருக்கு லேட்

ஆயிடிச்சு. 'பை' சொல்லியபடி வெளியே வந்த யுக்தாவிற்குக் கறுப்பு நிறத்தில் பட்டாகப் பளபளத்தபடி நின்ற பென்ஸ் கார் வியப்புதான். அவளைக் கண்டதும் டிரைவிங் ஸீட்டில் இருந்து இறங்கி வந்து அவன் ஒரு இதழ் வளைவுடன் 'ஹலோ' சொல்லியபடி கை குலுக்கிய ஸ்டைல் அதைவிட வியப்புதான். முன் இருக்கையில் அவனுக்குப் பக்கத்து சீட்டில் அமர, காரைச் சுற்றி வந்து கார் கதவைத் திறந்து விட்டது இன்னொரு வியப்பு.

''ஈ.சி.ஆர். ரோட்டில் ஒரு ரெஸ்டாரண்ட்டில் டேபிள் புக் பண்ணியிருக்கேன். ஃபுட் நல்லாயிருக்கும் அங்கே!'' - என்றபடி கன கம்பீரமாகக் காரைக் கிளப்பினான்.

''ஓ... மை காட்... எனக்கு அந்த ரெஸ்டாரெண்டில் போன தடவை சாப்பிட்டபோது அலெர்ஜி வந்து விட்டது. அந்த ஃபுட் ஸ்மெல் பிடிக்காமல் வாமிட்டிங்கே வந்தது.'' வேண்டும் என்று அவன் சொன்ன ஹோட் டலைப் பற்றிக் குற்றப்பத்திரிகை வாசித்தாள்.

அவனிடமிருந்து சில கணங்கள் பேச்சே எழவில்லை. வேகமாகச் சென்ற காரின் வேகத்தை மட்டும் குறைத் தான் பிறகு மெல்ல,

''ஓகே... ஓ.எம்.ஆர். ரோட்டில் ரட்லேண்ட்...''

''அந்த ஓட்டல் சாப்பாடு எனக்கு அசிடிட்டி கொடுக் கும். நோ...'' என்று மீண்டும் மறுத்தாள் யுக்தா.

''மௌண்ட் ரோட்... ஷவர்.''

''அய்யோ... எனக்குத் தந்தூரி ஐட்டமே பிடிக்காது. அந்த ஹோட்டல் அதுக்குத் தானே பேமஸ்!'' கையை ஆட்டி மறுத்தாள்.



நிதின் கண்கள் சாலையிலிருந்து மீண்டு அவள் புறம் திரும்பின. அவள் கையசைத்துப் பேசிய நாகரிகம், அவளுடைய கண்கள் பேசிய பாஷை ஆகியவற்றைக் கணக்கிட்டவன் கண்களில் நட்சத்திரங்கள் மின்னின. உதட்டைப் பற்களால் கடித்துத் திமிறிய சிரிப்பை அடக் கியபடி,

''ஓகே... சாரி... எங்கே போகலாம் சொல். எந்த ரெஸ்டாரெண்ட்...'' என்று குரலில் கேலி இழையோடக் கேட்க,

அப்பாடி... டியூப் லைட், மாங்கா மடையனுக்கு விஷயம் புரிந்துவிட்டது என்று இன்னும் சில பட் டங்களை அவனுக்கு அவள் மனதில் வாரியிறைத்தாள்.

''தாஜ் போகலாம். ஃபுட் ரொம்ப டேஸ்டியா இருக் கும்!'' என்று அவள் முடிவெடுத்தாள். அவள் முடிவே இறுதி என்பதை உணர வைப்பதற்காக.

அவன் சின்ன மீனைப் போட்டுப் பெரிய மீனைப் பிடிக்கும் மேதாவி என்பது புரியாமல்.



# 6

**கா**ரை வாலட் பார்க்கிங்கில் விட்டுவிட்டு இருவரும் ஜோடியாக ஓட்டலுக்குள் நுழைந்தனர். மங்கலான மஞ்சள் நிற ஒளியில் ரெஸ்டாரெண்ட் தங்கமாக

ஜொலித்தது. காதலர்கள் அமர்வதற்கு வசதியான இருக்கை போல உட்புறமாக அமைந்திருந்த இடத்தை ஹோட்டல் ஊழியர் தேர்ந்தெடுத்து இவர்களுக்காகக் கொடுத்தனர்.

அவளுக்குப் பிடித்த உணவு வகைகளையும் கேட்டு, அவன் உணவு ஆர்டர் செய்தான்.

அவரவர் தட்டுகளில் விளம்பிவிட்டு பேரர் நகர்ந்து விட,

சாப்பாடு பற்றி கமெண்ட் அடித்துக் கொண்டு சாப்பிட்டு மேஜை நாகரிகத்துடன் இருவரும் சாப்பிட்டனர். யுக்தா மனதுக்குள் ஒத்திகை பார்த்துக் கொண்டிருந்ததை நிதின் அறியவில்லை.

மெல்லிய மியூசிக் பின்னணியில் அவள் நினைப்பதை முழு வீச்சோடு பேச முடியுமா என்று கொஞ்சம் யோசனையோடு யுக்தா சாப்பிட்டுக் கொண்டிருந்தாள்.

மெயின் கோர்ஸ் முடிந்தவுடன்,

''சொல் யுக்தா, என்ன விஷயம்? என்னிடம் சொல்வதற்காக உன் மனதில் நீ ஒத்திகை பார்க்கும் மேட்டர் என்ன?'' - என்று நிதானமாக யுக்தாவின் கண்களை ஊடுருவியபடி கேட்க, ஏதோ பெரிய மகாராஜா மாதிரி அவன் பேசிய தோரணையில் யுக்தா எரிச்சலில் வெடித்தாள்.

''எனக்கு உன்னை மணக்கத் துளிகூட இஷ்டமில்லை. கல்யாணத்தை உடனே நிறுத்திவிடு!'' என்றாள். அவள் பேச்சில் அவன் விழிகள் பளிச்சிட்டன.

வினாடிக்குள் அதன் பாதிப்பு மறைந்து, நிதானமாக, மிகச் சாதாரணமாக அவன் கேட்ட,



''ஏனோ...''வில் யுக்தாவின் கோபம் அலை அலையாகப் பொங்கியது.

நமக்கு என்ன பொருத்தம் இருப்பதாக நினைப்பு மிஸ்டர்? உங்களுக்கு என்னைப் பிடித்தால் மட்டும் போதாது? எனக்கும் உங்களைப் பிடிக்க வேண்டும். புரிகிறதா...?'' - என்று நிறுத்தி அவன் கண்களை நேருக்கு நேர் பார்த்தவள், அவன் கண்களின் கூர்மையில் அவளறியாமல் சட்டென்று கண்களைத் தழைத்தபடி,

'எனக்கு உங்களைப் பிடிக்கவில்லை!' என்று ஒரே போடாகப் போட்டாள்.

அவன் கண்களில் மீண்டும் மின்னல் வெட்டியது. அதைத் தவிர்த்து வேறு எந்த முக மாற்றத்தையும் அவளால் கண்டு பிடிக்க முடியவில்லை. ஆனால் தொடர்ந்து,

''ஏன்? வேறு யாரையும் பிடித்து விட்டதா?'' - அவளை உசுப்பேற்ற அவன் யோசிக்காமல் கேட்ட கேள்வியில் உண்மை இருப்பதை உணராமல்தான் கேட்டான்.

அதற்குள் சர்வர் 'டெசர்ட்' - என்று பாதாம் அல்வா, ப்ரூட் சாலட், ப்ரைடு ஐஸ்கிரீம் என்று விளம்ப, சில நிமிடங்கள் அவர்களிடம் பேச்சில்லை. சர்வர் நகர்ந்தவுடன் கோபமாகப் பேச வாயைத் திறந்த யுக்தாவை, அவன் கை சைகையால் உயர்ந்து, சாப்பிட்டு முடித்து விட்டுப் பேசு என்றது.

அவன் சொன்னால் இவள் கேட்பாள் என்றா நினைத்தான்? மாங்கா மடையன்!

''எனக்கு உங்களைப் பிடிக்கவில்லை என்ற ஒரு காரணம் போதும். அதோடு... எனக்கு என்று ஒருவன் காத்திருக்கிறான்.'' அவள் பதிலில் அவன் புருவம் நெரிந்தது.

''யார் அவன்?'' அவன் குரலின் உறுமலில் திகைத்தாள் யுக்தா.

அந்த உறுமலின் அர்த்தம் என்ன?

ஆனால் அவனின் உறுமல் அவளுக்குப் பயத்தை விட ஒரு வித ஆச்சர்யத்தைத்தான் கொடுத்தது. இதற்கொன்றும் குறைச்சலில்லை... என்று யுக்தாவால் மனசினுள் கேலி செய்யாமலிருக்க முடியவில்லை.

ஆனால் அவனின் உறுமல், அவளுடைய மூளைக்கு மணி அடித்தது.

''அவன் இங்கில்லை. லண்டனில் மேற்படிப்புக்காகப் போயிருக்கிறான். உனக்காக யுக்தா காத்திருப்பாள். நீ படித்து முடித்து விட்டு வா என்று பாட்டி அவனுக்கு நம்பிக்கையூட்டியிருக்கிறாள் தெரியுமா? இப்போது திடீரென்று உங்களை மணக்கச் சொன்னால், இது ஏமாற்று வேலையில்லையா?'' என்று பேசிய யுக்தாவின் குரல் தழைந்தது. அவனிடம் மனதில் உள்ளதைச் சொல்லிவிட்டபடியால், திருமணத்தை நிறுத்தி விடுவான் என்று அவளுக்குத் தோன்றியது. அவள் மனதில் நிம்மதி அவளறியாமல் பரவுவதை உணர்ந்தாள். வேறொருவனை விரும்புபவள், அவனை வெறுப்பவள் கல்யாணத்தை நிறுத்த இந்த இரண்டு காரணங்கள் தான் பிரதானம் என்று உறுதியாக நம்பினாள் யுக்தா.

இந்தக் கல்யாணம் நடப்பதற்கு நிறையக் காரணங்கள் இருந்ததை யுக்தா அறியவில்லை.



பிரச்சனை தீர்ந்தது என்று மெல்லக் கண்களை உயர்த்தி அவனைப் பார்க்க, அவன் முகத்தின் கடினம் யுக்தாவை முதல் தடவையாகப் பாதித்தது. யுக்தா கணித்திருந்ததைப் போல, அவள் பேச்சில் பயப்படுபவனாகவோ, அதில் இருந்த நியாயத்தை உணர்பவனாகவோ அவன் இல்லை என்பது அவளுக்குப் புரிந்து போயிற்று. நெஞ்சு 'திக்' என்று ஒரு நொடி அதிர்ந்தது.

''படிக்கிற வயதில் முளைக்கிற காதல் கத்தரிக்காயில் எல்லாம் எனக்கு உடன்பாடில்லை!'' - கை முஷ்டி இறுக முகம் சிவக்க அவன் முணுமுணுத்தது அவளுக்குக் கேட்க, யுக்தா வாயைப் பிளந்தாள்.

அவள் நினைத்தது போல் எதுவும் நடக்கவில்லையே?

சுலபத்தில் இவனை அடக்க முடியாது போலிருக்கிறதே! எப்படி இந்த விஷயத்தைக் கையாளப் போகிறாள்?!

அந்தச் சமயத்தில் பலவிதமான சிந்தனைகள் அவள் மனதில் வந்து போயின.

கடவுளே... உதவி செய்.

அதே நேரம் ஒருவன் செல்போனில் பேசிக் கொண்டே இவர்களைக் கடந்து சென்றான். சின்ன 'மினுக்' என்ற ஓசை மிக மெல்லியதாகக் கேட்க, சடாரென்று திரும்பினான் நிதின்.

இவர்கள் இருவரையும் ஒரு சேரப் படம் எடுத்தான் என்பது உடனே புரிய ஸ்பிரிங் போல் எழுந்து இரண்டெட்டு வைத்து அவன் மேல் கை வைக்க, உடனே

அவன் திமிறி ஓட நிதின் தன் செல் போனை இயக்கினான்.

"மோசஸ்! ப்ளூ ஸ்ட்ரைப்ஸ் டீ சர்ட் போட்டு ஒல்லியான ஒருத்தன் வெளியே மெயின் என்ட்ரன்ஸ் வழியே ஓடி வருவான். அவன் செல்போனைப் பிடுங்கிடு."

யுக்தா மிரள மிரள விழித்தாள்.

சில நொடிகளில் நடந்த விஷயம் அவளுக்குப் புரியவில்லை.

ஆனால் நிதினின் பாடி லாங்வேஜ் அவள் நெஞ்சை உதற வைத்தது. நிமிர்ந்த நெஞ்சு, யாருக்கும் கலங்காத அந்தத் திமிர் கண்கள், அழுந்தின இறுக்கமான உதடுகள். இந்த முகம் அவள் இதுவரை பார்த்திராதது.

நொடியில் வெகு சாதாரணமாக, "தென்..." என்று பேச, அவனின் செல் அழைத்தது. எடுத்துப் பேசினான் நிதின்.

"மோசஸ்... பிடித்து விட்டாயா... ஓகே... அவனுடைய செல்போனில் என்னையும் யுக்தாவையும் சேர்த்துப் படம் எடுத்து வைத்திருக்கிறான். அதை 'டெலிட்' பண்ணி விடு. அவன் யார் என்ன என்று விவரம் அறிந்து விட்டு விடு. பிறகு பார்த்துக் கொள்ளலாம்." - வைத்து விட்டான் நிதின்.

"என்ன நடக்குது இங்க...?" கண்களில் சிறு சிவப்புடன் கோபத்துடன் யுக்தா கேட்க,

"என்னோட ப்ரைவேட் விஷயம் பப்ளிஸைஸ் ஆவது எனக்குப் பிடிக்காது!" என்றான் அவன் அலட்சியமாக.

யுக்தாவின் கண்களில் கேலி திரும்பியது. ஆமாம் இவன் பெரிய ராஜா. இவன் ப்ரைவேட் லைஃப்லதான்



எல்லாரும் குறி வைக்கிறாங்க? அய்யோ... இவன் அலப்பிரைக்கு ஓர் அளவில்லையா? தன்னை அடக்கிக் கொண்டு,

"அது... யாரு மோசஸ்... - நம்ம கூட யாரும் வரவில்லையே. உங்க உதவிக்குன்னு அவன் எங்கிருந்து குதித்தான் திடீரென்று?"


"என்னோட... செக்யூரிட்டி... என்கூட எப்போதும் வருவான். அவனுக்குத் துணையாக டார்க், மியான்னு இன்னும் இரண்டு பேர்... நம்ம கார் பின்னாடி ஸ்கார்பியா வண்டியில் வந்தார்கள்!" - என்று கண்கள் சிமிட்டியபடி அவன் சொல்ல,

'பக்' என்று தன்னை மறந்து அடக்க முடியாமல் சிரித்து விட்டாள் யுக்தா. என்னம்மா 'உதார்' காட்டுகிறான்.

அவளின் சிரிப்பைக் கண்கள் இடுங்க அவன் ரசித்ததை யுக்தா கவனிக்கவில்லை.

அதே சமயத்தில் 'உன்னைப் பார்த்த பின்பு நான் நானாக இல்லையே!' என்று ஹோட்டலில் மெல்லிய இசை பேக்ரவுண்ட் மியூசிக் வாசித்தது.

நிதின் கண்கள் இரகசியப் பளபளப்பில் மின்னின.



# 7

**சா**ப்பிட்டு முடித்தவுடன், பில்லைக் கொண்டு வந்து கொடுத்த பேரரிடம் 'கிரெடிட் கார்ட்' கொடுத்தபடி

கண்களைச் சுழல விட்ட நிதின் கண்கள், சற்றுத் தொலைவில் ஹோட்டலின் மறுமுனையில் பஃபேயை நோக்கிச் செல்பவரைக் கண்டதும் கூர்மையானது.

சட்டென்று அவன் முகத்தில் அதுவரை தெரிந்த மந்தகாசம் மறைந்து, ஏதோ பிடிபட்டாற் போன்று ஒரு தோற்றத்தை உருவாக்கியது. அவன் முக மாற்றத்தைக் கவனித்த யுக்தா, அவன் கண்கள் எதைக் கண்டு கலக்கமுற்றன என்று திரும்பிப் பார்த்தாள். ஆனால் அவளுக்குப் புரியவில்லை.

"என்ன விஷயம்? என்ன ஆச்சு? நொடிக்கொரு தரம் முகம் மாற்றுகிறீர்கள்!" என்று விளங்காத பாவனையுடன் அவள் கேட்க,

சில நொடிகள் அவன் பார்வை அவளிடம் ஒரு ஆராய்தலோடு பாய்ந்தது. கண்களில் தீவிரம் பிறந்தது. அவன் பார்த்த பார்வையின் கூர்மை அவள் நெஞ்சு வரைக்கும் தைக்கும் வேகத்தில் அவள் நெஞ்சைக் குறி வைப்பதை உணர்ந்த யுக்தா ஒரு விரைப்புடன் அவனை முறைத்தாள்.

தொண்டையை லேசாகக் கனைத்தபடி,

"அங்கு நிற்பவர் என் மாமா. இந்தக் காதல் கல்யாணம் என்பதெல்லாம் சுத்தமாக அவருக்குப் பிடிக்காது. அதுவும் அவர் வளர்த்த பிள்ளை இப்படி இரவு நேரத்தில் ஒரு அழகிய பெண்ணுடன் டின்னர் சாப்பிடுகிறேன் என்றால் அதிர்ந்து விடுவார். அவர்தான் எனக்கு எல்லாம்..." என்றபோது அவன் கண்களில் தெரிந்த மென்மையைக் கண்டு யுக்தாவிற்கு ஆச்சர்யமாக இருந்தது.



"லண்டனிலிருந்து மாமா வருவதாகச் சொல்லவேயில்லை. ஏன் என்னிடம் தொடர்பு கொள்ளவில்லை?" என்று தனக்குள் கேள்விகளை அவன் தொடுத்தான்.

சரியான பயந்தாங் கொள்ளியாக வேறு இருப்பான் போலயிருக்கே.... யுக்தாவிற்கு நக்கலாக இருந்தது.

"டின்னர் சாப்பிடுவதைப் பார்த்தாலே அதிர்ந்து விடும் மாமா, நீங்கள் என்னைக் கல்யாணமே செய்து கொள்ளப் போவதை அறிந்தால் என்ன ஆவார்...?" குரலில் கொஞ்சம் கிண்டல் கலந்து யுக்தா கேட்க,

முகத்தை ஒரு கையால் தாங்கிப் பிடித்தபடி அவன் தன் முகம் மறைத்திருந்தான்.

மாமா பார்க்கும் முன் கிளம்பிவிட வேண்டிய அவசரம் அவன் முகத்தில் யுக்தா கண்டாள்.

அவன் நெற்றி யோசனையாகச் சுருங்க, யுக்தாவிற்குள் மின்சாரம் பாய்ந்தது போல் இருந்தது.

"உங்க வீட்டுப் பெரியவர்களுக்குத் தெரியாமலா கல்யாணப் பேச்சு பேசப்பட்டிருக்கிறது..." ஆனால் ஏன்? அவளுக்கு அதிர்ச்சியாக இருந்தது. என்ன விந்தையான கல்யாணம்! மணப் பெண்ணுக்கு இஷ்டமில்லை. மாப்பிள்ளை வீட்டிற்குக் கல்யாண விஷயமே தெரியாது? பாட்டி என்ன விளையாடுகிறாரா? இல்லை, இவன் விளையாட்டுக் காட்டுகிறானா? இந்தக் கல்யாணத்தின் பின்னணி தான் என்ன? யுக்தாவின் தலை கிறுகிறுத்தது.

அவள் கேள்விக்கு நிதின் பதில் சொல்லாமல், "நாம் கிளம்புவோமா...?" என்று மறு பக்கமே திரும்பாமல் அவன் பேச,

யுக்தாவிற்குக் கோபம் வந்தது.

இந்தக் கோபம் தந்த வேகத்தில்,

"ஹலோ... இந்தக் கல்யாணத்தின் நோக்கம் என்ன? உங்கள் வீட்டுக்குக் கூடத் தெரியாமல் திருட்டுக் கல்யாணம்... ஏன்?"

"ஏன்னா... ஏன்...?" என்று இழுத்தவன் பட்டென்று போட்டுடைத்தான்.

"உன்னைக் கண்டதும் காதல் பிறந்து விட்டது. வீட்டில் சொல்லிப் புரிய வைக்க முடியாது. அவர்கள் வேண்டாம் என்று சொல்லி விட்டால் என்னால் மேற் கொண்டு எதையும் செய்ய முடியாது... போதுமா? கிளம்பு யுக்தா..."

அவனின் பதிலில் அவளுக்கு உதடு துடித்தது.

"பாட்டியை எப்படிச் சரிக் கட்டினீர்கள்? அவ்வளவு சுலபமாக உங்கள் விருப்பத்திற்குப் பாட்டியைச் சம்மதிக்க வைத்தது எப்படி? அதுவும் பாட்டிக்கு என் மனம் தெரியும். அப்படியிருந்தும்..."

"அது பாட்டியிடம் தான் நீ கேட்க வேண்டிய கேள்வி. என் விருப்பத்தை உன் பாட்டியிடம் சொன்னேன். உடனே 'தொப்' என்று அவர்கள் உன்னை என் மடியில் போட்டு விட்டார்கள்."

தன் மாமாவை எதிர்பாராமல் பார்த்ததில் இருந்த தடுமாற்றத்தில் அவன் அவசர அவசரமாகச் சொன்ன அலட்சியமான பதிலில் யுக்தாவின் முகம் அவமானத்தில் சிவந்தது.

இவனைத் தண்டிக்க வேண்டும். எப்படியும் இவனை இவள் திருமணம் செய்து கொள்ளப் போவதில்லை.



அந்த விஷயத்தில் அவளின் உறுதி மேலும் மேலும் இறுகியது. பல மடங்கு வேகமாக மூளை வேலை செய்ய, முடிவு செய்து விட்டாள் யுக்தா.

இவனை மாட்டி விட வேண்டும்.

அந்த மாமாவைப் பார்த்து நடுங்குகிறானே.

மாட்டி விட வேண்டியதுதான்.

அவளின் நோக்கம், அவள் எழுந்த வேகத்திலேயே நிதினுக்குப் புரிந்து விட்டது. யுக்தா அவன் மாமனின் புறமாக நடக்க எத்தனிக்க, அதைத் தடுக்கும் முயற்சியாக அவன் அவள் கரங்களைப் பிறர் கவனத்தை ஈர்க்காமல் இழுக்க, யுக்தா நிலை தடுமாறி அவளின் துப்பட்டாவின் சலங்கை குஞ்சலங்கள் கால்களில் சிக்க, 'தொப்' என்று அவன் மடியில் விழுந்தாள்.

தற்செயலாகத் திரும்பிய அந்த மனிதன், நிதினின் மாமாவின் கண்கள் அந்த நிகழ்ச்சியைக் கண்ணுற்றன. அதிர்ந்து போனார். நிதினின் கைகளில், பெண்?!!!!

நிதின் அணைப்பில் திகைத்து இருந்த யுக்தா, அந்த மாமாவின் பார்வை வளையத்தில் தாங்கள் இருவரும் விழுந்ததைக் கண்டாள். இந்த வாய்ப்பை நழுவ விடக் கூடாது, நழுவ விடக்கூடாது என்று மூளை வேகமாக எச்சரிக்கை மணியடித்தது. இது கோல்டன் ஆப்பர்சூனிட்டி. கடவுள் அவள் பிரார்த்தனைக்குத் தந்த வாய்ப்பு... கடவுளே... சிட்டுக்குருவிச் சிறகாய்ப் படபடத்த நெஞ்சத்துடன் தன்னைச் சமாளித்துக் கொண்டு 'விசுக்'கென்று எழுந்தாள். பின் அதே வேகத்துடன் கையை வேகமாக அவன் கன்னத்தில் வீசி... அவனை அறைந்தே விட்டாள்.


அவன் கண்கள் எஃக்கின் உறுதியில் இறுகின. ஆனால் யுக்தாவின் ஆட்டம் நின்றபாடில்லை.

''யூ ஸ்கௌண்ட்ரல், எவ்வளவு தைரியமாக என் கையைப் பிடித்து இழுப்பாய்? பெண் பித்தன்! நீ தேடிப் போகும் பெண்ணைப் போன்றா என்னை நினைத்தாய்? உன் வேலையை என்னிடம் காட்டாதே... ஜாக்கிரதை...'' என்று கிறீச்சிட்டுக் கத்தி விட்டு அவனை உதறிவிட்டுத் திரும்பிப் பார்க்காமல், நெஞ்சு பதற்றத்தில் வேக வேகமாக ஏறியிறங்க நடந்தாள் யுக்தா.

யுக்தா போட்ட சப்தத்தில் ஹோட்டலில் நிறையப் பேர் கண்கள் அவர்கள் புறம் திரும்பின.

மாமாவின் முன் இத்தனையும் அரங்கேறிய திகைப்பில் செயலற்றுப் போனான் நிதின்.

ஒற்றை விரலால் கோபமாக அவனை அழைத்தார் அவர்.



# 8

அந்த இரவின் தனிமையில், யுக்தா வேகமாக நடந்தாள். ஹோட்டலை விட்டு வெளியே வந்தும் ஆட்டோ ஒன்றும் கிடைக்காதது அவளுக்குப் பெரிய விஷயமாகவே படவில்லை. பல நாட்களுக்குப் பிறகு நெஞ்சில் நிம்மதி விரிந்தது. அப்பாடா... என்று நிம்மதிப்



பெருமூச்சு வேறு கிளம்பியது. இதழ்களில் புன்னகை தவழ்ந்தது. நடந்த நிகழ்ச்சியை அசை போட்டபடி நடந்த யுக்தாவிற்குக் கொஞ்சம் கூட குற்ற உணர்ச்சியே இல்லாதது ஆச்சர்யம்தான். திருப்பிக் கை ஓங்கக்கூடத் தைரியமில்லாத கோழை. அரண்டு போயிட்டானே? இனி என்னிடம் வாலாட்ட நினைப்பானா அந்தக் கோழை. நெஞ்சு அவனைப் பரிகசித்தது. பாட்டிதான் பாவம். கல்யாணம் நின்று விட்டது என்பதை எப்படி ஏற்றுக் கொள்வார்களோ? இதய வலி நிஜமா? நாடகமா? நிதின் கதையை எப்படிச் சொல்வது...

சர்ர்ர்ர்................. என்று பக்கத்தில் எதிர் பாராத வண்ணம் உராய்ந்தபடி வந்து நின்ற கறுப்பு நிறக் காரைக் கண்டதும் சற்று அதிர்ந்து நின்றாள். காரின் மறு பக்கத்தில் இருந்து இறங்கி அவளை நோக்கி வந்த நிதினைக் கண்டதும் அப்படியே அவள் கண்கள் சிப்பியாக விரிந்தன. நெஞ்சுத் துடிப்பு வேகமானது.

அவனைச் சிறிதும் எதிர்பார்க்கவில்லை. அவன் மாமாவை எப்படி அவ்வளவு சீக்கிரம் சமாளித்தான்? அவன் தப்பிக்கவே முடியாதபடி பெரிய குண்டு போட்டதாக அல்லவா நினைத்தாள்.

''ஏறிக் கொள்,'' - என்று அவளுக்காகக் காரின் கதவைத் திறந்து விட்டவன், அவள் அசைவற்று நிற்பதைக் கண்டு சற்றும் நாகரிகம் இல்லாமல் அவளைக் கை கொண்டு காரின் உட்புறமாகத் தள்ளிக் கதவை மூடினான்.

''இரவில் என்னை நம்பி என்னுடன் வந்த பெண்ணைப் பாதுகாப்பாக மீண்டும் வீடு சேர்க்கும் வரை என் பொறுப்பு முடியவில்லை!'' - அவள் பக்கத்தில் டிரைவிங் சீட்டில் அமர்ந்தபடி தாடை இறுகப் பேசினான் அவன்.

கார் சீறிப் பாய்ந்தது.

அவன் கோபத்தைக் காரில் காட்டுகிறானா? தன் நிலைக்கு வந்த யுக்தா,

''நான் உங்களுடன் வர மாட்டேன். நிறுத்துங்கள் காரை!'' - என்று ஆணையிட்டாள்.

''என்னை அடித்துவிட்டுச் செல்லும் உன் வாழ்க்கை இனிச் சுலபம் என்றா நினைத்தாய்? நான் யார் என்பது தெரியுமா உனக்கு? என் மேல் கை வைக்க உனக்கு என்ன தைரியம்? மை காட்... யூ ஆர் டூ மச்...'' - என்று அவன் கர்ஜிக்க, யுக்தாவிற்கு முதன் முறையாக நெஞ்சின் மூலையில் சின்னதாய்ப் பயம் முளைத்தது.

அவனின் கர்ஜனையில் சிங்கத்தின் முகவரி தெரிந்தது!

இவன் யார்?!

இவள் நினைத்தது போல் இவன் சோ.கொ.பொ. இல்லை என்பது இவனிடம் தனிமையில் பேசிய சில நிமிடங்களில் புரிந்துதான் போனது. ஆனால் ஏற்றுக் கொள்ள மனமில்லை.

காரில் ஒரு சப்தம் இல்லை. அந்த நிசப்தம் அவளுக்குள் பயத்தைக் கூட்டியது.

பத்து நிமிடத்தில் 'ராக்கெட்' வேகத்தில் காரை 'யுக்தா' வீட்டின் முன் டயர் கிறீச்சிட நிறுத்தினான். அவர்கள் வீடு வந்து விட்டார்கள் என்று வீட்டில் உள்ளவர்களுக்குத் தெரிய வைப்பதற்கா இந்த 'கிறீச்' சத்தம் என்று கோபத்துடன் யுக்தா ஒரு வார்த்தைகூட அவனிடம் பேசாமல் காரிலிருந்து இறங்க, கூடவே அவனும் இறங்கினான்.



இவன் ஏன் இறங்குகிறான் என்று யுக்தா யோசிக்கும் போதே, அவன் கை நீண்டு அவளின் இடுப்பை வளைத்து, காற்றுகூடப் புக முடியாதபடி அவளைத் தன்னுடன் சேர்த்து அணைத்து,

''ஹோட்டலில் நீ செய்த காரியத்திற்கு... இனி நீ எது தொடங்கி வைத்தாலும் முடிவு என்னுடையது!'' - என்று அவள் காதில் தெளிவாக முணுமுணுக்க,

அலமலந்து போனாள் யுக்தா.

கொஞ்சம் கூட அசைய முடியாத நிலையில் அவளால் அவனை எதிர்க்கவோ, பிடித்துத் தள்ளவோ முடியாத நிலை.

அவனின் சூடான மூச்சுக் காற்று அவளின் வெண் கழுத்தில் உராயக் கூசிப் போனாள் யுக்தா.

''யுக்தா...'' என்று பாட்டியின் அழைப்புக் குரல் கேட்க,

அதற்காகவே காத்திருந்தது போல்,

நிதினின் உதடு யுக்தாவின் உதட்டில் அழுத்தமாக ஒரு முத்தத்தைப் பதித்தது.

ஹைவோல்ட்டேஜ் ஷாக் அடித்த அதிர்ச்சி யுக்தாவிற்கு. கலவரத்தில் நெஞ்சு தடதடவென்று குதிக்க, விரல்கள் நடுங்க நின்ற யுக்தாவின் அதிர்ச்சியைச் சொல்ல வார்த்தைகளே இல்லை. மயக்கம் வராத குறை! அவள் பெண்மைக்கு அத்து மீறி நேர்ந்த முதல் தீண்டல்! கோபத்தில் உதடு துடித்தது.

அவன் விலகிய பின்பும், விழுந்து விடுவோமோ என்று அவனைப் பற்றியிருந்த யுக்தாவின் கை அவன்

சட்டையிலேயே இருக்க, அந்தக் கைகளைப் பற்றித் தன் கைகளுக்குள் அடக்கினான். அவன் கண்கள் சிவந்த அவள் முகத்தில் மேய்ந்தன.

''குட் நைட் ஸ்வீட் ஹார்ட். திருமணத்திற்கு உன் முழுச் சம்மதத்தையும் பாட்டியிடம் சொல்லிடு!'' என்று அவள் கன்னத்தைத் தட்டியபடி வேகமாகச் சென்று விட்டான்.

நொடிக்குள் நடந்த நிகழ்வில் யுக்தாவால் எந்த விதமான எதிர்ப்பையும் காட்ட முடியவில்லை. அதற்குள் போயே விட்டான் அவன்.

அவளைச் சோளக்கொல்லைப் பொம்மையாக்கிவிட்டுப் போயே விட்டான்.

மாங்கா மடையன் அவனா? அவளா?


கோழை அவனா? அவளா?

கண்களைக் கரித்துக் கொண்டு வந்தது யுக்தாவிற்கு.

வீட்டை விட்டுப் போகும் போது போன ஜோர் என்ன! வந்து சேர்ந்த கோலமும்தான் என்ன!

அவளால் தாங்கிக் கொள்ளவே முடியவில்லை.

அவள் தோற்று விட்டாளா?



# 9

தன்னறைக்குள் ஓடிப் படுக்கையில் கவிழ்ந்து குலுங்கிப் போனாள் யுக்தா. பின்னாடியே ஓடி வந்த பாட்டி



நீலவேணி, பேத்தியின் அழுகையில் உதடு கடித்து அப்படியே சிலை போல நின்றார்.

''பாட்டி... ப்ளீஸ் பாட்டி, இந்தக் கல்யாணம் வேண்டாம். நிறுத்திடுங்க!'' - அறையில் பாட்டியை உணர்ந்து, கன்னத்தில் கண்ணீர்க் கோடுகளுடன் யுக்தா முகத்தைத் திருப்ப,

நெஞ்சு உருகியது நீலவேணிப் பாட்டிக்கு.

மெல்ல நகர்ந்து யுக்தாவின் தலையைத் தடவியவர்,

''நீ விரும்புபவரை விட உன்னை விரும்புபவரைக் கல்யாணம் செய்து கொண்டால் வாழ்க்கை சுகப்படும் யுகி!'' - என்று மென்மையாகச் சிறு குழந்தைக்குச் சொல்வதைப் போலச் சொல்ல யுக்தா வெடித்தாள்.

''அவன் விரும்பிக் கேட்டான், அவன் விரும்பிக் கேட்டான்னு எப்போதும் இதே புராணம்தானா, பாட்டி. ரோட்டுலே போற எந்தப் பொறுக்கி கேட்டாலும் இந்தா தாலி, கட்டிக்கோ அவள் கழுத்தில் என்று சொல்லி விடுவீர்களா?'

''வாயைக் கொஞ்சம் அடக்கி வாசி... முதலில் நிதின் பொறுக்கியில்லை.''

''அப்ப அவன் யார்? இதுலே ஏதோ விஷயம் இருக்கு பாட்டி. எங்கிருந்தோ நிதின் குதிச்ச நொடியில் இருந்து நீங்கள் நீங்களாகவே இல்லை. இது புரியாமலிருக்கிறதுக்கு நான் ஒன்றும் சின்னக் குழந்தை இல்லை. உண்மையைச் சொல்லுங்க. பாட்டி ப்ளீஸ், உண்மையைச் சொல்லுங்க!'' - கோபத்தில் பேசத் தொடங்கின யுக்தா ஏறத்தாழக் கெஞ்சலில் முடித்தாள்.

''யுகி...'' என்று தொடங்கிய நீலவேணிப் பாட்டி குரல் கம்ம, வார்த்தைகள் தேடித் தடுமாற, பாட்டியை வெறித் தாள் யுக்தா.

''நான் முதன் முதலா நிதினைப் பார்த்தது சுமார் இரண்டு வருடங்களுக்கு முன் யுக்தா. ஆனால் முற்றிலு மாக வேறு ஒரு சூழ்நிலையில்தான் அவனைச் சந்தித் தேன். ப்ளைட்டில் நான் ஒரு ஒப்பந்தத்திற்காக டில்லி கிளம்பின சமயம், ப்ளைட்டில் நடு வானத்தில் எனக்கு மைல்ட் 'ஹார்ட்' அட்டாக் வந்தது. பிஸினஸ் கிளாஸில் எனக்கு அருகில் அமர்ந்திருந்தவன் நிதின். அவனுடைய பாட்டிக்கு வந்த அட்டாக் போலவே இருந்ததால், அவன் செய்த சரியான முதலுதவி என் உயிரைக் காப்பாற்றி விட்டது. அந்த முறை எந்த மீட்டிங்கும் நான் அட்டெண்ட் பண்ணவில்லை. ஏன் என்றால் என்னால் முடியவில்லை. டெல்லியில் உள்ள பெரிய ஹாஸ்பிடலில் வி.வி.ஐ.பி. ரூமில் மூன்று நாட்கள் நான் அப்சர்வேஷனில் வைக்கப் பட்டேன்.

''என் சார்பாக நம் கம்பெனி சம்பந்தப்பட்ட அத்தனை மீட்டிங்கும் அட்டெண்ட் பண்ணியவன் நிதின்.''

அதிர்ந்தாள் யுக்தா.

பாட்டிக்கு ஹார்ட் அட்டாக் வந்திருக்கிறது.

அவளுக்கு விஷயம் இன்றுதான் தெரிவிக்கப் பட் டிருக்கிறது. அத்தைக்குத் தெரிந்தால் அவ்வளவுதான். புரியாமல் இருந்த நிறைய விஷயங்கள் அவளுக்குப் 'பளிச்'சென்று புரிந்தன. இரண்டு வருடங்களுக்கு முன்பு... ஆக... விஷயம் இதுதான்.

இரண்டு வருஷமாக அன்பான பாட்டி கார்கோடனாக மாறியதன் மர்மம் இதுதான்.



பாட்டி யில்லாத வாழ்க்கைக்கு அவளைத் தயார்ப் பண்ணியிருக்கிறார் நீலவேணிப் பாட்டி.

பாட்டி.... பாட்டி... என்று எதற்கெடுத்தாலும் அவ ரையே சார்ந்திருந்த யுக்தாவைக் கடினமாக்கியிருக்கிறார். சின்ன வயசிலேயே ஆபீஸ் நிர்வாகத்தில் அவளைப் புகுத்தி வாழ்க்கையைக் கற்றுக் கொடுத்திருக்கிறார். கண்கள் கரித்தன யுக்தாவிற்கு.

''அதனால்தான் என்னை ஆபீஸில் நீங்கள் இழுத்து விட்டு, வேலை கற்றுக் கொள்ளச் சொன்னீர்களா? கார ணத்தோடு சொல்லியிருக்கலாமே, பாட்டி? தேவையில் லாமல் உங்கள் மேல் எவ்வளவு கோபமாகிப் போனேன், பாட்டி.''

''காரணத்தைச் சொல்லியிருந்தால், இந்த அளவு நீ முன்னேறி எதையும் எடுத்துச் செய்திருக்க மாட்டாய். எனக்கு முடிவு காலம் எந்த நேரமும் வரலாம் என்று அபாய மணி அடித்தவுடன் உன்னை நான் இல்லாத வாழ்க்கைக்குத் தயார் செய்ய வேண்டியது என் கடமை அல்லவா?

''நம் கம்பெனி மூழ்கிக் கொண்டே வருவது எனக்குப் புரிந்தது. புது இரத்தத்தோடு இளைஞர்களின் போட் டியை என்னால் சமாளிக்கவே முடியவில்லை. நஷ்டக் கணக்கில் கம்பெனியில் நம்பிக்கைக்கு உரியவர்கள் என்று நான் நினைத்த மனிதர்களே துரோகம் செய்தார் கள். எனக்குச் சிரமமாக ஷேர் ஹோல்டர்ஸ் நிறைய விஷ யங்கள்ல, என்னைக் கம்பெனியை விட்டு வெளியேற்றத் துடித்தார்கள். இந்த அழுத்தம் என் நெஞ்சை அழுத்தி அன்று அட்டாக்வரை கொண்டு சென்றது.

''ப்ளைட்டில் அட்டாக் வந்ததால் ஏதாவது மருந்து டீடெய்ல்ஸ் இருக்கும் என்று என் பெட்டியைத் திறந்து பார்த்திருக்கிறார்கள். அப்படி கம்பெனி ஃபைல், சி.டி., விசிட்டிங் கார்ட் எல்லாம் நிதின் கண்களில் பட்டிருக்கு. யுக்தா, நிதின் பற்றி இதுவரை சொல்லாதது...'' என்று நிறுத்தியவர், பின் தொடர்ந்து,

''நிதின் மும்பையில் பெரிய பிஸினஸ் பரம்பரையைச் சேர்ந்தவன். அதிலும் நிதினுக்கு உடம்பெல்லாம் மூளை. சின்ன வயதில் அவன் வைத்திருக்கும் கம்பெனியின் பெயரெல்லாம் நான் சொன்னால் நீ ஆச்சர்யப்பட்டுப் போவாய்... இதைப் பற்றி நிதினே உன்னிடம் சொல்லு வான். எனக்கு அனுமதியில்லை.

''கிட்டத்தட்ட அவனுடைய பாட்டி வயது உள்ள நான் இவ்வளவு சாமர்த்தியமாகக் கம்பெனியை நிர்வகிப்பதால் அவனுக்கு என் மேல் ஒரு நல்ல அபிப்ராயத்தை உண் டாக்கியது கடவுள் செயல். அவன் எனக்குக் கம்பெனியை மீட்க நிறைய அட்வைஸ் கொடுத்தான். இப்படித்தான் எங்கள் அறிமுகம் தொடங்கியது, யுக்தா.

''பிறகு ஒரு நாள் அவன் சென்னைக்கு ஏதோ பிஸினஸ் விஷயமாக வந்திருக்கிறேன் என்று போனில் கூப்பிட் டான். கம்பெனி ஷேர் ஹோல்டர்ஸ் மீட்டிங் என்று கிளம்பிக் கொண்டிருந்தேன். என்னைச் சூழ்ந்து இருக்கும் கம்பெனி பிரச்சனைகளுக்கு என்னால் முடிவு காண முடியவில்லை. எனக்குப் பதிலாக அவனைச் செல்ல முடி யுமா என்று என் தோழமை அடிப்படையில் கேட்டேன். அன்றுதான் உன்னை அவன் பார்த்தது.

''உன்னை யார் என்று கேட்டான்.



''சொன்னேன். அடுத்த நாள் மீண்டும் என்னைச் சந்தித்தான். வெளியாளாய் உங்களுக்குக் கம்பெனியில் உதவுவதற்கு, உரிமையுள்ளவனாக உதவினால் நன்றாக இருக்குமே என்று உன்னை மணம் செய்யச் சம்மதம் கேட்டான்.

''மூழ்குகிற கம்னெி உன் அப்பாவின் கம்பெனி, யுக்தா, என் பிள்ளையின் நினைவாக நான் வளர்த்தது!'' என்று சொல்லி, மகனின் நினைவில் வந்த கண்ணீரைச் சுண்டி யவர், தொடர்ந்து,

''பரத்தினால் என்ன செய்ய முடியும்? அமெரிக்காவில் ஏதாவது கம்பெனியில் மாதச் சம்பளக்காரனாக இருப் பான். கூடவே நீயும் போவாய். அவன் நல்லவன்தான் யுக்தா. உன் அப்பாவின் கம்பெனியைத் தூக்கி நிறுத்த ஒரு வாய்ப்புக் கிடைக்கும்போது என்னை என்ன செய்யச் சொல்கிறாய்? பைரவி தான் செய்யும் லாயர் தொழில் விட்டு வெளியே வர மாட்டாள். அவளை நான் எந்த விதத்திலும் தொந்தரவு செய்ய முடியவில்லை. அவ ளுக்கு இதுவரை நான் செய்த நல்லதே...! போதும்.''

''பாட்டி! கம்பெனியை ''நான்'' தூக்கி நிறுத்துவேன் பாட்டி. அதற்கு நிதினைத் திருமணம் செய்ய வேண்டும் என்ற அவசியம் இல்லை. ப்ளீஸ் புரிஞ்சுக்கோங்களேன். நானே நடத்துவேன்.

''நீங்க இனி நல்லா ரெஸ்ட் எடுங்க பாட்டி. ஸ்ட்ரெயின் எல்லாம் தேவையே இல்லை. எதற்கும் உங்க மெடிக்கல் ஃபைல் எல்லாம் என்னிடம் கொடுங்க. இனி உங்களுக்கு கம்பெனி பற்றின கவலை சுத்தமாக இருக்கக் கூடாது. இந்த மேட்டரில் இனி நான் நிதினை நுழைய விடப்

போவதில்லை. என் நீலவேணிப் பாட்டி, என் அப்பா கம்பெனி. அவனுக்கு இதிலென்ன விருப்பம் இருந்து விடப் போகிறது. உங்களுக்கு இதுவரை அவன் செய் திருக்கிற உதவிக்கு எவ்வளவு முறை நன்றி சொன் னாலும் தகும் பாட்டி. ஆனால்... எனக்கு நிதின் வேண் டாம் பாட்டி... கம்பெனிக்கும் எனக்கும் முடிச்சுப் போடா தீங்க பாட்டி...'' என்று அழுத்தமாகப் பேசிய யுக்தா, இனி என்னைக் கட்டாயப்படுத்த முடியாது என்பது போன்ற பாவனையுடன் பாட்டியின் அருகில் வர,

சற்றும் எதிர்பார்க்காத காரியம் ஒன்றைச் செய்தார் நீலவேணிப் பாட்டி...!

நீலவேணிப் பாட்டி சட்டென்று யுக்தாவின் கால்களில் சாஷ்டாங்கமாக விழுந்து விட்டார். விதிர் விதிர்த்துப் போனாள் யுக்தா!

வாயடைத்துப் போனாள். நடுங்கிப் போனாள்! வார்த்தைகளால் விவரிக்க முடியாத உணர்ச்சிகளுக்கு ஆளானாள் யுக்தா.

நீலவேணிப் பாட்டிக்கு கம்பெனி அவ்வளவு முக் கியமா?

அடுத்து வந்த நாட்களில் யுக்தா பிரமை பிடித்தது போல் இருந்தாள். பாட்டி செய்த காரியத்தை அவளால் ஜீரணிக்கவே முடியவில்லை. ஆனால் அதை மீறுவது என்பது அவளால் முடியாத காரியம். விஷயம் அத்தனை தூரம் வந்த பிறகு, யுக்தாவிற்கு நிதினுடனான கல் யாணத்தை ஏற்றுக் கொள்வதைத் தவிர வேறு வழியும் இல்லை. மனசே சரியில்லை யுக்தாவிற்கு. என்னதான் காரண காரியங்கள் இருந்தாலும் நீலவேணிப் பாட்டி



யுக்தா காலில் விழுந்தது அவளால் ஏற்றுக் கொள்ளவே முடியவில்லை.

மனசு இருந்த இடத்தில் பிரச்சனைகள் ஏறி உட் கார்ந்தது போலச் சதா சிந்தனையிலேயே இருந்தாள் யுக்தா. என்ன சமாதானங்கள் சொன்னாலும், பாட்டியின் செய்கையை அவளால் ஜீரணித்துக் கொள்ளவே முடிய வில்லை.

அந்தச் செய்கையை எதிர்ப்பது என்பது அவள் உயிர் உள்ள வரை முடியாத காரியம். பாட்டி அவள் வாழ்க் கையில் அத்தனை முக்கியமானவர்.

அதனால் இத்தனை நாட்களாக வதைப்பட்ட பிரச் சனைக்கு முடிவு வந்து விட்டது. ஆனால் அந்த முடிவை மனதில் ஏற்பது வெகு கஷ்டமாக இருந்தது யுக்தாவிற்கு.

மனதைச் சரிப்படுத்த, யோகா கிளாஸுக்குச் சென்று விட்டு வீட்டிற்கு வந்தபோது, வீட்டில் பேச்சுச் சப்தம் அதிகமாகவே கேட்டது. தன்னிடம் இருந்த சாவியால் கதவைத் திறந்து, ஃபேனை இயக்கியபடி சோபாவில் அமர்ந்து டி.வி.யை ரிமோட் கொண்டு இயக்கினாள். டெலிவிஷனில் சப்தத்தையும் மீறிப் பாட்டியின் குரல் அவள் செவியில் எட்டியது.

இப்பொழுதெல்லாம் வீட்டில் அடிக்கடி அத்தையும் பாட்டியும் விவாதம் செய்வதை அவளால் அறிய முடிந்தது. அச்சமயம் அவள் போனால், பேச்சு வார்த் தைகள் சட்டென்று அடங்கி விடும்.

இரண்டு மூன்று முறை அதற்கு முக்கியத்துவம் கொடுக்காமல் விலகியவள், தொடர்ந்து இதே போல், அவள் வந்தால் இருவரும் பேச்சை நிறுத்துவதும், இவள்

கேட்டால் கிடைத்த மழுப்பலான பதில்களும் அவளைச் சந்தேகிக்க வைத்தன.

என்ன பிரச்சனை? இரண்டு மூன்று நாட்களாக இந்த நிதின் கண்களில் காணவேயில்லை. அவன் ஏதேனும் புதுப் பிரச்சனையைக் கிளப்பிவிட்டு விட்டானா?

அவனுக்கு உண்மையில் என்னதான் வேண்டுமாம்?

எல்லாம் இந்தப் பாட்டியால்தான் பிரச்சனைகள் கிளம்புகின்றன என்பது யுக்தாவிற்குச் சந்தேகத்திற்கு இட மில்லாமல் புரிந்தது. வயதையும், அன்பையும் வைத்தே எல்லோரையும் தலையாட்டிப் பொம்மையாக்கி விட் டார்களே இந்தப் பாட்டி.

தன்னருகே அரவம் கேட்கவே நிமிர்ந்தாள் யுக்தா. பைரவி.

''என்ன அத்தே, ஏதேனும் பிரச்சனையா? ஒரே சப்தமாகக் கேட்டது.''

''பிரச்சனையா? ஜோக்கடிக்காதே. அம்மா இருக்கும் போது ஒரு பிரச்சனையும் வராதே, யுக்தா. அவர்களின் அன்பும் அனுபவமும் நமக்கு வாழ்க்கைப் பாடம்.''

பைரவி அத்தைக்கு, அம்மா என்றால் மறு வார்த்தை பேசத் தெரியாது. இருந்தாலும்... எதையோ சொல்லா மல் மறைக்கிறார்கள்.

''உங்கிட்டே கொஞ்ச நேரம் பேசலாமேன்னு வந் தேன், யுகி,'' என்றபடி யுக்தாவின் அருகில் அமர்ந்தார் பைரவி.

''இன்னைக்கு கோர்ட்லேயிருந்து வந்திட்டீங்க போல யிருக்கு அத்தை.''



''ஒரு கேஸ் ரொம்ப இழுத்துட்டு இருந்தது. ஃபைனல் இயரிங் இன்றுதான் முடிந்தது. கொஞ்சம் காம்ப்ளிகேடட் கேஸ். நிறைய ப்ரிப்பேர் பண்ண வேண்டியதிருந்தது. அதனால் இரண்டு மூணு நாளா வேற எதையுமே யோசிக்க முடியவில்லை. ம்ம்ம்... சொல்லு, யுக்தா. உன்னோட கல்யாண மேட்டர் எந்த அளவுக்கு முன் னேறியிருக்கு? நிதினோடு வேற எங்காவது வெளியே சுத்தினாயா? எனி திங் இன்ட்ரஸ்டிங்?''

யுக்தா ''உச்....'' என்று அசுவாரஸ்யமாக உச்சுக் கொட்ட,

''யுகி, நிதின் கூடத் திருமணம் உனக்குக் கொஞ்சம் கூட விருப்பம் இல்லாட்டா, அம்மாகிட்டே நான் பக்குவமா சொல்லட்டா?''

நல்ல அத்தை. யுக்தாவின் விழிகளில் கண்ணீர்ப் படலாம்.


என்ன விஷயம் என்றாலும், யுக்தாவிற்குக் கஷ்டம் என்றால், தாங்க ஓடி வந்து விடுவாள். அத்தை மட்டுமா? நீலவேணிப் பாட்டியும் அதே போல்தான்.

ஆனால் நீலவேணிப் பாட்டி செய்த விபரீதக் காரியம் அத்தையிடம் கூட யுக்தாவால் பகிர்ந்து கொள்ள முடிய வில்லை. அவர்கள் வயசுக்குப் பேத்தியின் காலில் விழ லாமா?

இமைக்காமல் தன்னையே பார்க்கும் யுக்தாவை, ''என்னடா, அம்மாவிடம் பேசட்டா?'' என்று மென்மை யாகப் பைரவி கேட்க,

''நோ...'' என்று அத்தையை இறுகக் கட்டிப் பிடித்துக் கொண்டாள் யுக்தா.

அவளின் முகக் கலக்கத்தையும், கண்ணீரையும் அத்தைக்குக் காட்ட மனமின்றித் தன் முகத்தை மறு பக்கம் திருப்பினாள் யுக்தா. குரலைச் சிரமப்பட்டுச் சீராக்கி, ''பாட்டி இஷ்டம் போல் நடக்கட்டும், அத்தே!'' என்றாள் முணுமுணுப்புடன்.



## 10

பரத்திற்கு மெயிலில் தன்னுடைய திருமணத்தைப் பற்றி எழுதி அனுப்பினாள். ஆனால் அடுத்த ப்ளைட் பிடித்து வந்து அவள் முன் நிற்பான் என்று கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை பாட்டியும் அத்தையும் வேறு, சமயத்திற்கு உதவ வீட்டில் இல்லை.

அவனுக்கு என்ன பதிலைச் சொல்வாள்? அவனை எதிர் கொள்வது மிகவும் கடினமாக இருக்கும் என்று யுக்தாவிற்குத் தெரியும். வந்தவுடனேயே வேகவேகமாகக் கேள்விகள் கேட்டவனை வரவேற்று சோபாவில் உட்கார வைப்பதே பெரிய விஷயமாக இருந்தது.

''இது என்ன பைத்தியக்காரத்தனம், யுகி. வாட்ஸ் ராங் வித் யூ?'' என்று ரௌத்திரம் காட்டினான்.

''நம் விஷயம் இனி 'பாஸிங் க்ளவுட்ஸ்' என்பது போல மறந்து போக வேண்டிய விஷயம் பரத்.''

''திரும்பவும் ஃபூல் மாதிரிப் பேசாதே யுகி. ஏன் இதை என்கிட்டே மறைத்தாய் யுக்தா? இன்னும் இரண்டு



நாட்களில் திருமணம் என்றால், திருமண ஏற்பாடுகள் கொஞ்ச காலமாகவே தொடங்கியிருக்கும், இல்லையா?'' அவன் கண்களில் சினத்தின் சிவப்பு.

''ம்ம்... உன்னைக் கலவரப்படுத்தாமல் நிறுத்தி விடலாம் என்று நினைத்தேன். ஆனால்... இனிச் சந்தர்ப்பம், சூழ்நிலை... இனி இந்தத் திருமணம் நடந்தே தீர வேண்டும் பரத்.''

''யுக்தா... கல்யாணம் ஒன்றும் நீ விரும்பி நடக்கவில்லை என்பது உன் முகம் பார்த்தால் தெரிகிறது. என்ன சந்தர்ப்பம்? என்ன சூழ்நிலை? பிடிக்காத திருமணத்தில் உன் வாழ்க்கையைப் பணையம் வைப்பதை நான் அனுமதிக்க மாட்டேன்!'' - அதற்குள் எமோஷனல் ஆகி அவன் கண்கள் கண்ணீரில் தழும்பின.

''இப்படி நினைச்சவுடன் லண்டனில் இருந்து வந்து விட்டாயே! லீவு கொடுத்தார்களா? ரொம்ப ஸ்டிரிக்ட்டான இன்ஸ்டிடியூஷனாச்சே. ஷார்ட் நோட்டீஸ்லே லீவு எல்லாம் கிடைக்குதா?'' அவனின் படிப்பு பற்றிப் பேச்சை மாற்றும் முயற்சியில் யுக்தா இறங்க, பரத் பெரிய குண்டைத் தூக்கிப் போட்டான்.

''லீவா...? அதை அப்ளை பண்ணி, அவங்க கொடுத்து வருவதற்குள் உனக்குக் கல்யாணமே முடிந்து இருக்கும். இது எமர்ஜன்சியில்லையா? சொன்னால் அவர்களுக்குப் புரியுமா?''

ஷாக் அடித்தது போல நின்றாள் யுக்தா.

''மை காட் பரத். என்ன காரியம் பண்ணி விட்டாய்? எவ்வளவு கஷ்டப்பட்டு ஸ்காலர்ஷிப்லே அந்த காலேஜ்லே

ஜாயிண்ட் பண்ணினே. இப்படிப் பொறுப்பில்லாமல் அங்க லீவு கூட அப்ளை பண்ணலைன்னா உன் 'ஸீட்' அவ்வளவுதான். திரும்பவும் கோர்ஸ் கம்ப்ளீட் பண்ண முடியாது.''

''இப்போ அதுவா முக்கியம்? படிப்பதே உன்னோடான சந்தோஷமான வாழ்க்கைக்கே. அதுவே இப்போ ஆட்டம் காணும்போது, படிப்பாவது ஒண்ணாவது!''

முட்டாள் தனமாகப் பேசும் அவனைக் கண்டு யுக்தாவிற்கு எரிச்சல் வந்தது.

ஆண் பிள்ளையாக லட்சணமாக, எடுத்த காரியத்தில் பொறுப்பைக் காட்டியிருக்க வேண்டாமா? அவனைப் பொறுத்தவரை அவள் முக்கியம்தான்.

ஆனால் படிப்பு எவ்வளவு முக்கியம்! அதைப் பாதுகாப்பது அவசியமல்லவா? அதைத் தொலைத்துக் காதலுக்காக ஓடி வருவது ஆண் மகனுக்கு அழகா?

அவனுடைய படிப்பை நம்பி, அதனால் அவன் பெறப்போகும் நல்ல வேலை, சம்பளம் நம்பி, அவன் வீட்டில் தாயும், தங்கையும் இருப்பதை மறந்து விட்டானா? காதலுக்காகக் குடும்பத்தை விடலாமா? இரண்டுக்கும் சரியான பேலன்ஸ் செய்ய வேண்டாமா?

கம்பீரமான ஆண்மகனுக்கு அது அழகல்லவே. இனி அவன் என்ன செய்யப் போகிறான் என்ற கவலை அவனுக்கிருந்ததோ இல்லையோ, யுக்தாவிற்கு அந்தக் கவலை மிகுந்தது.

அவளால் அல்லவா அவனுக்கு இந்த நிலை.

இவன் கிடைக்காமல் போகிறானே என்ற தவிப்பு ஒரு கடுகளவு கூட இல்லாதது வியப்பாக இருந்தது. இரு



வரும் காதலர்களாகக் கை கோத்துக் கொண்டு ஊர் சுத்தவில்லை. ஆனால் அவன் அவளைக் காதலிப்பதாக விருப்பத்தைச் சொன்னபோது, அவளுக்குப் பிடித்துத் தான் இருந்தது.

நல்லவன், நல்ல படிப்பாளி, பாடகன், கெட்டிக்காரன், ஆணழகன். பாட்டியிடம் சம்மதம் கிடைத்தது.

மேற்படிப்புக்கும் ஸ்காலர்ஷிப் கிடைத்தது. படிப்பு முடிந்ததும் வேலை கியாரண்டியும் இருந்தது.

நல்ல தோழனாக இருந்தான். அவனுடன் பேசப் பழக கம்பர்டபிளாக இருந்தது.

''யுக்தா... ஆன்ஸர் மீ! என்ன ஆச்சு? என் படிப்பைப் பற்றிப் பிறகு பேசலாம். ஏன் இந்தத் திடீர்க் கல்யாணம்? அதுவும் உனக்குப் பிடிக்காமல்?'' ஐ நோ யு லவ் மீ. வி ஆர் மேட் ஃபார் ஈச் அதர் யுகி.'' அவன் எழுந்து அவள் அருகில் அமர்ந்து அவள் கைகளைப் பற்றித் தன் மடியில் வைத்துக் கேட்டான்.

அவனின் கேள்வியில் இருந்த நியாயத்தில் யுக்தாவிற்குப் பதில் பேச முடியாமல் நெஞ்சடைத்தது. நேற்று வரை அவளையே மனதில் மனைவியாக வரித்தவனுக்கு, அதற்கு அனுமதி கொடுத்த யுக்தா பதிலளிக்கக் கடமைப் பட்டவளே. ஆனால் என்னவென்று சொல்வாள்? எப்படிச் சொல்வாள்? அப்படியே சொன்னாலும் இத்தனை வேகத்துடன் இருப்பவன் ஒத்துக் கொள்ள மாட்டான் என்று யுக்தாவிற்குப் புரிந்தது. அதில் இன்னும் பிரச்சனைகள்தான்

''இது என்ன சின்னப் பிள்ளைத்தனமாகக் கொஞ்சம் கூட யோசிக்காமல் நம் காதலை மறைத்து இது என்ன விளை

யாட்டு யுக்தா. ஐ டோண்ட் அண்டர்ஸ்டாண்ட்?'' என்று பரத் மீண்டும் கொதிக்க.

''அது... வந்து....'' - என்று யுக்தா வார்த்தைகளுக்காகத் தடுமாற, அவளுக்குப் பதில் கூறக் கஷ்டம் இல்லாமல், அங்கே சற்றும் எதிர்பாராமல் மூர்க்கத்தோடு வந்து நின்றான் சம்பந்தப்பட்டவன்.

''எங்கள் திருமணம் ஒரு விளையாட்டு இல்லை!'' - என்றான் வார்த்தைகளில் உஷ்ணத்தோடு.



## 11

நிதின்.

கடவுளே!

கார் சப்தம் கூடக் கேட்கவில்லையே!

எப்பொழுது வந்தான்?

ஏன்?

வீட்டுக்குள் அவன் வருவது இதுதான் முதல் முறை. அதுவும் சொல்லாமல் கொள்ளாமல். ஏன்?

வந்த நிதினின் கண்களில் முதலில் பட்டது யுக்தாவின் கைகள் வேறொரு ஆடவனின் கைகளுக்குள் சிக்கியிருந்தது.

அவனின் ஒற்றைப் புருவம் ஆராய்தலோடு ஏறியது. அதைத் தவிர அவன் முகத்தில் எந்த மாறுதல்களும்



தெரியவில்லை. சில நொடிகள் நீடித்த தாடை இறுக்கம் கூட மெய்யோ, பொய்யோ எனும்முன் தளர்ந்து விட்டது. ஆனால் யுக்தாவிற்குப் புரிந்தது. நிதினுக்கு இந்த நெருக்கம் பிடிக்கவில்லை என்பது புரிந்தது. அதுவரை பரத்தின் அருகில் பாதுகாப்பாக உணர்ந்த யுக்தாவிற்கு, நிதின் வந்ததும், நெஞ்சம் படபடத்தது. அவன் அருகில் நெருங்கினாலே அவளின் பெண்மை தன்னை உணர்வதை நெஞ்சுத் திடுக்கிடலுடன் உணர்ந்தாள் யுக்தா.

ஏன்?

மேலும் அதைப் பற்றி ஆராய முடியாமல், நிதினின் செய்கை அவளை ஸ்தம்பிக்க வைத்தது.

அவள் அருகில் வந்தவன், ஒரு கையால் அவளின் கைகளைப் பற்ற... வேறு எந்தத் தூண்டுதலும் கண்களில் கேள்வியுடன் இல்லாமல், எழுந்து நின்றாள், யுக்தா.

மறு கையால் தன்னுடைய பேண்ட் பாக்கெட்டில் கை விட்டுச் சின்ன வெல்வெட் பெட்டியை எடுத்தவன், ஒற்றை விரலால் அனாயசமாகப் பெட்டியைச் சுண்டினான். உள்ளே ஜொலிஜொலித்த புளியங்கொட்டை அளவு பெரிய வைர மோதிரத்தை அவள் விரலில் அணிவித்தான்.

''என்...ன...'' - என்று யுக்தா அந்த மோதிரத்தைக் கண்டு தடுமாற, அவன் கைகள் அவளின் இடுப்பில் ஒரு பொஸஸிவ்னஸ்ஸுடன் அழுத்தமாகப் பதிந்தன. வார்த்தைகளால் புரிந்து கொள்ள முடியாத விஷயம் அவன் அவளைப் பற்றியிருந்த விதத்தில் பரத்திற்குப் புரிந்தது.

''நீ என்னிடம் கேட்ட காதல் பரிசு! ஹவ் டூ யூ லைக் இட்?'' என்று மிகவும் அன்னியோன்யமாகக் கிசுகிசுப்பாக நிதின் கேட்க, வேண்டுமென்றே பரத் முன்னிலையில் அவன் ஆடும் நாடகத்தைப் பார்த்து யுக்தா மிரண்டு போனாள்.

சிலையாகவே நின்று விட்டாள், யுக்தா.

அவள் கண் முன் தன் விரல்களால் 'சொடக்கு' விட்ட நிதின்,

''என்ன யுக்தா... சும்மா உனக்கு ஒரு சர்ப்ரைஸ் தரலாமே என்று வந்தேன். பார்த்தால் சர்ப்ரைஸ் இல்லாமல் ஷாக் ஆகிவிட்டாய்? என்ன விஷயம்...?'' என்று கேட்டு விட்டு, அவள் பக்கத்தில் நின்ற பரத்திடம் கை குலுக்கத் தன்னுடைய நீண்ட வலிய கரத்தை நீட்டினான்.

''ஐ'ம் நிதின். யுக்தா என்னுடைய மனைவியாகப் போகிறவள்!'' - என்று அறிமுகம் செய்து கொண்டான்.

''ஐ' ம் பரத். யுக்தாவுடைய...'' என்று கொஞ்சம் நிதானிக்க,

''தெரியும். யுக்தாவின் ப்ரண்ட். உங்களைப் பற்றி நிறையச் சொல்லியிருக்கிறாள்.''

மெதுவாகப் பரத்தைக் காயப்படுத்தாமல் எப்படியாவது விஷயத்தை இங்கிதமாகச் சொல்லலாம் என்று யுக்தா யோசித்துக் கொண்டிருக்கும்போது, நிதின் தடாலடியாக வந்து, என்னவோ ஈரேழு ஜென்மமாக இவர்கள் இருவரும் காதலர்களாகவே இருந்தது போலத் தோற்றத்தை ஏற்படுத்துவதைக் கண்டு வெறுத்துப் போனாள்.



''ஏன்?

''ஏன்??? நிதின், ஏன் இப்படிச் செய்தீங்க?'' என்று கத்த வேண்டும் போல் இருந்தது யுக்தாவிற்கு.

பரத் முன்னிலையில் ஏன் இந்த அணைப்பு? பரத் கண்கள் அவமானத்தில் சிவந்தது வேறு யுக்தாவிற்குப் பரிதாபமாக இருந்தது.

இல்லாத காதலின் பரிசு ஏன்?

''யுக்தா! எனக்கு உன்னிடம் முக்கியமான விஷயம் பற்றிப் பேச வேண்டும். பாட்டி நீ வீட்டில் இருப்பதாகச் சொன்னதால் வந்தேன். நேரில் உன் முகத்தைப் பார்த்தபடி தனிமையில் சொல்ல வேண்டிய விஷயம்.'' - அழுத்தமாக நிதின் பேச,

அவர்களிருவரின் அன்னியோன்யத்தில்,

''நா... நான்... கிளம்புகிறேன்...'' என்று திணறலான, திகைப்புடன் பரத் எழ,

யுக்தா தவித்துப் போனாள். பரத்திடம் சமாதானமாகப் பேச முடியாமல் அச்சமயம் வந்த நிதின் மேல் கோபம் பெரிதும் பொங்கியது. போரில் தோற்று நடுங்கிப் போனது போலப் பரத்தின் தோற்றம். அவளால்தானே...

''பரத்... கொஞ்சம் இரு.'' அவன் நகருவதைக் கண்டு யுக்தா மறுப்பாகப் பேச எத்தனிக்க, ''பரத் போகட்டும்... ஐ ஆம் கெட்டிங் லேட்!'' - என்று அலட்சியமாக நிதின் சொல்ல,

பரத் முகம் அவமானத்தில் மேலும் சிவக்க, வெகு வேகமாக வீட்டை விட்டுச் சென்றான். பரத் அவர்களுடைய பார்வை எல்லையிலிருந்து மறைந்தவுடன்,

அதுவரை அவள் இடுப்பில் பதித்திருந்த அவன் கைகள் தளர்ந்தன.

யுக்தா, அருகில் இருந்தவனின் முகத்தை நிமிர்ந்து பார்த்தாள். அவன் முகம் உணர்ச்சிகளின்றிக் காட்சி யளித்தது.

இவன் மனதில் என்ன நினைத்துக் கொண்டிருக்கிறான் என்று யுக்தா எரிச்சலடைந்தாள். அந்த எரிச்சலுட னேயே,

''பரத்திடம் நீங்கள் இத்தனை ரூடாக ஏன் பேச வேண்டும்? அவன் அப்படி என்ன தவறு செய்தான்?'' - யுக்தாவிடமிருந்து அதிகாரமான கேள்விகள் கோப மாகப் பறந்தன.

சட்டென்று அவனின் கண்கள் இடுங்கின. ''நீ என் மனைவியாகப் போகிறவள், யுக்தா. வேறொருவனுடன் நீ நெருக்கமாக இருப்பதைக் கண்டும் காணாமலும் போவதற்கு நான் ஒன்றும் மாங்கா மடையன் இல்லை!'' வார்த்தைகள் அவனிடம் இருந்து சீறிப் பாய்ந்தன.

மாங்கா மடையன் இல்லையா? மனதுள் எத்தனை முறை அவனுக்கு இந்தப் பட்டம் கொடுத்திருந்தது. அவளையறியாமல் அவள் உதடு துடித்தது.

அந்த உதட்டில் அவன் பார்வை படிந்து மீண்டது.

''இனி இது போல் ஒரு காரியத்தைச் செய்யாதே, என் னால் அனுமதிக்க முடியாது!'' என்று முடிவில் ஆணை யிட்டான் நிதின்.

''என்ன காரியம்?'' செய்தது அத்தனையும் இவனல் லவா? கண்கள் அனல் கக்கின.



''உன் பழைய காதலனைக் கொஞ்சிக் குலாவுவதை!'' - சற்றும் நாகரிகம் இல்லாமல் அவன் வார்த்தைகள் உறுமலாக வந்தன.

கொதித்துப் போனாள், யுக்தா. என்ன பேச்சுப் பேசு கிறான். இவனிடம் அவள் அடிமையா? என்ன அசிங்க மாகப் பேசுகிறான்? கொஞ்சினாளா? முட்டி மோதிக் கொண்டு வார்த்தைகள் தெறிக்க அவள் பேசும் முன்பே அவன் மீண்டும் பேசினான்.

''நீ எனக்குச் சொந்தமானவள், யுக்தா. அந்த நினைப்பு எப்பவும் உன் நினைவில் இருக்க வேண்டும்.'' மீண்டும் ஆணவமான அவன் பேச்சு.

தன் கட்டுப்பாட்டை இழந்தாள் யுக்தா.

''நான் எனக்கு மட்டும் சொந்தமானவள். உங்களுக் கல்ல. அதோடு நான் யாரிடம் பேசுவது, பழகுவது என் பது என் சொந்த விஷயம். அதில் நீங்கள் தலையிடு வதை என்னால் அனுமதிக்க முடியாது. உங்கள் வேலையை மட்டும் பாருங்கள். என் விஷயத்தில் தலையிட்டு மூக்கை நுழைத்தால்... மூக்கு உடைந்து விடும் ஜாக் கிரதை...'' - கோபாவேசமாகப் பேசிய யுக்தாவின் முகம் சினத்தில் சிவக்க, கைகளை வீசி அவனைக் கடந்து செல்ல விளைந்த அந்தக் கைகளை அழுத்தமாகப் பற்றினான் நிதின். மணிக்கட்டில் அவன் விரல்கள் அழுத்தின வேகத்தில் யுக்தாவிற்கு வலித்தது. அவன் கைகளிலிருந்து தன் கைகளை விடுவித்துக் கொள்ள, மேலும் கீழும் முடிந்த அளவு கைகளை அசைக்க, ஒரு இன்ச் கூட அவளால் அவனுடைய வலிமைக்கு ஈடு கொடுக்க முடிய வில்லை.

''என்னிடம் பேசும்போது நாவடக்கம் தேவை, யுக்தா. இல்லையென்றால்...'' அவன் கோபத்தில் நெற்றி நரம்புகள் தெறிக்கச் சீற,

''இல்லை என்றால் என்ன செய்து விடுவீர்கள்...?'' என்று சவாலாக, பெண்புலியாக அவளும் கூற,

அவன் பார்வை மாறியது.

அவன் அவளைச் சட்டென்று இழுத்தான். நிலை தடுமாறி மொத்தமாக அவன் மேல் விழுந்தாள் யுக்தா. அவன் நோக்கமும் அதுவாகத்தான் இருந்தது.

மிக அருகில் அவன் முகம். அவன் கண்களின் சீற்றத்திற்கும் அவள் கண்களின் சீற்றத்திற்கும் ஒரு குறையுமில்லை. அங்கே தீப் பற்றிக் கொள்ளும் அளவிற்கு அனல் சுட்டது.

''இல்லை என்றால்... நாவை நானே அடக்கி வைக்க வேண்டியதாகி விடும்!'' என்று அவனின் மெல்லிய உதட்டசைவில் வார்த்தைகளைக் கிரகித்த யுக்தா, அவனின் முகம் அவளை நோக்கிக் குனிய, அவனுடைய நோக்கத்தை உணர்ந்து திமிறினாள். ஆனால் அவனுடைய கோபமான உதடுகள் அவளுடைய உதட்டை முத்தமிட்டன. கண்களை இறுக மூடினாள் யுக்தா. அவளுடைய பெண்மையை மீண்டும் மீண்டும் நிதின் பதம் பார்க்க வேண்டுமா...? அசையக்கூட முடியாமல் அவன் அணைப்பும் இறுக, யுக்தாவின் இறுகிய கண்களில் இருந்து இயலாமைக் கண்ணீர் கோடுகளாக இறங்கியது.

வாசலில் அரவம் கேட்க, நிதினின் பிடி தளர, கரகரப்பான குரலில் ஏதோ முணுமுணுத்தபடி அவளை விலக்கினான். நடுக்கத்தில் தடுமாறியவளின் புஜத்தை அவன் பற்ற, நீலவேணிப் பாட்டி வாசலில் பிரசன்னமானார்.



பாட்டி அறியுமுன் அவன் முதுகில் மறைந்து வேகமாகக் கண்ணீரைச் சுண்டினாள் யுக்தா.



# 12

யுக்தா - நிதினின் திருமணம் முடிந்து விட்டது. மிக எளிமையாகக் கோவிலில் வைத்து யுக்தாவின் திருமணத்தை நீலவேணிப் பாட்டி மிகுந்த சந்தோஷத்துடன் நடத்தினார். மிகவும் வேண்டிய சொந்தங்கள், நண்பர்கள் என்று தேர்ந்தெடுத்த மனிதர்கள் குழுமி ஆசிர்வதிக்க, அழகுச் சிலையான யுக்தாவின் கழுத்தில் தாலி கட்டினான் நிதின்.

கல்யாணப் பேச்சு ஆரம்பித்து இவ்வளவு சீக்கிரம் கல்யாணமே முடிந்து விட்ட ஜோடி இவர்களாகத்தான் இருக்கும் என்று யுக்தா மனதில் சிந்தனை ஓடியது. கல்யாணத்திற்குப் பிரமாதமாக ஒரு ஆர்ப்பாட்டமும் இல்லை. ஏதோ பிஸினஸ் மீட்டிங் மாதிரி வந்த நிதின் நொடியில் பட்டு வேட்டி மாலை சகிதமாக அவள் அருகில் நின்றபோது யுக்தாவின் நெஞ்சு குறுகுறுத்தது.

நிதின் பக்க உறவுகள் யாரும் திருமணத்திற்கு வர மாட்டார்கள் என்று பாட்டி நேற்று யுக்தாவிடம் வேலை

மெனக்கெட்டுச் சொல்லிவிட்டுச் சென்றது அவளுக்கு விந்தையாகயிருந்தது.

கல்யாணம் பண்ணிக் கொண்டு போனால்தான் வீட்டில் சம்மதம் கிடைக்குமாம். பிறகு மும்பையில் பெரிய அளவில் விருந்துக்கு ஏற்பாடு பண்ணி விடலாம். அதில் ஒரு சிரமமும் இருக்காதாம்.

எங்கேயோ இடிக்குதே... என்ற பாட்டியை விளக்கம் கேட்டபோது, ''உனக்கு இந்தக் கோவிலில் வைத்துத் திருமணம் செய்வேன் என்று நேர்ந்து இருந்தேன், யுக்தா. நிதின் சம்மதம் கொடுத்து விட்டான். அவன் வீட்டில் இதற்கெல்லாம் சம்மதித்து நமக்கு ஒத்துழைப்பார்கள் என்று நம்புவது கஷ்டம். ஒத்துக் கொள்ளலாம். ஒத்துக் கொள்ளாமலும் போகலாம். வேண்டாம் என்று சொல்லி விட்டு நாம் மீறினாலும் கஷ்டம். நிதின் எல்லாத்தையும் பார்த்துக்கறேன்னுதான் சொல்லிட்டானே. மும்பையில் அவன் உறவுகளை வரவழைத்து கிராண்ட்டாக இன்னொரு முறை தாலியைக் கூடக் கட்டுவான்.''

பாட்டி நீலவேணியின் பேச்சிலும் யுக்தாவிற்குக் கோபம் வந்தது. இயலாமையின் கோபம்.

''என்னைத் தான் உங்க இஷ்டத்திற்கு ஆட்டி வைக்கிறீர்கள் என்று நினைத்தால் நீங்கள் நிதினையும் விட்டு வைக்கவில்லை போலயிருக்கு!'' - நக்கலாகத் தாங்க முடியாமல் கேட்டாள் யுக்தா, நீலவேணிப் பாட்டியிடம்.

கல்யாணம் முடிந்தவுடன் பாட்டியின் முகத்தில் தெரிந்த பெருமிதம், சந்தோஷம் கண்டு யுக்தா விழிகளை விரித்தாள். பாட்டி இத்தனை சந்தோஷமாக இருந்து அவள் பார்த்ததில்லை.



அவரின் சந்தோஷத்திற்கு எதை விலை கொடுத்தாலும் தகும்... இருந்தாலும் தோளோடு தோள் ஒட்ட நின்ற நிதினை அவளின் நெஞ்சில் ஒட்ட வைக்க அவளால் முடியவில்லை.

அவனும் அவளிடம் அதிகம் பேசவில்லை. ஏதோ நாடக மேடைத் திருமணம் போலவே இருவரும் நடந்து கொண்டார்கள்.

ஆனால் நெஞ்சில் சதா அழுத்திக் கொண்டிருந்த சிந்தனைகள் அவளை அயர வைத்தன. திருமணச் சடங்குகள் எல்லாம் முடிக்கையில் யுக்தா மிகவும் தளர்ந்து போனாள்.

காரணம்... அவள் மறுக்க முயன்றாலும் உண்மையான காரணம் கணவன் என்ற உரிமையுடன் அவள் கைகளை அழுத்தமாகப் பற்றி நின்று கொண்டிருந்த ஆறடி உயர நிதின்! உதட்டைக் கடித்தாள் யுக்தா.


முன்பைவிட அவன் மேல் கடும் கோபம் கிளம்பியது யுக்தாவிற்கு. எதற்காக இத்தனை கோபம் அவன் மேல் பாய்கிறது என்று யுக்தா ஒரு நொடி கூட யோசிக்க முயற்சிக்கவில்லை.

அப்படி யோசித்திருந்தால்...

விடை கிடைத்திருக்கும்!

அவளின் அனுமதியின்றி அவளின் நெஞ்சில் அவன் மெல்ல நுழைந்து கொண்டிருந்தான்.

கணவன் என்ற உரிமையில்லாமலே..



# 13

விடியற் காலையிலேயே கல்யாணம் முடிந்துவிட, மதியம் புதுமணத் தம்பதிகளாக வீடு வந்தனர் நிதின் - யுக்தா.

''சென்னையில் வேலை நாளையோடு முடிகிறது பாட்டி. நாளை மறுநாள் நானும் யுக்தாவும் மும்பை கிளம்பலாம்னு இருக்கோம்,'' என்று பாட்டியிடம் நிதின் பேசியதைக் கேட்டுத் திடுக்கிட்டுப் போனாள் யுக்தா.

தாலி கட்டிவிட்டதால் இவன் சொல்வதை எல்லாம் கேட்டு இவன் பின்னாலேயே போவாள் என்று எதிர்பார்த்தானா? இடியட். சட்டென்று நகர்ந்து தன் அறைக்குள் நுழைந்தாள் யுக்தா. ஆனால் அவளுடன் அவனும் சேர்ந்தே வரக் கண்களை உருட்டினாள் யுக்தா.

மனைவியின் பார்வையை உணர்ந்தவன், அறையின் கதவைச் சாத்தினான்.

''என் மனைவியின் அருகில் நான் வரக் கூடாதா? லைசன்ஸ் வேறு இருக்கிறது!'' - என்று அவன் கண்கள் சிமிட்ட, யுக்தாவிற்கு எரிச்சலாக வந்தது.

''நம் திருமணம் நடந்தது என்னுடைய முழு விருப்பத்துடன் இல்லை என்பது உங்களுக்குத் தெரிந்தும்...



இதைப் போல்...'' அவளைப் பேசி முடிக்க விடவில்லை நிதின்.

''உன் கையைக் காலைக் கட்டி மணவறைக்கு யாரும் இழுத்து வந்ததைப் பார்க்கவில்லையே! நீயே உன் விருப்பம் போல உன் கால்களால் தானே நடந்து வந்தாய்!'' - அவள் பேசிய தொனியில் கோபம் வந்து நிதின் பதில் கொடுக்க,

''கல்யாணத்திற்கு என் சம்மதம் இல்லை என்பது உங்களுக்குத் தெரியாது... பாட்டியிடம் ஏதோ பேரம் பேசியல்லவா என்னை மணந்தீர்கள்.''

''உன் சம்மதமும் கிடைத்தவுடன்தான் யுக்தா நான் உன்னை மணந்தேன்!'' - நிதினின் குரலில் கடினம் மெல்ல ஏறியது.

''எப்போது...? நான் சொன்னேனா? சரி... என்று சொன்னேனா...? என்னை மணந்து கொள்ளுங்கள் என்று சொன்னேனா...?'' எனக்கென்று மனம்... ஆசைகள்... எல்லாவற்றையும் நீங்கள்...'' இத்தனை நாட்களாக நெஞ்சில் அடைத்து வைத்திருந்த கோபம், இயலாமை, பாட்டியின் செயலால் அடக்கி வைக்கப்பட்டிருந்த வார்த்தைகள் தன்னிஷ்டமாக வெளியேற.

இமைக்காமல் அவளையே சில விநாடிகள் பார்த்த நிதின், பதில் ஒன்றும் பேசாமல், கை முஷ்டியை இறுக மூடினான்.

யுக்தா என்று குரல் கொடுத்தபடி கதவைத் தட்டினார் பைரவி. தப்பித்தது போல் யுக்தா அறைக் கதவைத் திறக்க,

பைரவியைக் கண்டதும் நிதின் முகம் மிக மென்மையாக மாறியது. அவன் உள்ளுக்குள் ஏதோ மாற்றம் நிகழ்ந்தது போல அதன் ஜொலிப்பு முகத்திலும் தெரிந்தது.

இவன் என்ன பச்சோந்தியா? சூழ்நிலைக்கேற்ப நிறம் மாற்றிக் கொள்வானா? அதிசயித்துப் போனாள் யுக்தா.

என் அத்தையிடம் இவனுக்கு நல்ல பேர் கிடைக்க ஏன் பாடுபடுகிறான்?

அவர்களுக்குள் வார்த்தைப் பரிமாறல்கள் நடந்து கொண்டிருந்தன. பைரவி அத்தை கேட்பதற்கெல்லாம் ஆமாம் அத்தை, சரி அத்தை என்று மிக பவ்யமாக அவன் பேசுவதைக் கேட்க என்ன நாடகமாடுகிறான் என்றிருந்தது அவளுக்கு.

''உங்களுக்கு நான் அத்தையில்லை. சித்தி முறை வரும்!'' - என்று பைரவி சொல்வதும்,

''யுக்தா அடிக்கடி அத்தை அத்தை என்று உங்களைப் பற்றிப் பேசுவதால் அதே உறவு முறைதான் இலகுவாக வருகிறது. அப்படிக் கூப்பிடுவதால் தவறொன்றுமில்லையே!'' என்று பதிலளித்தான். மீண்டும் அவரிடமே கேள்வியும் கேட்டான்.

பைரவி சின்ன இதழ் அசைவுடன் அனுமதியும் தந்தார். யுக்தாவிற்குத்தான் பற்றிக் கொண்டு வந்தது.

உரிமையுடன் கம்பெனியைப் பார்க்கத்தானே கேட்டான். உரிமையை அத்துடன் நிறுத்திக் கொள்ளட்டும். மனைவி என்ற உரிமையை எடுத்துப் பார்க்கட்டும், அவனுக்குப் பாடம் கற்றுக் கொடுக்கிறேன்.

பாடம் யார் படிக்கப் போகிறது என்று யுக்தாவிற்கு அச்சமயம் கண்டிப்பாகப் புரியவில்லை.





# 14

மறுநாள் யுக்தாவை நிதின் தன்னுடன் மும்பை அழைத்துச் செல்வதாக ஏற்பாடு.

யுக்தா முற்றிலும் யாரும் எதிர்பாராத விதமாக எதிர்த்தாள். முடியாது பாட்டி. கம்பெனியை நடத்திச் செல்வான் என்ற நம்பிக்கைக்குத் தானே என்னைக் கட்டிக் கொடுத்தீர்கள்.

நான் இங்கேயேதான் இருப்பேன். நான் அவனுடன் எங்கும் போக மாட்டேன் என்று வீரியமாக எதிர்த்தாள்.

நீலவேணிப் பாட்டி கலங்கிப் போனார்.

திருமணம் முடிந்த மறுநாள் விடியற்காலையிலேயே எழுந்து ஹாலில் குறுக்கும் நெடுக்குமாக நடைபயின்ற யுக்தாவைக் கண்டு நீலவேணிப் பாட்டிக்கு லேசாகப் பயமாக இருந்தது.

''யுக்தா! நாளைக்கு நிதின் மும்பை கிளம்பப் போவதாகச் சொன்னானே. டிரஸ் எல்லாம் பேக் பண்ணிவிட்டாயா? வேறு ஏதாவது வேண்டுமா? பேக் பண்ணுவதற்கு உதவிக்குச் 'சின்னப் பொண்ணு'வையும் கூட்டிக்கோ. மற்றச் சாமான்கள் எல்லாம் நான் ரெடி பண்ணிவிட்டேன்!'' என்று யோசித்து யோசித்துப் பேச,

''நான் மும்பை போக மாட்டேன்!'' என்று நீலவேணிப் பாட்டியை முற்றிலுமாக எதிர்த்தாள்.

''ஏன்?'' - கண்கள் இடுங்க நீலவேணிப் பாட்டி முறைக்க,

''கம்பெனியை நடத்திச் செல்வான் என்ற நம்பிக்கைக்குத் தானே என்னைக் கட்டிக் கொடுத்தீர்கள். சென்னையில் இருந்து நான் கம்பெனியைப் பார்த்துக் கொள்கிறேன்,'' - என்று வீரியமாக எதிர்த்தாள்.

நீலவேணிப் பாட்டி கலங்கிப் போனார்.

அதற்கும் காரணம் இருந்தது.

நேற்று இரவு நிதின் - யுக்தாவின் முதல் இரவு அவர்கள் வீட்டில்தான் கழிந்தது.

யுக்தா பேசின பேச்சிலோ... இல்லை, வெளியில் வேலையிருந்ததோ... அவன் இரவு வெகு நேரம் கழித்துத் தான் வீட்டிற்கு வந்தான். அதற்குள் யுக்தா தன் அறைக் கதவை மூடிவிட்டுப் படுத்துவிட நீலவேணிப் பாட்டி முழி பிதுங்கிப் போனாள். நிதினை எதிர்கொள்ள அவர் தவித்துப் போனார்.

''முதலிரவே...............'' என்று நீலவேணிப் பாட்டி திகைக்க....

சூழ்நிலையை உணர்ந்த நிதின்,

''எனக்கு வேறு ரூம் ரெடி செய்யுங்கள், பாட்டி. மனதில் நிறைய விஷயங்கள் போட்டு என்னைச் சுழற்றி எடுத்துக் கொண்டிருக்கின்றன... அதனால் வேறு நினைவும் எனக்கு இல்லை... கூல் பாட்டி...''

''சாப்பாடு நிதின்...''



''பிஸினஸ் மீட்டிங்லேயே முடித்து விட்டேன் பாட்டி. வீட்டில் இதுவரை என் திருமண நியூஸ் போய்ச் சேரவில்லை. சேர விடாமல் பார்த்துக் கொண்டேன். மாமா லண்டனிலிருந்து இன்னும் மூன்று நாட்களில் வந்து விடுவார்கள். அதுவரை தெரியாமலேயே இருக்கட்டும். அதுதான் வசதி!'' என்று அவன் சொல்ல,

நீலவேணிப் பாட்டி முகம் வேதனையில் சுருங்க, ''கவலைப்படாதீங்க. எல்லாம் நல்லபடியாக நடக்கும்!'' என்று சொல்லிவிட்டு அவனுக்கு என்று பாட்டி காட்டிய அறைக்குள் நுழைந்தான்.

முந்தைய நாள் இரவு நடந்ததை நினைத்தபடி இருந்த நீலவேணிப் பாட்டிக்குக் காலையில் அவர் செய்யும் 'யோகா'வில் மனம் லயிக்க மறுத்தது. அவருக்குப் பயமாக இருந்தது.

காலை உணவை வேகவேகமாகச் சாப்பிட்ட யுக்தா 'பரத்' போன் செய்தான் என்று அவசரமாகப் போக வேண்டும் என்று கிளம்பினாள்.

''நேற்றுத் தான் திருமணம் முடிந்திருக்கிறது. இன்று எழுந்ததும் எழாததுமாக என்ன ஓட்டம் யுகி. நிதின் எங்கே? இன்னும் தூக்கமா?'' - பைரவி கேட்க,

சமையல்காரர் கொண்டு வந்து வைத்த காபியைக் கையில் எடுத்துக் கொண்ட யுக்தா,

''யாருக்குத் தெரியும்...'' என்று அலட்சியமாகச் சொல்ல.

ட்ராக் சூட்டோடு வியர்வையை வெண்ணிற டவலால் துடைத்தபடி வந்து நின்றான் நிதின்.

''காலை ஜாகிங் மிஸ் செய்தேன் என்றால், நாள் முழுவதும் சோம்பேறித்தனமாக ஒரு வேலையும் ஓடாது அத்தை. அதனால் யுக்தாவை டிஸ்டர்ப் பண்ணாமல் காலையிலே ஜாகிங் போய்விட்டேன். அதான் அவளுக்குக் கோபம் அத்தை!'' - என்றபடி யுக்தாவின் அருகில் சகஜம்போல அமர்ந்து, ''ஹாய் டார்லிங் குட்மார்னிங்!'' என்று சொல்லியபடி டீபாயில் எக்கொனாமிக் டைம்ஸ் பத்திரிகையை எடுத்துப் படிக்கலானான்.

அவர்களின் ஜோடிப் பொருத்தத்தை ரசித்தபடி, சிறுசுகளிடையே நாம் எதற்கு நந்தியைப் போல என்று பைரவி, சின்னப் புன்னகையுடன் அங்கிருந்து நகர்ந்தார்.

பைரவி கண்களில் இருந்து மறைந்தவுடன் பத்திரிகையைக் கீழே போட்டவன்,

''எங்கேயோ கிளம்பியது போலத் தெரிகிறது. தெரிந்து கொள்ளலாமா?'' என்று விளையாட்டுப் போல் கேட்டான் அவன்.

''நான் எங்கே போகிறேன், வருகிறேன் என்ற டைம் டேபிள் யாரிடமும் சொல்ல வேண்டிய அவசியம் எனக்கில்லை!'' - எழுந்து பக்கத்து சோபாவில் அமர்ந்த யுக்தா கோப முகம் காட்டினாள்.

அது சிறு பிள்ளைக் கோபம் போல் முரண்டு பிடிப்பது போல் இருக்க, நிதினின் முகம் சிரிப்பில் சிலும்பியது. மனைவி என்று கரம் பற்றியவளின் வசீகர முகம் அவனை வசியம் செய்தது.

''சரி, சொல்ல வேண்டாம்... ஆனால் நானும் வரலாமா?'' - என்று சிரிப்பில் மலர்ந்த உதட்டுடன் அவன் கேட்க,



யுக்தாவிற்கு எரிச்சலாக வந்தது. கொஞ்ச நாட்களாகவே இவனை எப்படிச் சமாளிப்பது, கல்யாணத்தை எப்படி நிறுத்துவது என்று சதா இவனைப் பற்றிய சிந்தனையில் கழிந்து போனது. இப்பொழுதென்னவென்றால் சதா அவள் முன் நின்று பேசி வேறு சிந்தனைக்கே வேட்டு வைக்கிறான். தன் மேல் வந்த கோபத்தில் அவனுக்குச் சூடான பதில் கொடுப்பதற்காக வாயைத் திறக்க, மீண்டும் வந்தார் பைரவி. கைகளில் நிதினுக்காகக் காபிக் கோப்பை. அவனிடம் கோப்பையை டிரேயுடன் நீட்ட, நன்றியுடன் காபிக் கோப்பையைக் கைகளில் எடுத்துக் கொண்டான்.

''டிபன் ரெடியாகி விட்டது. குளித்துவிட்டு வந்தீர்களானால் சாப்பிடலாம். அப்புறம் ஒரு விஷயம் நிதின்... நான் அர்ஜெண்டாக டெல்லி கிளம்புகிறேன். ஒரு க்ளையண்ட் விஷயமாக அவசரமாகப் பேச வேண்டியிருக்கிறது. பத்து மணி ப்ளைட். இப்பொழுது கிளம்பினால்தான் சரியாக இருக்கும். எங்கள் யுக்தாவை நன்றாகப் பார்த்துக் கொள்ளுங்கள்,'' என்று அவர் முடிக்கையில் கண்களில் கண்ணீர் தழும்பியது.

''உங்களுக்கு அந்தக் கவலை வேண்டாம் அத்தை. நான் பார்த்துக் கொள்கிறேன்,'' - என்று புன்னகைத்த முகமாகப் பேசியவன், ''பாட்டி எங்கே?'' என்று கேள்வி கேட்டான்.

''அம்மா காலையில் யோகா என்று கொஞ்ச நேரம் செலவழித்து விடுவார். அதற்குப் பிறகு அவரின் சுறுசுறுப்பு யாருக்கும் வராது!'' என்று பைரவி சொல்ல,

''தெரியும். அந்தச் சுறுசுறுப்புதான் முதலில் என்னைக் கவர்ந்தது. பிறகுதான் அவர்களுடைய அறிமுகம், நட்பு

எல்லாம் உருவாகியது. ஆனால் அந்த நட்பு என்னுடைய வாழ்க்கைக்கு ஒரு அர்த்தத்தை, ஆச்சரியத்தை, சந்தோஷத்தைக் கொடுக்கப் போகிறது என்று எனக்கு யுக்தாவைப் பார்க்கும் வரை தெரியாது, அத்தை.'' மிகக் கனிந்து போய்ப் பேசினான் அவன்.

இவன் என்ன பேசுகிறான்?

யுக்தாவை அவன் தன் சந்தோஷம் என்கிறானா?

வாழ்க்கை என்கிறானா?

ஆனால் அப்படி நினைக்கிறவன் மாதிரியா அவளிடம் பழகுகிறான்?

இல்லையே!

சதா அதிகாரம்!

இவன் புதிராகத்தான் இருக்கிறான். அவளிடம் காதல் பொங்குகிறது என்று, விட்டால் கதையளப்பான் போல் இருக்கிறதே!

ஆனால் அப்படி அவன் பேசும்போது அவளுக்குக் காரணம் அறியாமல் நெஞ்சு படபடத்தது.

அவளுடைய சிந்தனையைத் தடை செய்தது தொடர்ந்து பைரவி பேசிய பேச்சு,

''ரொம்ப சந்தோஷமாக இருக்குது நிதின். இருவரையும் ஒரு சேரப் பார்க்கும்போது, மேட் ஃபார் ஈச் அதர் கப்பிள் போல இருக்கிறீர்கள். வாழ்க்கையில் ரெண்டு பேரும் ஜெயிக்க வேண்டும்!'' என்று மனதார வாழ்த்தியவர், யுக்தாவின் முகத்தில் இருந்த கோபத்தைக் கண்டு கலவரமானார். அதனால் தொடர்ந்து,



''அவள் சின்னப் பெண், நிதின். ஆள் வளர்ந்த அளவுக்கு இன்னும் மெச்சூரிட்டி வளரவில்லை. கோபம் ஆளுக்கு முன் வந்து விடும். ஆனால் வந்த வேகத்தில் அடங்கி விடும். அதனால் ஏதாவது அறியாமல் தப்பு செய்தால் மன்னித்துக் கொள்ளுங்கள். அவளைப் போல் பாசமான பெண்ணை இந்தக் காலத்தில் பார்ப்பது கஷ்டம்.''

பைரவியின் வார்த்தைகள் யுக்தாவை இளகச் செய்தாலும், அவள் திருமண வாழ்க்கை சந்தோஷமாக அமைய வேண்டும் என்று பைரவி, நிதினிடம் பேசுவதைக் கேட்க அவளுக்குக் கோபம் வந்தது.

''எனக்கு மெச்சூரிட்டி இல்லையா? நான் தப்பு செய்தால் மன்னிக்க இவன் யார்? அத்தை! ஸ்டாப் இட்!'' - என்று யுக்தா சீற,

நிதின் இதழில் கேலிச் சிரிப்பு உதயமாகியது.

''போடுடா தோப்புக்கரணம் என்று அவள் போடச் சொன்னால் போடும் நிலையில் நான் இருக்கிறேன். எனக்காகக் கொஞ்சம் யுக்தாவிடம் நீங்கள் சிபாரிசு செய்வதை விட்டு விட்டு அவளுக்காக என்னிடம் பேசுகிறீர்களே, அத்தை!'' என்றான். கண்களில் மாயக் கண்ணனின் கேலியுடன் அவன் பேசிய பேச்சின் அர்த்தத்தில் யுக்தாவின் நெஞ்சு மினுக்கென்று துடித்தது.

சிரித்து விட்டார் பைரவி.

''நான் கிளம்புகிறேன். விட்டால் நீங்கள் இரண்டு பேரும் என்னைப் பந்தாடி விடுவீர்கள்!'' என்று அவர் சிறு பெட்டியைக் கையில் தூக்கியபடி கிளம்ப,

''பாட்டியிடம் சொல்லிவிட்டீர்களா?'' எதிரே நின்று யுக்தா கேட்க,

'ஆமாம்' என்பது போலத் தலை அசைத்தபடி, அவர் டிரைவருடன் காரில் கிளம்ப, நிதினும், யுக்தாவும் வாசல் வரை வந்து கையசைத்து அவரை வழியனுப்பி வைத்தார்கள்.

''எனக்கும் நேரமாகிவிட்டது. நானும் கிளம்புகிறேன்.'' வீட்டிற்குள் நுழைந்தபடி முணுமுணுப்பாக யுக்தா ஹேண்ட் பேக்கை எடுக்க,

''ஒரு பத்து நிமிடம். குளித்து ரெடியாகி நானும் வருகிறேன். சில விஷயங்கள் தனிமையில் பேச வேண்டும்... உன்னிடம்,'' என்று அவன் பேச்சில் குறிப்போடு பேச,

காதே கேட்காத மாதிரி யுக்தா வெளியே சென்றாள்.

அவன் கண்கள் கூர்மையுடன் அவள் பின் பதிந்தன.



## 15

அந்த ஷாப்பிங் மால் உள்ளே ஹோட்டலில் காபி ஷாப்பில் பரத்தோடு அமர்ந்திருந்த யுக்தா ஒரு முனைப் போடு கையோடு வைத்திருந்த லேப்டாப்பில் மூழ்கினாள். இடையிடையே பரத்திடம் கேள்விகளையும் கேட்டாள்.



மீண்டும் பரத் படிப்பைத் தொடர யுக்தா தன்னால் முயன்ற உதவிகளைச் செய்தாள். எதிலும் விருப்பமற்று, வாழ்க்கையே முடிந்து விட்டதைப் போலிருந்த பரத்தைக் கண்டு பாவமாக இருந்தது யுக்தாவிற்கு. அப்படியே அவனை விட்டால், தேவதாஸ் ஆகி விடுவானோ என்று உள்ளூர அவளுக்குப் பயம் இருந்தது நிஜம். அவன் கிடைக்கவில்லையே என்று துளி கூட அவள் கவலைப்படாதது அவளுக்குச் சில சமயம் உறுத்தியது. ஆனால் அவளுக்கு அவன் மேல் காதல் என்றுமே இருந்ததில்லை என்பது தெள்ளத் தெளிவாகப் புரிந்து போனது.

பரத் அருகில் இருந்தால் பாதுகாப்பாக இருக்கும். இனிய நண்பன் என்ற பாச உணர்வு மிகுந்து இருக்கும். ஆனால் அவளையும் அறியாமல் மனம் நிதினிடம் வந்தது. நிதின் அருகில் வரும்போது அவள் நெஞ்சில் நிகழும் பட்டாம்பூச்சிப் படபடப்பு என்றுமே பரத்தின் அருகாமையில் அவள் உணர்ந்ததேயில்லை. அப்படி என்றால்... நிதின்... மேலும் யோசிக்க அவளுக்குப் பயமாகயிருந்தது.

''யுக்தா....'' என்ற பரத்தின் சப்தத்தில், திடுக்கிட்டு விழித்தாள் யுக்தா.

''நீ யூனிவெர்சிட்டிக்கு என் நிலையைப் பற்றி விளக்கி 'மெயில்' அனுப்பி அதை அவர்கள் பார்ப்பார்களா? குப்பை என்று நீக்கி விடப் போகிறார்கள். எனக்குச் சந்தேகமாகத்தான் இருக்கு..''

''கண்டிப்பாக நீ படிப்பை முடிக்க வேண்டும். அதற்கு நீ தலை கீழாகத்தான் நிற்க வேண்டும் என்றால்

அதையும் செய்து பார்க்க வேண்டியதுதான். எப்படி உன் அம்மாவையும் தங்கையையும் நினைக்காமல் அப்படி ஒரு முடிவை நீ எடுப்பாய்?''

''எப்படி யுக்தா என்னை மறந்து நீ வேறொருவனை மணந்தாய்?''

''பரத்! வாழ்க்கையில் பல நேரங்களில் நடக்கும் பல விஷயங்கள் நாம் ப்ளான் பண்ணி வைத்தது போல் நடப்பதில்லை. ஆசைப்பட்டோம். நடந்தது நடந்து விட்டது. அதை ஏற்றுக் கொள்ள வேண்டியதுதான். வேறு வழியில்லையே.'' யுக்தா சமாதானமாக அவனிடம் நீண்டதொரு பிரசங்கம் செய்ய,

வெளிநாட்டில் இருந்து வந்து அந்தப் பெரிய ஹோட்டலில் தங்கியிருக்கும் நண்பனைப் பார்க்க வந்த நிதினின் கண்கள், கொஞ்சமும் எதிர்பாராமல் யுக்தாவைச் சந்தித்தன. அதுவும் கூடவே பரத்தையும் கண்டதும் அவன் முகம் இறுகியது.

யுக்தாவின் நெஞ்சு ஏனோ குறுகுறுக்க, அவள் மனம் நிதினை உணர்ந்தது. டெலிபதி! சட்டென்று கண்களை உயர்த்தினாள்.

அவனேதான். நிதின்! நெஞ்சு படபடக்க உதட்டைக் கடித்தாள் யுக்தா.

அங்கு நிதினைச் சத்தியமாக எதிர்பார்க்கவில்லை யுக்தா. அவன் பார்வை பரத்தையும் அவளையும் மாறி மாறிப் பார்த்தது. அவன் கண்களுக்கு மட்டும் சக்தியிருந்தால் அதன் வெப்பத்தில் பரத் பஸ்பமாகியிருப்பான்.



ஆக, இவள் காலையில் வேகவேகமாக ஓடி வந்தது இவனைப் பார்க்கவா?

அத்தனை ஆசையிருக்கிறதா பரத்திடம்?

மெல்ல அவர்கள் புறமாக நடந்து,

''ஹலோ...'' என்று பேச தொடங்கியவனை, செல்போன் அழைக்க, சட்டென்று உயிர்ப்பித்தான்.

''இதோ ஒரு நிமிடத்தில் உன் அறையில் இருப்பேன்!'' - என்று ஆங்கிலத்தில் குரல் பிசிறாமல் போனில் பதில் சொன்னவன்,

''ஹலோ மிஸ்டர் பரத்!'' என்று தன்னுடைய வலிமையான கரத்தை நீட்டினான்.

கைகளில் இருந்த வரவேற்பு கண்களில் தெரியாததை யுக்தா குறிப்பெடுத்தாள். பரத்தைக் கண்டால் நிதின் முகம் கடினமாக மாறுவதையும் கண்களில் சீற்றம் பறப்பதையும் யுக்தா உணர்ந்தாள்.

நிதினின் செல்போன் மீண்டும் மணியடிக்க,

''அரை மணி நேரத்தில் மீண்டும் சந்திக்கிறேன்,'' என்று யுக்தாவிடம் பேசியவன், பின் செல்லில் பேசிக் கொண்டே கிளம்பினான்.

அவன் வருவதற்குள் கிளம்பிவிட வேண்டும் என்று பரபரப்புடன் அவன் கண் மறைந்ததும் கிளம்பினாள்.

''மெயில் அனுப்பியாகி விட்டது. அவர்களின் பதிலுக்குத்தான் வெயிட் பண்ண வேண்டும். இனிக் கிளம்புவோம். உன்னை உன் இடத்தில் டிராப் செய்து விட்டுப் போகிறேன்,'' என்று, வேகவேகமாக 'லேப்டாப்'பை ஸ்விட்ச் ஆஃப் செய்தாள்.

அவன் வரும் முன் போய்விட வேண்டும் என்று டென் ஷனில் வண்டி ஓட்டிய யுக்தா காரை ஒரு 'பைக்'கின் மேல் மோதினாள்.

ஆக்ஸிடெண்ட்.

டயர் கிறீச்சிட சடன் பிரேக் போட்டாள் யுக்தா.

அப்படியும் இரண்டு வாலிபர்களும் இடிபட்டு பாலன்ஸ் தவறி டமால் என்று விழுந்தார்கள். வண்டி ஹாண்டில் பார் முன் சக்கரம் சேதாரம்.

''யுக்தா! வண்டியை நிறுத்தாதே. அப்படியே கிளம்பு!'' என்று பயத்தில் பரத் குரல் கொடுக்க,

''இல்லை பரத். அடிபட்டிருக்கு போல. நம் தவறு தானே! ஹாஸ்பிடலில் சேர்க்க வேண்டும். உதவி பண்ண வேண்டும்,'' என்று யுக்தா பதட்டத்துடன் இறங் கினாள்.

யுக்தா உதவிக் கரம் நீட்ட, ஆனால் கொஞ்சமும் எதிர்பாராத முறையில் அந்த இருவரும் அசிங்கமான வார்த்தைகளால் யுக்தாவைத் திட்டத் தொடங்கினார்கள். பச்சாதாபத்தில் இருந்த யுக்தா அந்த வார்த்தைகளில் சில நொடிகள் அதிர்ந்தாள். அவள் சமாளிக்கு முன்,

ஒருவன் எல்லை மீறி யுக்தாவின் கைகளை மடக்க, யுக்தா பற்களைக் கடித்தாள். அவனை உதற முற்பட,

''நான் அப்பவே சொன்னேன். காரில் இருந்து இறங்க வேண்டாம்னு. இப்பப் பாரு, நிலைமையை. அடுத்து என்னையும் அடிப்பானுங்க. குடிகாரனுங்க. நல்லா தண்ணி அடிச்சுட்டு வந்த ரௌடிகள். எனக்கு ஏற்கெனவே



இரத்தம்னா அலர்ஜி. எனக்குப் பயம்மா இருக்கு!'' எனக் கொஞ்சம் கூட உதவும் மனப்பான்மை இல்லாமல் பரத் தன் நலம் குறித்துப் பேச, யுக்தா ஆச்சர்யமாகிப் போனாள்.

அவள் ஒரு கஷ்டத்தில் இருந்தால் காப்பாற்ற வேண் டும் என்று கூடத் தோன்றாதா?

அவள் ஆபத்தில் இருக்கிறாள். காப்பாற்ற வேண்டும். சின்ன உந்துதலுமின்றி, எல்லாவற்றுக்கும் காரணம் நீதான் என்று அவன் சொன்னதும், இனி என்னை அடிக்கப் போகிறான் என்று பயப்படுவதும், அவளுக்குப் பெரும் ஆச்சர்யமாக இருந்தது. பிரமை பிடித்தபடி அவள் நிற்க,

அதற்குள் ஒரு கூட்டமே கூடியது. ''கார்லே போனா கண்ணு தெரியாதாமே!'' என்று ஆளுக்கு ஆள் எகிற,

எல்லோரும் செய்த கலாட்டாக்களைவிடத் தொடை நடுங்கியான பரத்தைக் கண்டுதான் ஆச்சர்யமாகிப் போனது யுக்தாவிற்கு. இந்தப் பயம் பயப்படுகிறான் என்று வியந்த சமயம்,

வந்தது நிதின். தானே வண்டியை ஓட்டியவன் -

அங்கே யுக்தாவையும் கும்பலையும் கண்டதும், காரை நிறுத்தி வேகமாக இறங்கினான். புயலைப்போல் வந்தவன் செய்த முதல் காரியம் யுக்தாவின் மேல் கையை வைத்திருந்தவனின் கையை முதலில் தட்டி விட்டான். அந்தச் சின்னத் தட்டலில் அவன் கைகளில் தீ வைத்த மாதிரி எரிய, ஆ... ஊ... என்று கத்தியபடி நிதினை முறைக்க, கண்களின் ஒரு சுழற்சியில் அங்கிருந்த நிலைமையைப் புரிந்த நிதின்,

சமாளிக்கும் முன், கால் முட்டியில் இரத்தம் சொட்ட ஒருவன் வந்து,

''குருடி கணக்கா வண்டியை ஓட்டி எங்களை இடித் திருக்கா! பொம்பளைன்னதும் மைனர் சப்போர்ட்டுக்கு வந்துட்டார் பார்யா!'' என்று நக்கலாகப் பேச, அவன் பேசுகையில் வாயில் இருந்து வந்த நெடியில் புருவம் சுருக்கினான் நிதின்.

''குடிச்சு விட்டு வண்டியோட்டியிருக்கே. போலீஸ் கேஸானா உன்னோட வண்டி போய், நடு ரோட்ல நிற்க வேண்டியதாகப் போகும்.''

''அய்ய... இவரு பெரிய போலீஸ்"... அந்தப் பொம் பளை வண்டியை உடைங்கடா. அவளையும் விட்டு வைக்காதீங்க!'' என்று அவன் உதார் விட, லோக்கல் ரௌடி போல, அதற்குள் அவனுக்கு ஆள்பலம் கூடுவதை நிதின் உணர்ந்தான்.

நிதினின் வலிமையான கைகள் மற்றவனின் கன்னத் தில் அதிவேகமாக இறங்கின. பொறி கலங்கிப் போனான் ரௌடி.

''மேடமைக் கூட்டிக் கொண்டு நீங்கள் கிளம்புங்கள்,'' என்று மிக பவ்யமாக ஆங்கிலத்தில் சொன்னபடி,

உயரமாக ஆஜானுபாகுவாக வந்து நின்ற இருவரை யும் கண்டதும் கூட்டம் பின் வாங்கியது.

கண்ணீரைச் சுண்டித் தன்னை நிலைப்படுத்திய யுக் தாவைக் கூர்மையான விழிகளால் அளந்தவன், அவள் கைகளை உரிமையுடன் பற்றித் தன் கைகளில் சிறை வைத்தான் அழுத்தமாக. கண்கள் மீண்டும் கூட்டத்தைச் சுழற்றின.



என்னவள்!

எவனாவது அவளிடம் வாலாட்டினால் தெரியும் செய்தி என்ற மிரட்டல் அந்தச் செய்கையில் இருந்தது. நிதினின் செய்கை யுக்தாவை மொத்தமாகச் சுருட்டியது. அவள் கண்கள் உடைப்பெடுத்தன. நெஞ்சு விம்ம, மனம் சொல்ல முடியாத நிம்மதியைச் சுகித்தது.

வீரமான கள்வன் என்று உள்ளம் சொல்லுது... உன்னை மொத்தம் நேசிக்கிறேன்... என்று நொடியில் இதயம் ராகம் இழுத்தது. அவன் கண்கள் அவள் நெஞ்சை ஊடுருவின. காக்கும் விழி நான் உனக்கு... கடவுளே... நெஞ்சில் பல வாசல்கள் திறந்தன.

மெல்லிய இதம் யுக்தாவின் உடலின் நாடி நரம்பு களில் நாதமாக மீட்ட, அந்தச் சுகத்தில் யுக்தா கணவன் அருகில் மிக நெருங்கி நின்று கொண்டாள்.

அந்தச் செய்கையின் அர்த்தத்தை உணர்ந்தும் உண ராதவன் போலக் கண்களை இடுக்கிய நிதின், அவளுடன் தன்னுடைய காரை நோக்கி நடந்தான்.

காதலுக்கும் வீரத்திற்கும் தொடர்புண்டு. காதல் நிகழுமிடத்தில் வீரம் செறியும். வீரம் செறியுமிடத்தில் காதல் நிகழும்.

பரத், ''யுக்தா! நானும் உங்களுடன் வருகிறேன்,'' என்று அவர்களுடன் காரில் ஏறினான். கூட்டத்தைத் திரும்பிப் பார்த்தாள் யுக்தா.

அடிபட்டவர்களிடம் அந்த ஆஜானுபாகுவான இருவர் ஏதோ பேசிக் கொண்டிருப்பது தெரிந்தது.

அவர்கள் இருவரையும் அவள் இதற்கு முன் எங்கோ பார்த்திருக்கிறாள்.

எங்கே?

மேலே வேறு எதையும் யோசிக்க முடியாமல், நிதின் நினைவுகள் நெஞ்சை நிறைத்தன.

ஆனால் நிதின் நெஞ்சில் எரிமலையின் கொந்தளிப்பு.

பரத்துடன் தனிமையில் என்ன பேச்சு?

எத்தனை முறை சொல்லியும் யுக்தா பிடிவாதமாக அவனை மீண்டும் மீண்டும் சந்தித்தால்? அதுவும் திருமணமான மறுநாளே! உன்னிடம் தனிமையில் பேச வேண்டும் என்று யுக்தாவிடம் சொன்ன பிறகும் கேட்காமல் பரத்தையே நாடி ஓட வேண்டும் என்றால்...? தவறு செய்து விட்டோமோ...? என்று நிதின் உள்ளத்தில் சஞ்சல அலைகள். ஆனால் யாருக்காகவும் யுக்தாவை விட்டுத் தரப் போவதாக யில்லை என்ற நினைப்பு மட்டும் மிக அழுத்தமாக நெஞ்சில் எழுந்தது.

பரத்தின் இருப்பிடம் கேட்டு, அவனை இறக்கிவிட, அவன் யுக்தாவிடம் நாளைக்கும் ஸேம் டைம் மீட் பண்ணுவோம் யுக்தா என்றபடி டாடா பைபையுடன் நகர்ந்தான்.

காரில் அவன் அருகில் அமர்ந்திருந்த யுக்தாவுக்கோ நிதினைப் பற்றி யோசிக்க யோசிக்க நிறையப் புரியாத கேள்விகளுக்குத் தானாக விடை கிடைத்தது. அந்த விடைகள் அவளைச் சந்தோஷத்தில் திக்கு முக்காட வைத்தன.



நிதின் அவளைக் கண் மூடித்தனமாக நேசித்திருக்கிறான். அதனால்தான் இந்தத் திருமணம். இப்படி ஓடி ஓடி ஒரே குறியாய் நின்று அவளைத் தன்னவளாக்கியிருக்கிறான். கர்வமாக இருந்தது அவளுக்கு. என்ன மாதிரிக் காதல்! ஆனால் அவள் புரிந்து கொள்ளாத மக்கு மாதிரி இருந்து விட்டாளே.

ப்ச்...

இனிச் செலவழிக்கப் போகும் ஒவ்வொரு மூச்சும் அவனுக்காகத்தான்.

நூறு சதவீதம்.

மெல்லத் திரும்பிக் காரை ஓட்டிக் கொண்டு வந்தவனை ஓரக் கண்ணால் பார்த்தாள்.

அந்தக் கண்கள், உதடு... யுக்தா நெஞ்சு படபடக்கப் பார்வையைத் தழைத்தாள். வெட்கத்தில் கன்னங்கள் சிவந்தன.

காதலுணர்ச்சி மிகவும் நாணம் உள்ளது. ராஜ சபையில் திரை மறைவில் உட்காரும் மகாராணியைப் போல் அது யுக்தாவின் மனதில் ஒளிந்து உட்கார்ந்து நாட்கள் பல ஆனதை யுக்தா உணரவில்லை.

இந்தக் காதல், நேசம் எல்லாம் விநாடியில் அவள் உள்ளத்திலிருந்து கிளம்பியது என்று அவள் சொல்ல மாட்டாள்தான். மெல்ல மெல்ல அவனின் ஒவ்வொரு செய்கையால் காதல் மொட்டு விரிந்து பின் வேக வேகமாகப் பூவாகி, காயாகி, பழமாகி, பின் பெரிய மரமாகவே அவள் நெஞ்சில் விரிந்து கிடந்தது. உண்மையில்

காதலின் வேகத்தை அதன் கனத்தை யுக்தாவால் தாங்க முடியவில்லை.

அவளின் மனநிலையைத் துளியும் உணராமல்,

''பரத்துடன் இனிச் சந்திப்புகள் நிகழ என்னால் அனுமதிக்க முடியாது!'' - என்று கண்களில் சிவப்புடன் அவளைப் பார்த்தான்.

பொறாமையா? என் நிதினுக்குப் பொறாமை. ஆனால் அதற்குக் காரணமே யில்லையே... 'குபுக்'கென்று அவளின் சிவந்த அதரங்கள் சிணுங்கலாய்ச் சிணுங்கியபடி ஒரு இரகசியச் சிரிப்பை மிகமிக வசீகரமாக உதிர்க்க,

முதன் முதலாக யுக்தாவின் நாணத்தை உணர்ந்தவனின் கண்கள் அவள் சிவந்த உதட்டில் படிய, அவன் நெஞ்சு வெகு வேகமாக ஏறிச் சரிய, காரைச் சடாரென்று ஒரு திடுக்கிடலோடு நிறுத்தினான்.

புதிதாகக் காதலைக் கண்டு பிடித்த யுக்தாவின் முகம் ஒரு புதிய தேஜஸில் ஜொலிக்க, அவன் கண்கள் அவள் கண்ணோடு கண் ஊடுருவ, இருவரின் கண்களும் மற்றவரின் இதயம் வரை பாய்ந்தன. யுக்தாவின் சிவந்த இதழ்கள், அவன் பார்வையின் வீரியத்தில் நாணத்தில் துடிக்க, 'சட்' என்று யுக்தாவின் முகத்தைக் கையிலேந்தியவன் கண்களிலும் அபூர்வமான ஒளி வீச, அவள் நெற்றி, கண் என்று முகமெல்லாம் மென்மையாக முத்தமிட்டவன், நிதானமிழந்தவனாக ஒரு சீறலான மூச்சுடன் அவளின் உதட்டைச் சிறைப்பிடித்தான். அந்த முத்தத்தில் யுக்தா தன்னை முழுவதுமாக அவனிடம் தொலைத்தாள்.



சில நொடிகளோ, சில நிமிடங்களோ நீண்ட நிலையிலிருந்து முதலில் மீண்டது நிதின். விரல்களில் சின்ன நடுக்கத்துடன் அவளை விலக்கியவன் கண்களில் ஆராய்தல் இருந்தது.

புதுப் பெண்ணிற்குரிய நாணம் எங்கிருந்தோ ஓடி வந்து யுக்தாவை ஒட்டிக் கொள்ள, யுக்தா அந்தி வானமாய்ச் சிவந்து போனாள்.

நிதின் நம்ப முடியாமல் அவளைப் பார்த்தான்.


இது என்ன நாடகத்தின் ஆரம்பம்?! நிலைக்குமா? தன்னையும் மீறி ஒற்றை விரலால் அவளின் சிவந்த பளபளத்த கன்னத்தை நிமிண்டியவன், ஒரு பெருமூச்சோடு,

''யுக்தா! எனக்கு வேலையிருக்கிறது. நீ முதலில் வீட்டிற்குப் போ,'' என்றான் - முணுமுணுப்பான கடினமான குரலில், ஒரு நெடிய பெருமூச்சுடன்.

எதற்கு என் ஆருயிர்க் கணவனே! இத்தனை பெருமூச்சு?

இனி நம் வாழ்வில் எல்லாமே சுபமே! கவலையே படாதீர்கள் என்று சந்தோஷத்துடன் மனதில் நினைத்த யுக்தா, அதைச் செயலிலும் காண்பிக்க எத்தனிக்க, தன் கூச்சத்தை ஒதுக்கி, நிதினின் வலிய கரங்களைத் தொட,

''வீடு வந்துடுச்சு, யுக்தா,'' - என்று அவன் அவளுக்குச் சொல்ல, ''அதற்குள் வீடு வந்துடுச்சா...?'' என்று யுக்தா யோசனையுடன் வீட்டிற்குள் குதித்தோடினாள்.



# 16

யுக்தாவின் போக்கு நீலவேணிப் பாட்டிக்குச் சுத்தமாகப் பிடிக்கவேயில்லை.

கல்யாணமாகி விட்டால் எல்லாம் சரியாகிவிடும் என்று நினைத்தால், யுக்தாவிடம் ஒன்றுமே மாற்றத்தைக் காணும்.

மஞ்சள் கயிறு மேஜிக் ஒன்றுமே இந்தக் காலத்தில் பலிக்காதா? முதலிரவு அன்றே சிவப்புக் கொடியைத் தூக்கியது நீலவேணிப் பாட்டிக்கு வயிற்றைக் கலக்கியது. என்ன சொல்லி அவளைப் புரிய வைப்பது. அவருக்கு நெஞ்சு பிசைந்தது.

காலையிலேயே பரத்தைத் தேடி ஓட வேண்டுமா? என்ன பெண் இவள்! நிதின் முகத்தை நிமிர்ந்து பார்க்கக்கூட அவமானமாக இருந்தது நீலவேணிப் பாட்டிக்கு.

ஆயிற்று. இன்னும் மூன்று நாட்களில் லண்டனில் இருந்து நிதினின் மாமா வந்து விடுவார்கள். அதற்குள் இவர்களுக்குள் எல்லாம் ஒத்துப் போக வேண்டுமே. பயமாக இருந்தது அவருக்கு.

அதே நேரம் முகம் எல்லாம் சிவந்து கண்கள் மின்ன, இதழ்ச் சிரிப்பு உடைப்பெடுக்க ஓடி வந்து, ''பாட்டி...



செல்லப் பாட்டி...'' என்று கட்டிப் பிடித்துக் கொண்ட யுக்தாவைக் கண்டு பாட்டி திடுக்கிட்டுப் போனார்.

பரத்தைப் பார்த்துவிட்டு வந்ததால் வந்த கோலமா? இங்கே நிதினைப் பார்த்தாலே சண்டைக் கோழியாக அவள் சிலுப்புவதை அவர் அறிந்தேயிருந்தார். 'பரத்' அவளை இந்த அளவு மாற்றுகிறானா?

நீலவேணிப் பாட்டிக்குத் தலை கிறுகிறுத்தது. யுக்தா பரத்தைத் தேடி ஓடும் நிலையை நினைத்தால், வயிறு பற்றி எரிந்தது. கோபத்தில் சட்டென்று யுக்தாவை அவர் பிடித்துத் தள்ள, இரண்டடிகள் பின்னோக்கித் தடுமாறி நின்ற யுக்தா கண்களை விரித்தாள்.

இத்தனை ஆண்டு அவள் பார்த்த பாட்டி இப்படி ஒரு நாளும் அவளை விலக்கியது இல்லை. பிடித்துத் தள்ளியதும் இல்லை.

பேத்தியின் கண்களில் அடிபட்ட வேதனையைக் கண்ட நீலவேணிப் பாட்டிக்கு அழுகை வேறு அழையா விருந்தாளியாக வந்தது. சட்டென்று சோபாவில் முகத்தை மூடியபடி அழுதார்.

உருகிப் போனாள் யுக்தா.

பாட்டியிடம் ஏதோ கஷ்டம் இருக்கிறது என்று யுக்தா நினைத்தவள்தான். கேட்டவள்தான். அது கம்பெனி நஷ்டத்தில் ஓடுவதனால் என்று பாட்டி பதிலும் கொடுத்திருந்தார். ஆனால் பாட்டி இப்படி வெடித்துக் குலுங்குவதைப் பார்த்தால் யுக்தாவிற்கு ஒன்றும் புரியவில்லை.

''பாட்டி!'' என்று அந்த இரட்டை சோபாவில் அவருடன் யுக்தா அமர்ந்தாள்.

''சொல்லுங்க பாட்டி.. என்ன விஷயம்? சொல்லுங்க பாட்டி. இப்படி நீங்க அழறதைப் பார்த்தால் என்னால் தாங்க முடியவில்லை பாட்டி!'' அதற்குள் யுக்தாவிற்குக் குரல் உடைந்து போனது.

''நான் என்ன சொன்னாலும் செய்வாயா யுகி?'' - கண்ணீர்க் கண்களுடன் நீலவேணிப் பாட்டி தடுமாற்றமாகக் கேட்க,

''கேட்பேன் பாட்டி.''

''அப்ப அந்தப் பரத்தை மறந்துவிடு.''

அந்தச் சூழ்நிலையிலும் சிரிப்பு வந்தது யுக்தாவிற்கு.

நினைத்தால் தானே மறப்பதற்கு என்று மனதுள் நினைத்தவள் அதை வாய்விட்டுச் சொல்லலாம் என்று தொடங்குகையில்,

''யுக்தா... நீ பரத்தை மறந்து நிதினுடன் மனம் ஒத்து வாழ்ந்தால்... என் மகள்... என் மகள்... உன் அத்தை பைரவியின் வாழ்க்கையில் வழி பிறக்கும் என்று நம்புகிறேன், யுக்தா... அதனால்தான்...'' துடித்த உதட்டைப் பற்களால் கடித்து அழுகையை அடக்கிய நீலவேணிப் பாட்டி யுக்தாவின் கைகளைப் பற்ற,


யுக்தா ஒன்றும் புரியாமல் அதிர்ச்சியுடன் விழிகளை விரித்தாள். இந்த விஷயத்தில் அத்தை எங்கிருந்து வந்தாள்? சட்டென்று பல கேள்விகள் உயிர் பெற்றன. அவளின் சந்தோஷம் துணி கொண்டு துடைத்தது போல மறைந்து போயிற்று.



''அத்தைக்கும் நிதினுக்கும் என்ன சம்பந்தம் பாட்டி? எதையும் மறைக்காமல் என்னிடம் சொல்லுங்க.''

இவ்வளவு நாட்களாகப் பல முனைகளில் நின்று யோசித்த யுக்தா, இன்று நீலவேணிப் பாட்டி புதுசாக 'அத்தை' என்று காரணத்தை நிறுத்தவும், முற்றிலும் புரியாத விதமாக அவளின் அழகுத் தலை குழம்பியது.

ஆனால் பாட்டி சொன்ன கதை, அவள் கனவிலும் எதிர் பாராத கதை. அவளால் துளியும் நம்பவே முடியாத கதை.



# 17

எல்லாம் காதல் படுத்தின பாடு.

''யுகி, இருபது இருபத்தைந்து வருஷத்துக்கு முன்னால் எல்லாம் நீலவேணிப் பாட்டி ரொம்ப ஸ்ட்ரிக்ட் பாட்டி. என்னிடம் பேசுவதற்குகூட என் பிள்ளை பைரவி, நான் சொன்னதைத் தவிர வேறு எதையும் யோசிக்க மாட்டாள். அப்படிப்பட்ட பைரவி நான் வக்கீல் படிப்புப் படிப்பதற்காக அவளை இந்தியாவிலேயே உள்ள நல்ல கல்லூரியில் சேர்க்கணும்னு பெங்களூரில் உள்ள 'லா' காலேஜில் சேர்த்தேன். ஹாஸ்டலில் சேர்ந்து படித்தாள்.

எல்லாவற்றிலும் அவள் முதல் வந்தாள். ஆனால் ஒரே ஒரு தப்பு செய்தாள். என்னைப் பொறுத்தவரை அது பெரிய பெரிய தப்பு. கொஞ்சம் கூட என்னால் ஜீரணித்துக் கொள்ள முடியாத தப்பு...'' என்று நிறுத்தியவர்,

பைரவி காதலித்து விட்டாள்.

யுக்தா மலைத்து விட்டாள்.

''பாட்டி! எனக்குத் தெரிந்தவரையில் நீங்கள் காதலுக்கு எப்பொழுதுமே எதிர்ப்புச் சொன்னதில்லையே. பரத் காதல் என்று சொன்னபோதும் உடனே சரி என்றீர்களே.''

''ஆமாம், சொன்னேன். ஏன்னா... இருபது வருஷத்தில் நான் படித்த பாடம். என் மகள் எனக்குக் கொடுத்த தண்டனையில் படித்த பாடம். ஒரு முறை செய்த தப்பை ஜென்மத்தில் இனிச் செய்யக்கூடாது என்று நான் படித்த பாடம்.''

''ஏன் பாட்டி அத்தையோட காதலை எதிர்த்தீர்கள்?''

''அந்தக் காலத்தில் காதல் என்றாலே தவறான சொல் யுக்தா.

''அவள் என்னிடம் காதல் என்று சொன்னதும், நான் உஷாராகி விட்டேன். உலகமறியாத என் செல்ல மகளை யாரோ காதல் வார்த்தை பேசி மயக்கி என்னிடம் இருந்து பிரிக்கப் பார்க்கிறார்கள் என்று நினைத்தேன். பதினெட்டு, பத்தொன்பது வயதில் என்ன தெரியும்? உலகத்தில் நல்லது கெட்டது புரியுமா? பொதுவில் காதல் திருமணத்தில் எனக்கு உடன்பாடில்லை. காதல் என்று படிக்கிற காலத்தில் இள வயது வாலிபர்கள் பொழுது



போக்காகக் காதல் என்று வலை விரிப்பதைப் பார்த்திருக்கிறேன். என் பைரவியும் அந்த வலையில் விழுந்து விட்டாள் என்பதை என்னால் ஏற்றுக் கொள்ளவே முடியவில்லை.

''உடனே பைரவியின் படிப்பிற்கு முற்றுப்புள்ளி வைத்தேன். அந்தக் காலத்தில் தகவல் தொடர்பு இவ்வளவு வளர்ச்சியில்லை. லெட்டர், டெலிபோன் இதில்தான் கம்யூனிகேஷன். ஆனால் இரண்டுமே என் கன்ட்ரோலில் இருந்தன. அவனிடம் இருந்து அவளுக்கு வரும் லெட்டர், படித்துக் கிழித்தேன். போன் எடுத்து, அவள் வீட்டில் இல்லை என்றேன். எந்த முறையிலும் அவன் என் மகளைத் தொடர்பு கொள்ளாத வகையில், பொன் போல் பைரவியைப் பாதுகாத்தேன். அந்நாளில் நான் செய்த காரியம் ஒரு தனிக் கதை யுக்தா.

''என் மகளுக்குப் பிடித்ததையெல்லாம் அழகாகத் தேர்ந்தெடுத்து வாங்கி என் மகளை மகிழ்வித்த என்னால் அவளுக்கேற்றபடி மாப்பிள்ளை தேர்ந்தெடுக்க முடியாதா என்ற கர்வம் எனக்கிருந்தது. பிறகு ஒரு மாதத்திற்கு மேலாக வீட்டையே சுற்றிச் சுற்றி வந்தான் அந்தப் பையன். அவனிடம் பைரவிக்கு வேறு பையன் பார்த்தாகி விட்டது. சும்மா பொழுது போக்காக உன்னிடம் பழகினாளாம். கல்யாணம் என்றால் நான் பார்க்கும் பையனைத் திருமணம் செய்வேன் என்று விட்டாள் என்றேன் நம்பும்படியாக. இன்னும் நிறைய விஷயத்தை இட்டுக்கட்டிச் சொன்னேன்.

''உடனே, 'அதை அவள் வாயால் சொல்லச் சொல், போயே விடுகிறேன்!' என்றான்.

''நீ வந்தால் அவள் உன் முகம் கூடப் பார்க்க மாட்டாள். இப்போதே வந்து கேட்டுக் கொள் என்று அழைத்து வந்து பைரவியின் அறையின் முன் அழைத்துச் சென்றேன்.

''என்னால் மிகுந்த கவலையில் இருந்த பைரவி, நான் அவளுக்கு வேறு திருமணம் செய்து வைக்கப் போவதைச் சொல்லியிருந்ததால், என்னிடம் பேசவே மறுத்தாள்.

'''உன்னைத் தேடி யார் வந்திருக்கிறர் பார் பைரவி!'' என்று நக்கலாக நான் சொல்ல,

''பைரவி ஏதோ நான் அவளுக்காகப் பார்த்திருக்கின்ற மாப்பிள்ளை என்று நினைத்து, அப்படி ஒருவனை அழைத்து வருவேன் என்று ஏற்கெனவே நான் சொல்லியிருந்ததால்,

'''எனக்கு யாரையும் பார்க்க வேண்டாம். உன் மூஞ்சியிலேயே எனக்கு முழிக்க வேண்டாம். வெளியே வந்தால் செருப்பால் அடிப்பேன். என் அம்மா சொல்றதைக் கேட்டு என்னிடம் பேச வந்தால் நீ பைத்தியம்!'' - என்று கத்த,

'''ஏமாத்திட்டாயே பைரவி... என்னை ஏமாத்திட்டியே... இனி என் உயிர் உள்ள வரை உன் முகத்தைப் பார்க்க மாட்டேன். உன்னையல்ல, உன்னால் இந்தப் பெண்குலத்தையே வெறுக்கிறேன்.' கண்களில் கண்ணீர்த் திரையுடன் நம்ப முடியாத அதிர்ச்சியில் உடல் நடுங்க, அவன் பேச,

''தன்னுடைய காதலனைச் சிறிதும் எதிர்பார்க்காத பைரவிக்கு அவன் பேசியது மெல்ல மெல்ல மூளையை



எட்ட, அது புரிந்து அவள் வெளியே வருமுன் அவன் சென்றே விட்டான்.

''அதற்குப் பிறகு இத்தனை வருடங்கள் அவள் எதற்கும் பிடி கொடுத்துப் பேசவேயில்லை. கல்யாணம் என்ற பேச்செடுத்தாலே அலறி விடுவாள். எனக்குக் கடவுள் கொடுத்த வாழ்க்கை இதுதான். அந்த வாழ்க்கையை என்னிஷ்டம் போல வாழ விடுங்கள். இனித் திருமணம் என்ற பேச்செடுத்தால் நானே யிருக்க மாட்டேன் என்று அவள் மிரட்டிய மிரட்டலில் நான் பயந்து விட்டேன். அவள் மனதைப் பறிகொடுத்தவனைத் தேடினேன். கண்டே பிடிக்க முடியவில்லை. அவளை மேலே படிக்க வைத்தேன். அந்தப் பையன் சும்மா பொழுதுபோக்காகப் பழகியிருப்பான் உன்னிடம் என்று பலதும் பேசி அவளை மாற்ற நினைத்தேன். ஆனால் பைரவி மாறவேயில்லை.

''நான் செய்த தப்புக்கு, நான் மட்டும் தண்டனை அனுபவித்திருந்தால் பரவாயில்லையே. பைரவி அல்லவா தண்டனை அனுபவிக்கிறாள். இருவரும் ஒருவரை ஒருவர் மிகவும் நேசித்திருக்கிறார்கள். ஆனால் நான் பிரித்து விட்டேனே.''

''அப்போ... பாட்டி, நிதினின் மாமாவும் அத்தையுமா அந்தக் காலத்தில் ஒருத்தரை ஒருத்தர் விரும்பியது?'' கண்களில் யோசனையுடன் நெற்றியைச் சுருக்கியபடி கேட்க,

''ஆமாம் யுக்தா. கொஞ்ச நாட்கள் நிதினுடன் பழகியவுடனேயே எனக்குப் புரிந்து விட்டது. அவன் ஆபீஸில் நிதினும் அவன் மாமாவும் நிற்பது மாதிரி சின்ன போட்டோ மேஜையில் வைத்திருந்தான்.

''அப்பொழுதே மனசில் நிறையக் கணக்குகள் போட்டேன். ஆனால் கணக்குகளுக்கு விடைதான் பிடிபடவில்லை. யாரிடம் போய் என்னவென்று சொல்வேன்?

''அவர் திருமணமே செய்து கொள்ளவில்லை என்று அறிந்தேன். பெண்களென்றால் மாமாவிற்குப் பிடிக்கவே பிடிக்காது என்று பேச்சு வாக்கில் நிதின் சொன்னது கேட்டு எனக்கு அதிர்ச்சிதான்.

''அவர்கள் நாம் நினைத்துக்கூடப் பார்க்க முடியாதபடி, வானளவு உயர்ந்த இடம் என்று சொல்வார்களே... அப்படி ஒரு குடும்பம்.

''ஸ்ரீராம் பெங்களூர் காலேஜில் படிக்கும்போதுகூட அவருடைய அடையாளம் மறைவாகவே வைக்கப்பட்டிருந்திருக்கிறது. பைரவிக்கு ஸ்ரீராம் யார், என்ன என்ற விவரம் தெரியாது. தங்களைப் பற்றி மட்டுமே பேசியிருக்கிறார்கள். இத்தனை வருடத்தில் என்னால் ஸ்ரீராமைக் கண்டு பிடிக்க முடியாமல் போனதின் காரணம் இது தான்.''

பாட்டி கதை சொல்லச் சொல்ல, யுக்தாவிற்கு அது நிஜம் என்று உறைக்கவே சில நிமிடங்கள் ஆயின. அத்தையின் வாழ்க்கையில் இத்தனை பிரச்சனைகள் இருந்திருக்கின்றன என்று அவளுக்குத் தெரியாமலே போனது.

''ஸ்ரீராம் மாமாவையும், அத்தையையும்தானே நீங்கள் சேர்த்து வைக்க வேண்டும், பாட்டி. எதற்காகத் தேவையில்லாமல் நிதினுக்கும், எனக்கும் திருமணம் செய்ய வேண்டும் என்று ஒற்றைக் காலில் நின்றீர்கள்?''

இந்தக் கேள்வியைக் கேட்கா விட்டால் மண்டை வெடித்து விடும் போலிருந்தது யுக்தாவிற்கு.



''மெதுவாக நான் நிதினிடம் பழைய கதை சொன்னேன். பிரமித்துப் போய் விட்டான். பேச்சே கிளம்பவில்லை அவனுக்கு. அதிர்ந்து விட்டான். தனது மாமா காதல் தோல்வியால் திருமணம் செய்யாமல் போனார்கள் என்பது பயங்கர ஆச்சரியம். 'மாமா.. வா... என் மாமா... காதலித்திருக்கிறாரா...?' என்று மாறி மாறிக் கேட்டு வியந்து போனான்.

''இருவரும் இன்னும் யாரையும் திருமணம் செய்யாமலே இருப்பதுதான் இந்தக் காதல் கதையின் சிறப்பம்சம்.

'''ஆனால் மாமா மனசில் பெண்களிடம் அத்தனை வெறுப்பு உண்டு பாட்டி. 'சட்'டென்று அத்தையைக் கொண்டு நிறுத்தினால் பிரச்சனை பெரிதாகக் கூட வாய்ப்புண்டு. மாமா சுலபத்தில் யாரையும் நம்பும் பழக்கத்தில் இப்போது இல்லை. இடையில் பைரவி அவரை ஏமாற்றி விட்டார் என்று நினைத்துச் சிறிது காலம் சித்தம் கலைந்து ஸ்ரீராம் இருந்தது வேறு, இந்தப் பிரச்சனையை மிகவும் சீரியஸ் ஆக்கி விட்டது.

''அந்த நம்பிக்கையைப் பாழ் படுத்தியதே நான்தானே.

''நான் இப்படிக் கேட்கக் கூடாதுதான் நிதின். ஆனால் எனக்கு வேறு வழி புரியவில்லை...'' என்று திக்கி... ''பின் யுக்தாவை நீங்கள் திருமணம் செய்தீர்கள் என்றால், அந்த உறவு முறையில் உங்கள் குடும்பமும் என் குடும்பமும் இணையும். இப்படி இணையும் பட்சத்தில் ஸ்ரீராமும், பைரவியும் நேருக்கு நேர் சந்திப்பார்கள். அதன் பிறகு இருவரையும் சேர்த்து வைப்பது குடும்பத்தின் கடமையாகி விடும்!'' என்று சொல்லி...''

நீலவேணிப் பாட்டி வாக்கியத்தை நிப்பாட்டாமல் தடுமாற,


''சொல்லுங்க பாட்டி,'' என்று சொல்லி... யுக்தா ஊக்குவிக்க,

''உன் காலில் விழுந்த மாதிரி நிதினின் கால்களில் சாஷ்டாங்கமாக விழுந்து விட்டேன்.''

நெஞ்சு சுக்கு நூறாக உடைந்தது யுக்தாவிற்கு.

அவளை நிதின் காதல் கொண்டு மணக்கவில்லை.

சில மணி நேரங்களுக்கு முன் அவள் வாழ்க்கையில் சந்தோஷத்தின் உச்சியிலிருந்தாள்.



## 18

ஆனால், இப்பொழுது...

யுக்தாவின் கண்களில் கண்ணீர் நிற்காமல் வழிந்தது. மெல்லிய உதடு அழுகையில் துடித்தது.

நிதின் அவளைக் காதலித்து மணக்கவில்லை என்ற விஷயம் யுக்தா நெஞ்சில் பெரிய அடிதான். இந்தப் பாட்டியின் வற்புறுத்தலில் திருமணம் செய்திருக்கிறான். தன் மாமாவின் காதலைச் சேர்த்து வைக்கத் திருமணம் செய்திருக்கிறான்.



மண்ணுலகில் மனிதனின் வாழ்க்கை இறைவன் திருவிளையாடல். ஆனால் அவள் உலகத்தில் எல்லாமே நீலவேணிப் பாட்டியின் திருவிளையாடலாக அல்லவா போய் விட்டது.

ஃபெய்ரி டேல் கதை போலத் தன் கதையில் கதாநாயகனாக நிதின் வந்து விட்டானே என்று உள்ளம் பூரித்துப் போயிருந்த யுக்தா, இது ஒரு சந்தர்ப்பக் கல்யாணம்தான், காரணக் கல்யாணம்தான் என்றபோது கண்களிலிருந்து முத்து முத்தாகக் கண்ணீர் இறங்கியது.

கல்யாணப் பேச்சு எடுத்தவுடனேயே பாட்டி விஷயம் 'இது'தான் என்று சொல்லியிருந்தால், யுக்தா மிகவும் சந்தோஷமாக, முழுச் சம்மதத்துடன் நிதினுடன் திருமணத்திற்குச் சரி என்று சொல்லியிருந்திருப்பாள்.

காத்திருக்கும் 'பரத்'திடம் கூட அவளால் சுலபமாகப் பேசி, 'இனி, பரத்! திருமணத்திற்கு நீ வேறு பெண்தான் பார்க்க வேண்டும்!' என்று தீர்மானமாகச் சொல்லியிருப்பாள்.

சிறு வயதில் இருந்தே அலாதியான பிரியம் அத்தையிடம் உண்டு. தான் உண்டு, தன் வக்கீல் தொழில் உண்டு என்று ஒரு குறுகிய வட்டத்தில் செயல்படுபவர். அநாவசியமாக எந்த வம்பு தும்புகளிலும் தலையிட மாட்டார். ஆனால் யுக்தா என்றால் தனிப் பிரியம் அவருக்குண்டு. காலேஜ், ஸ்கூலில் பைரவியின் பல உதவிகளால் யுக்தாவிற்கு பாபுலாரிட்டி ரேட் எகிறிக் குதித்ததை அவளால் மறக்கத்தான் முடியுமா?

நாடகம், நடனம் என்றால் ஸ்கிரிப்ட் எழுதி, யுக்தாவுடன் இருந்து மற்றப் பிள்ளைகளுக்கு நடிப்புச் சொல்லிக்

கொடுப்பது, நடனம் ஆட கோரியோகிராபி பண்ணுவது, இதனால் எல்லா நாட்டிய நாடகத்திலும் யுக்தா தான் மெயின் ரோல். அந்தப் பெருமை யுக்தாவிற்குக் கிடைக்க வேண்டும் என்றே அவர் யுக்தா எது சொன்னாலும், ஓவியப் போட்டி என்றாலும், பரிசு அவளுக்குக் கிடைக்க ஓவிய 'தீம்' பற்றி 'இன்டர் நெட்'டில் ஃப்ரெளஸ் பண்ணி டாப்பிக்குக்கு ஏற்ற மாதிரி, டிரெண்டியாகவும், மெஸேஜிங் சொல்வது போலவும், ஓவியம் உருவாக்கி, யுக்தாவை பிராக்டீஸ் செய்ய வைப்பார்.

பல கலைகளில் யுக்தா சிறக்கப் பைரவியின் வழி காட்டுதல்தான் தொடக்கம் என்பதை அவளால் மறுக்க முடியாது.

ஆனால் சில சமயங்கள் யுக்தா யோசிப்பதுண்டு. அத்தை மனசு விட்டுக் கலகல என்று சிரிப்பதே இல் லையே! ஏன்? ஒருவேளை அத்தையின் சுபாவமே அப்படித்தானோ என்று முடிவு செய்திருக்கிறாள். ஆனால் இப்படி ஒரு பின் கதை பலமாக இருக்கும் என்று கனவிலும் அவள் நினைத்ததில்லை.

அத்தைக்காக உயிரைக் கொடு என்றால் கொடுக்கவும் யுக்தா ரெடிதான். சந்தோஷத்துடன்.

ஆனால் காதலுற்ற நெஞ்சு வெகுவாக அலை மோதியது. இப்பொழுது அவள் மனம் முழுக்க நிதின் நிறைந்திருந்தான். பிரதிபலிப்பாக அவன் மனதில் அவள் இல்லை என்ற விஷயம் அதிர்ச்சியாக இருந்தது. பாட்டியின் வேண்டுகோளுக்காகத் தன்னைத் திருமணம் செய்திருக்கிறான் என்பது அவளின் பெண்மைக்கு அவமானமாக இருந்தது.



அவள் மனம் அவன் பால் ஈர்க்கப்பட்ட விஷயம் அவனுக்குத் தெரிந்தால்... இன்னும் பெரிய அவமானம்.

ஏன் தெரிய வேண்டும்?

தெரியக் கூடாது...

தீர்மானித்து விட்டாள் யுக்தா.

தன் தவறை மறைக்கத்தான் பாட்டி, நிதின்தான் உன்னை மணக்கக் கேட்டான், விரும்பிக் கேட்டான்... என்று திரும்பத் திரும்பச் சொல்லி அவளைக் குழப்பி யிருக்கிறார்கள் என்று யுக்தாவிற்குப் புரிந்தது.

புரிந்த விஷயத்திற்கு முடிவுதான் இல்லையே!!!

அன்று நிதினும் இரவு சீக்கிரமே வீடு திரும்பினான்.

அவன் முகம் தீவிர சிந்தனையில் இருந்தது. யுக்தாவைப் பார்த்ததும் இதழ் வளைவுடன் ஓர் எட்டு அவள் புறமாக நகர, யுக்தா பின்புறமாக நகர, கண்களில் கூர்மையுடன் அவளை ஒரு நொடி பார்த்தவன், பின் சின்ன இதழ் வளைவுடன் தன் அறைக்குள் சென்று விட்டான். யுக்தாவிற்கு... ஏனோ... ஏமாற்றமாகயிருந்தது.

காதல் மனைவியை ஆசை தீர அணைத்துக் கொள் வான் என்று அவளும் எதிர்பார்க்கவில்லைதான். இருந் தாலும்... உயிரை மாய்க்கும் விஷத்தையும், உயிரை வாழ்விக்கும் அமுதத்தையும் கலந்துதான் இயற்கை இந்தக் காதலைப் படைத்திருக்கிறதா?

அந்தக் காலத்துக் காதலுக்குத்தான் எத்தனை வீரியம். காதலித்த மாமாவும், அத்தையும் நீலவேணிப் பாட்டியின் டபுள் கேமில் பாதிக்கப்பட்டு, ஒருவரை ஒருவர் வெறுத் தாலும், இத்தனை வருடங்களில் வேறு ஒரு துணையைத்

தேடிச் செல்லவில்லை என்பது யுக்தாவிற்குப் பெருமை யாக இருந்தது.

காதல் ஒருவிதப் போராட்டம்தான் போலும். ஆனால் அத்தைக்கு வாழ்க்கை முழுவதும் காதலில்லாத காதல் போராட்டமா?

யோசிக்க யோசிக்க, அத்தையின் வாழ்க்கை எத்தனை சூன்யமாகப் போய்க் கொண்டிருக்கிறது என்று புரிந்தது.

பாட்டி சொன்ன கதை, அதுவும் பாட்டியால் இத்தனை காலம் அரங்கேறியுள்ளது என்பது நம்ப முடியாமல் இருந்தது.

அன்று இரவுச் சாப்பாடு முடித்தவுடன் மூவரின் மாநாடு கூடியது.

நிதின், பாட்டி, யுக்தா.

மூவரின் நோக்கமும், பிரார்த்தனையும், பைரவியும் ஸ்ரீராமும் ஒன்று சேர வேண்டும் என்பதுதான்.

சின்ன வயதில் கருத்து வேறுபாட்டால் பிரிந்த காதலர்களைச் சேர்த்து வைப்பது எளிது. ஆனால் இத்தனை காலங்களாக மனதை மூடியே வைத்திருப்பவர்கள் மீண்டும் காதலை ஏற்பார்களா என்று புரியவில்லை. அதுவும் இருவரும் இத்தனை வருடத்தில் வேறொரு நினைப்பு, அந்தக் கால நிகழ்வுகள் என்று யாரிடமும் எதையுமே பகிர்ந்து கொள்ளாதது வேறு கொஞ்சம் சந்தேகத்தைக் கிளப்பியது.

ஆனால் நிதின் உறுதியாக இருந்தான். இருவரின் வாழ்க்கை, புதிதாக இன்னும் நிறையப் பொங்கும் காதலோடு தொடங்கும் என்பதில் தீர்மானமாக இருந்தான்.



யுக்தாவின் அருகில் இரட்டை சோபாவில் அமர்ந்தவன், தன் இயல்பாக யுக்தாவின் கைகளைத் தன்னுடைய கைகளில் எடுத்துக் கொண்டு,

''மாமா நாளை மறுநாள் காலை ப்ளைட்டில் லண்டனில் இருந்து டைரக்ட் ஆக மும்பை வருகிறார்கள். முதலில் சென்னையில் வேலையிருப்பதால் இங்கேதான் வருவதாக ஏற்பாடாகியிருந்தது. இப்போது வேறு விஷயமாக மும்பைக்கே 'டைரக்ட்' ஆகப் போகிறார்கள்.'' விவரம் சொன்னான்.

தன்னுடைய கைகளை அவன் பிடியிலிருந்து விடுவித்துக் கொள்ள அவள் செய்த பிரயத்தனம் பலனளிக்கவில்லை. அவளின் முயற்சியை உணர்ந்தவன் போல இன்னும் உறுதியாக அவள் கைகளைப் பற்றித் தன் தொடையில் வைத்துக் கொண்டு, யுக்தாவைப் பார்த்துப் புருவம் உயர்த்தினான். யுக்தாவின் இதயம் குதிக்க முகம் சிவந்தது. அவனின் சின்னப் பார்வையிலேயே அவள் தன்னை உணர்ந்தாள். உதட்டைப் பற்களால் கடித்தபடி தன்னை அடக்க,

அதற்குள் நீலவேணிப் பாட்டி, ''அப்படி என்றால், நாளையே நீங்களும் யுக்தாவுடன் மும்பை கிளம்ப வேண்டியதிருக்கும், இல்லையா?'' என்றாள். வார்த்தைகள் படபடப்பாக இருந்தன.

''ஆமாம் பாட்டி, நாளை மாலை ப்ளைட்டில் மும்பைக்கு யுக்தாவை அழைத்துச் செல்கிறேன். என்னுடைய வீட்டிற்கு இன்றுதான் கல்யாண விஷயம் பற்றிச் சொன்னேன்.''

''நிதின்! ஒன்றும் பிரச்சனையில்லையே...'' நீலவேணி பதட்டத்தில் குறுக்கிட,

''மாமாவைப் போல் நானும் திருமணம் வேண்டாம் என்று இருந்து விடுவேனோ என்று வீட்டில் எல்லோருக்கும் பயம். அதனால் திருமணம் செய்து கொள்வேன் என்றதும், அம்மாவிற்குச் சந்தோஷம்தான். இருந்தாலும் வருத்தம் இருக்கும்தான். ஆனால் காரணம்தான் பெரிதாக இருக்கிறதே. இப்போது அதைப் பற்றி விளக்கிச் சொல்லவும் முடியாது.''

அந்தக் 'காரணம்' என்ற வார்த்தைப் பிரயோகத்தில் நொந்து போனாள் யுக்தா. அவர்களுடைய கல்யாணத்தில் 'காரணம்' மட்டுமே இருந்திருக்கிறது. காதல் இல்லை... அவனுக்குக் காதல் இல்லை... நெஞ்சு வேக வேகமாக ஏறி இறங்கியது யுக்தாவிற்கு. சுவாசமும் துரிதமானது.

அவள் அருகில் இருந்தவன் அவளின் மாற்றங்களை உணர்ந்தான். அதன் காரணத்தைச் சரியாக அறியவில்லை. ஆகவே,

''எல்லாம் நல்லபடியாக முடியும், யுக்தா. உன் அத்தையும் மாமாவும் ஒரே பார்வையில் ஒன்றாக ஒருயிராக ஆகி விடுவார்கள். வரலாற்றில் பொறிக்க வேண்டிய காதல் ஜோடியாகி விடுவார்கள். மூடி வைக்கப்பட்ட காதல், அடக்கி வைக்கப்பட்ட காதலுக்குச் சக்தி மிக மிக அதிகம் யுக்தா!'' - என்று அவன் வெகு தீவிரமாகக் கைகளை ஆட்டி ஆட்டிப் பேச,

அனுபவப்பட்டவன் சொல்கிறான் என்று யுக்தா மனதினுள் நன்றாக அவனைத் திட்டினாள்.





## 19

யுக்தாவிற்கு எல்லாம் மிகவும் பிரமிப்பாக இருந்தது. தொடக்கமே பயங்கர ஆச்சர்யம்தான்! மும்பை ஏர் போர்ட் விமானத்தில் இருந்து இறங்கியதும் அங்கேயே தயாராக இருந்த இன்னொரு ஆறே யிருக்கைகள் கொண்ட சிறிய ரக விமானத்தில் அவளை அழைத்துக் கொண்டு போனான். முக்கால் மணி நேரப் பிரயாணத்தில் அவர்கள் இறங்கிய இடம் கண்டு யுக்தா பிரமிப்பின் உச்சியில் இருந்தாள். வார்த்தைகளுக்குள் அடங்காத ஆச்சர்யம்!

ஒரு உயர்ந்த கட்டடத்தில் அமைக்கப்பட்டிருந்த ஓடுபாதையில் அந்தக் குட்டி ப்ளைட் இறங்கியது. கீழே குனிந்து சுற்றிலும் பார்த்த யுக்தாவின் கண்கள் வெளியே தெரிந்த காட்சியைக் கண்டு சிலிர்த்தன.

சுற்றிலும் மலைகள் சூழ்ந்த இடம். நடுவே வீடுகள் அழகாக வரிசையாகக் கட்டப்பட்டிருந்தன. பெரிய பெரிய காலரிகள், பசுமையான விளை நிலங்கள், பூங்காக்கள், நியான் ஒளியில் ஒளிர்ந்த பிரமாண்ட ஷாப்பிங் மால்... இன்னும்... இன்னும் இது இந்தியாதானா என்ற சந்தேகத்தைக் கூட உண்டாக்கியது. அத்தனை சுத்தம் எல்லா இடமும்.

அழகிய விழிகள் பெரிதாக விரிய நிதினைத் திரும்பிப் பார்த்தாள் யுக்தா. அவன் உதடு பதிலாக மெல்லிய சிரிப்பை வசீகரமாக உதிர்த்தது.

''வெல்கம் டு ஸ்ரீ - ஸ்டீல் சிட்டி!'' – என்று கண்களில் மின்னல் வெட்டப் பேசியவன், யுக்தாவின் முகத்தில் தெரிந்த நம்ப முடியாத பாவனையைக் கண்டு,

''யுக்தா, ஸ்ரீ ஸ்டீல் குரூப் கம்பெனியைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறாயா?'' - அவளிடம் ஒற்றைப் புருவத்தை அழகாக உயர்த்திக் கேள்வி கேட்டான்.

''கேள்விப் படுவதாவது... மை காட்...'' கண்களை விரித்தாள் யுக்தா.

ஸ்ரீ ஸ்டீல் கம்பெனி, இந்தியாவில் முதல் நிலையில் இருக்கும் கம்பெனிகளில் ஒன்று. உருக்கு உற்பத்தி, மென்னிரும்பு, இரும்புத் தாது உற்பத்தி மற்றும் மின் உற்பத்தி உள்ளிட்ட பல்வேறு வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ள கம்பெனி. சுய மின் உற்பத்தி நிலையம், இரும்புத் தாதுச் சுரங்கம், நிலக்கரிச் சுரங்கம் என்று ஸ்ரீ ஸ்டீல் வளர்ச்சி அபரிமிதமானது. மூன்று நான்கு தலைமுறையாகச் செயல்பட்டு வரும் இந்த நிறுவனம் மேலும் பல்வேறு ஏற்றுமதி, இறக்குமதியிலும், நாட்டின் அன்னியச் செலவாணியைக் கணிசமாக உயர்த்தியுள்ளது.

இந்த ஸ்ரீ - ஸ்டீல்ஸ் கம்பெனியில் வேலை செய்பவர்கள் ஆயிரக் கணக்கானவர்கள். வேலை பார்ப்பவர்களின் குடும்பங்கள் வசதியாக வாழ்வதற்கு, அங்கே ஒரு மினி மாடெர்ன் நகரமே உருவாக்கியிருந்தார்கள். அந்த



நகரத்தில் சர்வதேசத் தரத்தில் பள்ளி, கல்லூரி, ஷாப்பிங் காம்ப்ளக்ஸ், பியூட்டி பார்லர், ஹோட்டல், ரெஸ்டாரெண்ட், கிளப், கேம் பார்க் என்று பலதும் இருந்தன. நவீனமாக.

யுக்தாவிடம் வார்த்தைகளால் விவரிக்கவே முடியாத ஒருவித உணர்ச்சி ஆக்ரமித்து அவளைக் கலங்கடித்தது.


இதைப் போல ஒரு திருப்பத்தை அவள் கனவிலும் எதிர்பார்க்கவில்லை.

அவனுடன் பழகிய இந்த நாட்களில் அவள் தானே அறிந்து கொண்டிருக்க வேண்டிய செய்திதான்! அவனுடைய பாவனையில், செய்கையில் கண்டு கொண்டிருக்க வேண்டிய விஷயம்தான்! ஆனால் அவள் தான் கண்ணையும், கருத்தையும் மூடிக் கொண்டு இருந்து விட்டாளே! அவனும் முழுதாக எங்கே மறைத்தான்? தன்னுடைய செக்யூரிட்டி ஆட்களைப் பற்றி அவளிடம் பேசித்தான் இருந்தான். ஆனால் அச்சமயம் அது காமெடி நிகழ்வு போலல்லவா அவளுக்குத் தோன்றியது.

அடி வயிற்றில் அவளறியாமல் பயம் கவ்வியது.

இவனையா... யுக்தா லூசு, மாங்கா மடையன், சோளக் கொல்லைப் பொம்மை என்று மனதில் நையாண்டி செய்தாள்?

அவள் கோமாளியாகிப் போனாளே!



# 20

அவள் மனதில் நிறையக் கேள்விகள் வரிசையாக எழுந்தன. அருகில் கம்பீரமாக நின்றவனிடம் பேசக்கூட முடியாமல், அதற்குள் அவளை வேடிக்கை பார்க்க ஆட்கள் நிறையப் பேர் சூழ்ந்தார்கள்.

வெள்ளை வெளேரென்று டிப்டாப்பாகத் தொப்பியுடன் யூனிஃபார்ம் அணிந்து நிறைய வேலையாட்கள் நின்றிருந்தார்கள். அதில் ஒருவன் அங்கிருந்த லிப்ட்டை இயக்க, இருவரும் கீழ்த் தளத்திற்குச் சென்றார்கள்.

நான்கு புறமும் கண்ணாடிகளால் ஆன லிஃப்ட்டில் டி.வி. ஓடியது. லிப்ட் கதவு திறந்த நொடி, நிதினின் கைகள் சட்டென்று அவளின் கரத்தை இறுக்கமாகப் பற்றின. புரியாமல் 'யுக்தா அவன் முகத்தை நிமிர்ந்து பார்த்தாள்.

அதற்குள், லிஃப்டின் கதவு முழுவதுமாகத் திறந்துவிட, அங்கு கேட்ட ஆரவாரமான சப்தத்தில் யுக்தா கண்களை விரித்தாள். லிஃப்ட் நின்ற இடம் வீட்டின் வரவேற்பறை. தன்னுடைய திருமணச் செய்தியை அனுப்பியிருந்திருக் கிறான். வரவேற்பாக மெல்லிய இதமான ஸாக்ஸபோன் இசை, கூடவே தமிழ்நாட்டின் பாரம்பரிய வாத்திய ஓசை காதை நிறைத்தது.



அரண்மனைகளில் போடப்படும் இருக்கைகள் போல ஆங்காங்கே நிறைய இருக்கைகள், அதில் நிறையப் பேர் பகட்டாக உடையணிந்து இருந்தனர்.

ஒவ்வொருவரின் முகத்திலும் ஒருவிதமான மலர்ச் சியும், கூடவே ஆராய்தல் பார்வையும் இருந்தது. நிதினின் தாய், தந்தை, தாத்தா, மாமா, அத்தை, சித் தப்பா, சித்தி என்று பெரிய உறவினர் பட்டாளமே நின்றிருந்தது.

அவனுடைய உறவினர் எல்லோரும் ஆவலாக யுக்தாவைத் தலை முதல் கால் வரை பார்க்க, யுக்தாவிற்கு உள்ளூர நடுக்கம் உண்டாயிற்று. அதை அவன் உணர்ந்திருக்க வேண்டும். அதை எதிர்பார்த்துத்தான் ஆதரவாக அவளுடைய கைகளைப் பற்றியிருக்கிறான்.

''கூல் யுக்தா, கூல்!'' - என்று அவளுக்கு மட்டுமே கேட்கும்படி முணுமுணுத்து, பற்றியிருந்த அவள் கைகளை ஆதரவாக அழுத்தினான்.

''என் மனைவி யுக்தா!'' - என்று அவளின் தோள்களைத் தன்னோடு சேர்த்து அணைத்து, பொதுவில் எல்லோருக் குமே அறிமுகம் செய்த நிதின் பின், ''என் அம்மா, அப்பா!'' - என்று அவன் சாயலில் இருந்தவர்களின் கால் களில் அவளையும் இழுத்துக் கொண்டு, ''ஆசிர்வாதம் பண்ணுங்க!'' என்று விழுந்தான். அதே போல ஜோடியாக மேலும் ஐந்து பெரியவர்களிடமும் காலில் விழுந்து ஆசிர்வாதம் வாங்கினார்கள் புதுமணத் தம்பதியர்.

வரவேற்பாக இருவரையும் கட்டியணைத்து உச்சி முகர்ந்தார்கள் பெரியவர்கள். அவர்களை உட்கார வைத்து ஆள் ஆளுக்கு மிகவும் நாகரிகமான ஆராய்தல்,

குறும்பு, விசாரணைக் கேள்விகளில் இறங்க, அந்த இடமே வெகு கலகலப்பாக மாறியது.

எல்லோரின் கிண்டல்களுக்கும் அழகாக ஈடு கொடுத்த நிதினை, யுக்தா ரசித்தாள், இரகசியமாக.

''முதலில் உன்னுடைய அறைக்கு அழைத்துப் போ, நிதின். பிரயாணக் களைப்பாக யுக்தா இருக்கிறாள். புது இடம், புது உறவுகள் இல்லையா? காலைச் சாப்பாட்டில் எல்லோரும் சந்திக்கலாம்,'' என்று நிதின் தாயார் யுக்தாவை அணைத்தபடி சொல்ல, சின்னத் தலையசைப்புடன் எல்லோரிடமும் விடைபெற்று நிதின் யுக்தாவை வரவேற்பறையின் மறுபக்கமாக அழைத்துச் சென்றான். அங்கிருந்த மற்றொரு லிப்ட்டில் இரண்டாவது மாடிக்குச் சென்றார்கள்.

''இந்தத் தளம் முழுவதும் நம்முடையது யுக்தா!'' என்று சொல்லிக் கொண்டே அவனுடைய படுக்கை அறைக்குள் நுழைந்தான் அவன்.

வீட்டின் பிரம்மாண்டத்தை அளவெடுத்துக் கொண்டே வந்தாள் யுக்தா.

''ஏன் உங்களின் அடையாளத்தை என்னிடம் மறைத்தீர்கள், நிதின்?'' - தனிமையில் விரல் நகங்களைக் கடித்தபடி யுக்தா கேட்ட முதல் கேள்வி.

''உனக்கு ஸர்ப்ரைஸ் கொடுக்க வேண்டும். என்னுடைய கல்யாணப் பரிசாக இந்த சர்ப்ரைஸ் இருக்கட்டும் என்று நினைத்தேன்!'' - அவளையே கண் இமைக்காமல், மார்பின் குறுக்காகக் கைகளைக் கட்டிக் கொண்டு, பதில் சொன்னான் நிதின்.



அந்தப் பதில் யுக்தாவிற்கு ஏனோ ஏமாற்றமாக இருந்தது...

என்ன எதிர்பார்த்தாள்...?

''நாளைக் காலை மாமா லண்டனில் இருந்து வருகிறார்கள். லண்டனில் நம்ம கம்பெனி ட்ரான்சாக்ஸன் எல்லாம் மாமாவோட கட்டுப்பாட்டில்தான் இருக்கிறது. பெரும்பாலும் மாமா தங்குவது லண்டனில்தான்,'' - என்று அவன் அவளிடம் மாமாவைப் பற்றிப் பேசினான்.

''அன்று ஹோட்டலில் நம்மைப் பார்த்தாரே... என்ன நினைப்பார்?'' - லேசான அவமானக் குன்றலுடன் யுக்தா பேச.

''நம்மைப் பற்றி அவருக்கு நினைக்கக்கூட நேரம் இருக்காது!'' - கண்களில் சின்னக் கேலியுடன் அவன் சொல்ல,

அவன் பேச்சு புரியவில்லை என்ற பாவனையில் யுக்தா அவனை நிமிர்ந்து பார்த்தாள்.

''நாளை மாமா வரும் அதே நேரம் பாட்டியும், நம் இருவருக்கும் விருந்து என்று சொல்லி அத்தையையும் உடன் அழைத்து வருகிறார்கள். கடந்த ஒரு மாதத்திற்கும் மேலாக பாட்டி காய்களை இந்த இலக்கு நோக்கித்தான் நகர்த்தியிருக்கிறார்கள். மாமா உன் அத்தையைப் பார்த்துவிட்ட பிறகு நம்மைப் பார்க்க அவர் கண்களுக்கு அவகாசம் இருக்கும் என்று எனக்கு நம்பிக்கையில்லை!'' - கண் சிமிட்டினான், இதழில் இலகுவான புன்னகையுடன்.

“ஒருவேளை மாமாவும், அத்தையும்... நாம் நினைத்தது போன்று ஒன்றும் நடக்காமல் போனால்...” - ஆட்டத்தின் மறுபக்கத்தின் முடிவு என்னவாகும் என்று யோசனையுடன் யுக்தா கேட்க,

“ம்ம்ம்...” என்று தொடங்கியவன்,


“அப்படி நடப்பதற்குச் சாத்தியக்கூறு மிகவும் குறைவு. எங்கள் குடும்பத்தில் காதலுக்கென்று தனியிடம் உண்டு யுக்தா. மனதில் ஒருவரை வரித்து விட்டால் அந்த உறவு உயிர் உள்ளவரை மறையாது. அந்த நம்பிக்கையில்தான்...” கண்களில் தீவிரத்துடன் நிதின் பேச, தன் காதலில் கொஞ்சமேனும் யுக்தாவிற்கு நம்பிக்கையிருந்திருந்தால் அவள் பதில் கேள்வி தொடுத்திருக்கலாம். “உங்கள் காதல் எப்படி?” என்று. நிறைய விஷயங்கள் தெளிவுபட்டிருக்கும். யுக்தா - நிதின் இருவரின் மன உளைச்சல்களுக்கும் தீர்வு காணப்பட்டிருக்கும். யுக்தாவின் மனதில் தெளிவாக என்ன சிந்தனையிருக்கிறது, அவள் தன்னை எந்த அளவு நேசிக்கிறாள் என்பது புரியாமல், தெரியாமல், நிதின் தன் மனதைத் திறக்கப் பயந்தான். காதல் மென்மையானதுதான். மிகவும் ஜாக்கிரதையாகக் கையாளப்பட வேண்டிய உணர்வு.

அரும்ப, மலர, காய்க்க, கனிய ஒரு காலம் இருப்பது போல், காதலை அடையவும் காலம் வரும்வரை காத்திருக்க வேண்டும்.

எவ்வளவு படித்திருந்தாலும், பெரிய புத்திசாலியாக இருந்தாலும், பெரும் பணக்காரனாக யிருந்தாலும் பிஸினஸில் புலியாக யிருந்தாலும், இந்தக் காதலென்று ஒன்று நிதினின் நெஞ்சில் புகுந்து அவனை இல்லாத பொல்லாத துன்பங்களுக்கு உட்படுத்தியது.



யுக்தாவின் மனதிலே பல கேள்விகள் பதில் கிடைக்காமல் கோபித்துக் கொண்டு நின்றன. அதனால் யுக்தாவால் அவனருகே இயல்பாகவே யிருக்க முடியவில்லை.



## 21

இத்தனை இராஜபோக வாழ்க்கை வாழ்பவனின் மாமாவையும், அத்தையையும் சேர்த்து வைக்க, அவர்கள் இருவரும் ஏன் கல்யாணம் செய்து கொள்ள வேண்டும் என்ற கேள்வி யுக்தாவைப் பெரிதும் துளைத்தெடுத்தது. இது நாள் வரையிலும் பாட்டி அதைச் சொன்னார்கள், பாட்டி இதைச் சொன்னார்கள் என்ற எண்ண ஓட்டத்திலேயே சிந்தனையை ஓட விட்டவளுக்கு, இப்பொழுது தான் அவளின் திருமணத்தின் வீரியம் உறைத்தது.

இது என்ன கல்யாணம்..??

இவர்கள் இருவரும் சேர்ந்தால்தான் அவர்கள் இருவரும் சேருவார்களா?

அது என்ன லாஜிக்?

எங்கோ லாஜிக் இடிக்கிறதே.

ஏதோ பெரிய பட்ஜெட் சினிமா படத்தின் செட்டிங் போலிருந்தது நிதினின் அறை. அங்கிருந்த வார்ட்ரோப்பில் வெள்ளையான புத்தம் புதிய டவலை மாற்றுத்

துணியோடு எடுத்தவன், அறையின் மறு பக்கத்தைச் சுட்டிக் காட்டினான். ''அங்கே இன்னொரு பாத்ரூம் இருக்கு, யுக்தா. உனக்கு வேண்டியது எல்லாம் இதோ இந்த வார்ட்ரோப்பில் இருக்கிறது!'' என்று சுட்டிக்காட்டி விட்டு அவன் செல்ல,

யுக்தா உதட்டைக் கடித்தபடி அதே சிந்தனையோட் டத்தில் பாத்ரூமில் நுழைந்தாள்.

பாட்டி நிதினின் காலில் விழுந்து, கெஞ்சி அல்லவா அவளை, அவனுக்கு மணமுடித்து வைத்திருக்கிறார்கள். ச்சேசே... என்ன அவமானம். அந்தச் செய்தி அவள் ஜென்மத்திற்கு மறக்குமா..?

இவனுடன் இந்த அறையில் அவளால் எப்படி இருக்க முடியும்?

அவனிடம் இதைப் பற்றிப் பேச வேண்டும் என்ற முடிவோடு ஷவரைத் திறந்தாள் யுக்தா.

குளித்து உடைமாற்றிய யுக்தா நைட்டியுடன் அவன் முன் நிற்கப் பிடிக்காமல், அவளுக்குப் பிடித்தமான இளஞ்சிவப்பு நிற காட்டன் சல்வாருக்கு மாறினாள். அது அவளின் ஏற்ற இறக்கங்களை அற்புதமாகக் காட்சியாக்கு வதை உணராமல்.

அறையின் ஃப்ரஞ்ச் விண்டோவைத் திரைச் சீலையை நீக்கிவிட்டுத் திறந்தாள் யுக்தா. பெரிய பால்கனி. அதில் தொட்டிகளில் மலர்க் கண்காட்சி போல வண்ண வண்ண ரோஜாக்கள் பூத்துக் குலுங்கின. வெளியே சுற்றிலும் பச்சைப் பசுமையான புல்வெளி, பலவிதமான மரங்கள்.

இயற்கை...!!



இடையே ஆற்று ஓட்டத்தின் சலசலப்பு.


எத்தனை அழகு! சில்லென்று முகத்தில் மோதின காற்று. காற்றோடு கலந்து வந்த கலவையான பூக்களின் வாசம், நிலா வெளிச்சம், ஓடையின் சலசலப்பு, இத்தனை யும் யுக்தாவிற்கு ஒருவித மயக்கத்தை, போதையைக் கொடுத்தன.

அறையின் வாசலில் நின்று, யுக்தாவைக் கண் சிமிட்டி மறந்து போய்ப் பார்த்தான் நிதின். அவனின் கனவுத் தேவதை. இதுவரை எந்தப் பெண்ணைக் கண்டும் சலனப்படாதவன். யுக்தாவின் ஒரே பார்வையில் அவன் தலை குப்புற விழுந்த கதை அவளுக்குத் தெரியுமா?

ஸ்ரீ நிதின் - யுக்தா கல்யாணச் செய்தி, அந்த நகரம் முழுவதும் அதற்குள் தெரிந்துவிட, வாண வேடிக்கையும் பட்டாசுமாக, இரவு நேரத்தில் அந்த நகரமே விழாக் கோலம் பூண்டது.

வானத்தில் திடீரென்று சரம் சரமாகப் பலவித வண் ணங்களில் இடைவிடாமல் வாண வேடிக்கை நடக்க, யுக்தாவின் அழகிய விழிகள் விரிந்தன. எதற்காகத் திடீ ரென்று வாண வேடிக்கை...? மனதினுள் எழுந்த கேள் வியை நிதினிடம் கேட்கத் திரும்பிய யுக்தா... ''டமார்...'' - என்று பேரொளியாக ஒலித்த, முதல் வெடிச் சப்தத்தை அந்த அமைதியான சூழ்நிலையில் சற்றும் எதிர்பார்க்காததால், பதற்றத்தில் நிலை தடுமாறி விழ, நிதினின் வலிமையான கைகள் யுக்தாவைத் தாங்கின. அந்தத் தீண்டலில் யுக்தாவின் முகம் சிவக்க, நிமிர்ந்து கணவனின் முகத்தைப் பார்த்தாள். அவன் கண்களில் இருந்த வேட்கையில் அவள் முகம் மேலும் சிவந்தது.

அதன்பின் அந்தக் கைகள் அவளை விடவேயில்லை. கணவன் என்ற அடையாளத்தைக் கழுத்திலே தாங்கி நெஞ்சிலும் அவனுக்கு முழுமையான இடம் கொடுத் திருந்த யுக்தா, நெஞ்சு 'படபடக்க' அவன் கைகளில் இருந்து விடுபடச் செய்த முயற்சிகளை, அவன் கைகளும், உதடுகளும் முறியடித்தன. அதன் இரகசிய பாஷையில் செவ்வானமாகச் சிவந்த யுக்தா தன்னையும் அறியாமல் அவன் நெஞ்சில் ஐக்கியமானாள். அவளறியாமல், அவள் கைகள் தன்னிச்சையாக அவன் கழுத்தில் மாலை யாக மாறின. அதை உணர்ந்து நிதினின் அணைப்பு சுகமாக இறுகியது.



# 22

மறுநாள் காலை விடிந்து வெகு நேரம் கழித்து இன்டர்காம் ஓசையில் இருவரும் வேகமாக எழுந்தார்கள். கண்களில் குறும்புடன் நிதின் யுக்தாவைச் சிறைபிடிக்க, யுக்தாவைக் கலவையான உணர்ச்சிகள் தாக்கின. 'நேற்றைய இரவு உணர்ச்சிகளின் சங்கமமா? காதலின் சங்கமமா?' என்ற கேள்வி அவளை உலுக்கியது.

காதலின் சங்கமம் என்றால் அவன் ஒரு முறை கூடக் காதலைப் பற்றி உச்சரிக்கவேயில்லையே... 'சட்' என்று கண்களில் கண்ணீர் தளும்பியது.



நிதின் நெற்றியைச் சுருக்கினான்.

அவள் கண்களின் கண்ணீர் அவனைச் சுருட்டியது. ஏன்? அவனைப் பிடிக்காமல் ஏற்றுக் கொண்டாளா? இந்தக் கண்ணீரின் அர்த்தம் என்ன? அவனை விட்டு விலகி ஓடிச் சென்ற யுக்தாவைக் கண்கள் இடுங்கச் செய்வதறியாமல் பார்த்தான் நிதின்.

அன்று.....

ஒரு பார்வைப் பரிமாற்றத்தில் பைரவியும், ஸ்ரீராமும் சிலைகளாக மாறி விட்டனர். முகம் பலவிதமான வர்ண ஜாலங்களையும் காட்டி உணர்ச்சிப் பிழம்பானது. சில நிமிடங்கள் நீடித்த அந்த அதிர்ச்சியிலிருந்து மீண்ட பைரவிக்கு நிற்கவும் முடியாமல் கால்கள் தொய்ந்து மடங்க, தரையில் சரிய ''பை..ர...வி..'' - என்று அடித் தொண்டையிலிருந்து வார்த்தைகள் சீற, மின்னலின் விரைவுடன் அவளைத் தாங்கியது ஸ்ரீராம்.

ஸ்ரீராமின் அந்த அசைவில் காதலின் வீரியத்தை உணர்ந்த நீலவேணிப் பாட்டி கண்களிலிருந்து கண்ணீர் மடமடவென்று சொட்ட, இத்தனை வருடங்களாகப் பெண்ணுக்குச் செய்த துரோகத்தில் அழுந்தியிருந்த இதயம், லேசானது. அவர்கள் இருவரையும் தனிமையில் விட்டு விட்டு, மொத்தக் குடும்பமும் கண்களில் உணர்ச்சி மயமான கண்ணீரோடு வெளியேறியது.

அங்கே வரலாற்றுக் காதல் கூடியது.

அத்தைக்காக சந்தோஷத்தின் உச்சியில் மிதந்த யுக்தா, கண்களில் கூரிய பார்வையுடன் நெருங்கிய நிதினைக் கண்டதும், அந்தப் பார்வையில் வெறுப் பையும் எரிச்சலையும் கண்டதும் திகைத்துப் போனாள். அவன் கைகளில் அவளுடைய செல்போன்.

''பரத் லைனில் இருக்கிறான்!'' - என்று பேசியவன் பார்வையில் இருந்த கோபத்தை, குரோதத்தை, வெறுப்பை, நிதினுடனான இத்தனை நாட்கள் பழக்கத்தில் இதுவரை யுக்தா கண்டதில்லை.

நெஞ்சு திடுக்கிட்டுப் போனாள்.

ஏன்?

ஏனிந்த வெறுப்பு அவளிடம்?

திடீரென்று?

நெஞ்சு திணறியது! காரணம் என்னவென்று அறியாமல், கண்கள் கலங்க போனில்,

யுக்தா பேச, மறு முனையில்,

''யுக்தா, எப்படியிருக்கே? இங்கே எனக்கு இப்போது தான் நான் செய்த உலக மகாத் தப்பு புரிகிறது. எத்தனை ஈ மெயில் யூனிவர்சிட்டிக்கு அனுப்பியும் பதில் ஈ மெயில் வரவேயில்லையே, யுக்தா? எனக்கு இப்போது வாழ்க்கையை நினைத்தால் பயமாக இருக்கிறது. அம்மாவிற்கும் தங்கைக்கும் என்ன பதில் சொல்வேன்? எத்தனை கனவுகளுடன் நான் பெரிய பட்டத்துடன் பெரிய வேலையில் ஏறுவேன் என்று கனவு கண்டு கொண்டிருக்கிறார்கள். எல்லாத்தையும் நாசமாக்கி விட்டேன், யுக்தா!'' என்று கிட்டத்தட்ட அழுகையில் அவன் பேச,

அவனுடைய மனநிலை உணர்ந்த யுக்தா, அவனைச் சமாதானப்படுத்த,

''எல்லாம் சரியாகிவிடும், பரத். கவலைப்படாதே. நடந்தது நடந்து விட்டது. அதைப் பற்றியே நினைத்துக் கொண்டு கவலைப்பட்டால் எல்லாம் சரியாகி விடுமா? உனக்கு நானிருக்கிறேன். இனி நடப்பது நல்லதாக நடக்கும். அதற்கு நான் பொறுப்பு...'' என்று யுக்தா பேசப் பேச, இங்கே நிதின் முகம் முற்றிலும் வெளிறிப் போனது.



முகம் இறுக அறையை விட்டு வெளியேறினான் அவன்.

....................

ஸ்ரீராம் ஏதோ வேலையாக டெல்லி கிளம்ப, பைரவியும் அவருடனே சென்று விட்டார். இருவரின் நெருக்கத்தையும், அன்பையும், பொருத்தத்தையும் பார்த்து, மொத்தக் குடும்பமுமே வியந்து போனது.

அவர்களின் ஒவ்வொரு செய்கையிலும் 'நீயில்லாமல் நானில்லை!' என்ற உன்னதமான விஷயம் வெளிப்படுத்தப்பட்டது.

நீலவேணிப் பாட்டி கம்பெனி வேலை என்று சென்னை திரும்பி விட்டார்.

நாட்கள் மெல்ல நகர்ந்தன.

இங்கே,

யுக்தாவும் நிதினும் ஒரே அறையைப் பகிர்ந்து கொண்டாலும், ஒவ்வொரு திக்கில் பயணித்தார்கள். பெரிய குடும்பத்துப் புதுமணத் தம்பதியராக ஒரு சில வீடுகளுக்கு - இல்லை, மாளிகைகளுக்கு விருந்து உபசாரத்திற்குச் செல்ல வேண்டிய நிர்பந்தமும் ஏற்பட்டதுதான்.

நிதின் தாயார் வீட்டில் நிதின் - யுக்தாவிற்காகப் பெரிய அளவில் ஒரு ஞாயிற்றுக் கிழமை பார்ட்டி

கொடுத்தான். வந்திருந்த அனைவரும் பெரிய பெரிய பதவியில் இருப்பவர்கள். எல்லாவற்றிலும் இருவரும் மனம் ஒத்த தம்பதியராக நடந்து கொண்டார்கள்.

ஆனால் நிதின் அவளிடம் பேசுவதைக் குறைத்தான்.

நிதினைக் கண்களால் பார்ப்பது கூட மிகவும் அரிதான விஷயமாகிப் போனது.

அவன் எப்பொழுது தூங்குகிறான், போகிறான் என்று கூட யுக்தாவால் சொல்ல முடியாமல் போனது. காலையில் எழுகையில் பக்கத்துப் படுக்கையின் சுருங்கல் அவன் வந்து போனதை உணர்த்தும். அவ்வளவு தான்.

'இந்தக் கண்ணாமூச்சி விளையாட்டு ஏன்? ஏன்? ஏன்?' என்று மனதில் யோசித்தவளுக்கு ஏன் என்று புரியவில்லை.

இங்கே பரத்தின் புலம்பல்கள் கொஞ்சம் அதிகமாக இருந்தன. இடையிடையே செல்போனில் அவனுடைய எதிர்காலத்தைப் பற்றிய பயத்தில், மேலே வேறு என்ன செய்வது என்று யுக்தாவிடம் டிஸ்கஸ் செய்தான்.

நிதின் தாய், தந்தை மற்றும் அந்தக் கூட்டுக் குடும்பத்து உறவினர்கள் எல்லோரும் தோழமையுடன் பழகினார்கள். சொல்லப் போனால் அவளை இராஜகுமாரியாக உணர வைத்தார்கள்.

அன்று அவளுக்கு ஒரு பெரிய 'பொக்கே' சிவப்பு ரோஜாக்களைச் சுமந்து கொண்டு வந்தது.

பரத்.



'தாங்க்ஸ்! பரத்!' என்ற வார்த்தைகளைத் தாங்கியபடி. அந்த வார்த்தைகளில் 'பரத்'திற்கு மீண்டும் படிப்பதற்கு அந்த யூனிவர்சிட்டி அழைப்பு விடுத்து விட்டதை யுக்தா உணர்ந்தாள்.

வேலையாட்களின் உதவியுடன் அவள் அறைக்குள் பொக்கே வந்த சமயம் நிதினும் உடன் இருந்தான். 'பொக்கே'யைக் கண்டதும் ஒற்றைப் புருவத்தை உயர்த்திய நிதின் அதில் பரத் என்ற பெயர் தெரிந்தவுடன் அவன் முகம் கடினமாகியது. இடுங்கிய கண்களுடன் யுக்தாவை நிமிர்ந்து பார்த்தான். நெஞ்சம் சுருக்கென்று சுருங்கியது. காரணம் யுக்தாவின் முகத்தில் தெரிந்த மலர்ச்சி.

சிவப்பு ரோஜாக்களைப் பரிசளிக்கும் அளவுக்கு யுக்தா அவனை அனுமதித்திருக்கிறாளா? பரத்தின் பெயரைக் கண்டதும் அவள் முகத்தில் மலர்ச்சி! அவனால் தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ளவே முடியவில்லை.

தன்னை முழுமையாக ஆக்கிரமித்த யுக்தா, அவனைக் கொல்லாமல் கொன்று புதைத்து விட்டாள். மலர்க் கொத்துக் கொடுக்கும் அளவுக்கு இன்னும் அவன் தொடர்பு இருப்பது அவனைக் கடுமையாகப் பாதித்தது.

நிதினிடம் பேசுவதற்குக் காரணங்களை யோசித்துக் கொண்டிருந்த யுக்தா, பூக்களை உதவிக்கு அழைத்துக் கொண்டாள்.

''பரத், எத்தனை அழகான...'' என்று நிதினை இம்சிக்கவே பிறந்த சிவந்த இதழ் வளைவுடன் பேசத் தொடங்க,

தன்னை மீறிய கோபத்தில் வேகமாக அந்த பொக்கேயைத் தட்டி விட்டு, யுக்தாவை எரிப்பது போன்ற உக்

கிரத்துடன் பார்த்துவிட்டு, வேகமாக ஒன்றும் பேசாமல் நகர்ந்தான்.

திகைத்துப் போனாள் யுக்தா.

ஆதி மனிதனின் கோபம் நிதின் முகத்தில் கண்டு யுக்தா பயந்து போனாள். இது பண்பட்ட மனிதனின் நடவடிக்கை இல்லையே... என்று பித்துப் பிடித்தது போல் நின்றாள்.

ஆனால்... ஏன் இவ்வளவு கோபம்? எந்த அளவுக்கு அவள் மீது வெறுப்பு இருந்திருந்தால், அவள் பேச... பேச... அந்தப் பூக்களையும் வீசி எறிந்து விட்டுப் போவான். அவள் இங்கே இருப்பது அவனுக்குப் பிடிக்க வில்லையா?

அவள் பெயரில் ஒரு சொட்டு அபிமானமும், மரி யாதையும் கூடவா... கிடையாது? இதில் காதல் இல் லையே என்று அவள் தவிப்பது கேலிக் கூத்தல்லவா?

அவளின் தற்போதைய நிலைதான் என்ன? அவ னுக்குப் பிடிக்காதவளாக, பாரமாக அங்கே அந்த அறைக் குள் நிற்பது நெருப்பில் நிற்பது போல அவளை எரித்தது. இத்தனை வெறுப்பா அவள் மேல்?

அத்தையும் மாமாவும் ஒன்றாகச் சேர்ந்த பிறகே அவன் போக்கில் நிறைய மாறுதல்களை அவளால் உணர முடிந்தது. அவளை நிறையச் சந்தர்ப்பங்களில் அவன் அவாய்ட் செய்திருக்கிறான். நேற்று நடந்த சம்பவம் கூட ஒரு காட்சியும் பிசகாமல் நினைவில் மோதியது.





# 23

வீட்டின் முப்பது பேர் அமர்ந்து பார்க்கக் கூடிய ஹோம் தியேட்டரில் சமீபத்தில் திரைக்கு வந்து வெற்றிகரமாக ஓடிக் கொண்டிருக்கும் தமிழ்த் திரைப்படம் திரையிடப்பட்டது.

வீட்டில் நிதினின் அத்தை, சித்தப்பா, பெரியப்பா பிள்ளைகள் எப்பொழுதும் ஏதாவது குறும்பு பண்ணு வதில் குறியாக இருப்பவர்கள். அதிலும் நிதினையும், யுக் தாவையும் வார்த்தைகளாலே முகம் சிவக்க வைப்பார்கள். படம் பார்க்கப் பின்புறம் ஓரமாக நிதின் அமர்ந்துவிட, யுக்தா அவனைத் தாண்டி உட்புறமாக அமர வேண்டும். அப்படி அமரப் போனவளை நிதினின் பெரியப்பா பெண் யுக்தா முதுகில் நெட்டித் தள்ள, அவள் அப் படியே நிதினின் மடியில் விழுந்தாள்.

''நிதின்! நல்ல லவ் ஸ்டோரி. யுக்தாவை மடியிலேயே வைச்சிட்டுப் பார். நாங்க கண்டுக்கவே மாட்டோம்!'' என்று கண் அடித்து விட்டு, அவள் முன்புற சீட்டில் போய் அமர்ந்துவிட,

ரோஜாப் பூக் குவியலாக மெத்தென்று அவன் மேல் கன்னம் செம்மையுற விலக நினைத்தவளை அவன் விலக்கிய விதம் அவளுக்கு அவமானமாக இருந்தது. அவன் அறியாமல் கன்றிச் சிவந்த முகத்தை மறுபுறம்

திரும்பித் தன்னை நிலைப்படுத்திக் கொள்ள அவளுக்குக் கணிசமான நேரம் தேவைப்பட்டது.

கடவுளே...

அந்த நொடியில் அவளுக்கு விழிப்பு வந்தது....

அத்தையும் மாமாவும் ஒன்று சேர்வதற்காக அவளைத் திருமணம் செய்தவனுக்கு, அந்தக் காரியம் சுலபத்தில் நிறைவேறி விட்டதில் அவர்களின் திருமணம் ஒரு தேவையற்ற நிகழ்வாகிப் போயிற்றோ... மூச்சு முட்டுவது போல இருந்தது யுக்தாவிற்கு. உடனே பாட்டியிடம் போக வேண்டும். அவர் மடியில் முகம் புதைக்க வேண்டும் என்று அவரின் அருகாமையை, அவர் தரும் பாதுகாப்பைத் தேடி மனம் விரைய...

எவ்வளவு லேட்டாக அவளுக்கு விஷயம் புரிந்திருக்கிறது. இனி நிதினுக்கு அவள் தேவையில்லையே. பல விஷயங்களில் அவன் அவளுக்கு அதை உணர்த்தியிருக்கிறான். அவளுக்குத்தான் புரியும் மனநிலையில்லை. தானாகவே புரிந்து விலகுவாள் என்று நினைத்திருப்பானா? நெற்றிப் பொட்டில் விரலை அழுத்தியபடி சோபாவில் பொத்தென்று விழுந்தாள் யுக்தா.

நீலவேணிப் பாட்டி...

பாட்டி...

என்று யுக்தாவின் மனம் அழுகையில் குமுறியது. பாட்டியின் பாதுகாப்பை மனம் தேடியது. அன்று நிறைய யோசித்தாள் யுக்தா.

ஆக மாமாவின் காதலைச் சேர்க்க வேண்டும் என்ற ஒரு காரணத்திற்காகத் திருமணம் புரிந்தவனாயிற்றே.



தேவையில்லாத தொல்லை என்று நினைக்கிறானோ?

அவன் முகம்தான் பல நூறு கதைகளைச் சாட்சியாகச் சொல்கிறதே,

அவள் அங்கே இருப்பதா - போவதா?

டைவோர்ஸ் கேட்பானா?

பிடிக்காத கல்யாணத்தில் பலவந்தப் படுத்தி விட்டார்கள் என்பானா?

கடவுளே!

பாட்டி...

என்னைக் கொன்று விட்டீர்களே...

கண்கள் மீண்டும் குளம் சொட்ட, அதற்குள் செல் போன் மணியடிக்க எடுத்தவள் பரத் இரைய, தொண்டையைச் செருமியபடி 'ஹலோ' என்றாள் யுக்தா.

''யுக்தா... யுக்தா...'' - என்று சந்தோஷமாகக் கூச்சலிட்டான்.

''கங்ராட்ஸ் பரத். 'பொக்கே' காலையில் கிடைத்தது. உனக்குப் போன் பண்ணலாம்னு நினைச்சேன். 'டைம்' இல்லை. நீயே போன் செய்யறே!'' - கஷ்டப்பட்டு வருவித்த குதூகலமான குரலில் யுக்தா பேச,

''ஐ யம் ஸோ ஹாப்பி யுக்தா. நாளையே யு.எஸ். கிளம்புகிறேன். பாம்பே வந்துதான் யு.எஸ். கனெக்டிங் ஃப்ளைட் எடுக்கிறேன். நாம மீட் பண்ணலாம்.''

''ஏர்போர்ட் பக்கத்தில் 'பீச்' ரெஸ்டாரண்ட்டில் மீட் பண்ணலாம். உனக்கு எத்தனை மணிக்கு யூ.எஸ். ப்ளைட்? எத்தனை மணிக்கு நீ மும்பை வந்து சேருவே?''

அவன் பதில் சொல்ல, இரவு 7 மணிக்கு அவனை ரெஸ்டாரெண்டில் மீட் பண்ணுவதாகச் சொன்னாள் யுக்தா.

பரத்திற்காகக் கொஞ்சம் சந்தோஷப்பட முடிந்தது.

அவளால் அநாவசியமாகப் பரத்தின் படிப்பு, எதிர் காலம் எல்லாம் பாழாகி விடுமோ என்ற குற்றக் குறுகுறுப்பு அவளைச் சங்கடத்திலாழ்த்தியிருந்தது.



## 24

அன்று காலையில் வீட்டில் சுமங்கலி பூஜை பெரிய அளவில் நடைபெற்றது. யுக்தா பூஜை ஹோமத்தில் ஒரு மணி நேரத்துக்கும் மேலாக அமர்ந்து சோர்ந்து போயிருந்தாள். அதன் பிறகு வந்திருந்த சுமங்கலிகளுக்குப் பட்டுப் புடவை, வெற்றிலை பாக்கு, வெள்ளி விளக்கு என்று அவள் கையால் கொடுக்கச் சொன்னார்கள். அத்தை, பெரிய அத்தை என்று அவனுடைய சுற்றத்தார் எல்லாரும் சொன்னதை இனிய முகமாகச் செய்து முடித்த யுக்தா இறுதியில் மிகவும் களைத்துப் போனாள்.

கொஞ்ச நாட்களாகவே அவளுக்கு எனர்ஜி லெவல் குறைந்து விட்டது போல இருந்தது. எப்பொழுதும் படுக்கையில் படுத்துக் கொள்ளலாம் போல உடம்பு வலித்தது. எல்லாவற்றுக்கும் மேலாகப் பாட்டியின்



நினைப்பு அடிக்கடி நெஞ்சில் ஓடியது. போதாததற்கு அழுகை வேறு அழையா விருந்தாளியாக முகம் காட்டியது. அவளைச் சாப்பிட வைக்க வீட்டுப் பெண்கள் போராட வேண்டியது. இவை அனைத்தையும் கண்டும் காணாதது போல் செல்லும் கணவனை நினைத்தால் இன்னும் அழுகை வந்தது.

மாலை வழக்கத்துக்கு விரோதமாகச் சீக்கிரமாக வீடு வந்த நிதின், யுக்தா என்ற பிரஜை அறையில் இருப்பதைச் சற்றும் கண்டு கொள்ளாமல், அந்தப் பெரிய பால்கனியின் புல் படுக்கையில் நடந்து ரோஜாக்களை நோட்டம் விட்டான். ரோஜாவின் பட்டான இதழ்களை விட அவனுடைய யுக்தா மென்மையானவள் என்ற நினைப்பு அவனைப் பெருமூச்சிட வைத்தது. கீழ்க் கண்களால் யுக்தாவைக் கவனித்தான்.

யுக்தாவின் நினைப்பும் அவன் மேல்தான் இருந்தது. மலர்களின் மேல் அவனுக்குக் கொள்ளைப் பிரியம் என்பது யுக்தாவிற்குத் தெரியும். அந்தப் பிரியத்தில் ஒரு சதவீதமேனும் அவள் மேல் வைக்க மாட்டானா...? ச்சே! எவ்வளவு கீழ் இறங்கிப் போய் விட்டோம் என்று அவளுக்கே வெறுப்பாகயிருந்தது. தன்னைச் சிலிர்த்து நிதானத்திற்கு வந்த யுக்தா, பரத்தைச் சந்திக்க நாளை மும்பை சென்டர் செல்ல வேண்டும். காலையில் நிதின் கிளம்பும்போது கூடக் கிளம்பினால் வசதியாக இருக்கும். நிதினுடன் கொஞ்ச நேரம் அருகில் இருக்கும் சந்தோஷமாவது கிடைக்கும் என்று நினைத்துக் கொண்டு உதட்டைக் கடித்துக் கொண்டு பேசினாள்.

''நாளை பரத் வருகிறான்...'' - என்றாள் மொட்டையாக. அவன் அருகில் வந்தாலே பாதி வார்த்தைகளுக்கு மேல் யுக்தாவிற்கு மறந்து போகிறது.

வருடிக் கொண்டிருந்த சிவப்பு ரோஜாவின் மேலிருந்து விரல்களை நீக்கி, யுக்தாவை நிமிர்ந்து பார்த்த நிதின், அவளின் பேச்சில் நெற்றியைச் சுருக்கினான்.

''அவனைப் பார்க்க நாளை நான்...'' - யுக்தாவைப் பேசி முடிக்க விடவில்லை அவன் - வார்த்தைகளில் உஷ்ணத்துடன் சீறத் தொடங்கினான்.

''முட்டாள்... எத்தனை தைரியம்! எத்தனை தைரியம்! பரத்திடம் நீ போக, நான் அனுமதிப்பேன் என்றா நினைத் தாய்? நான் என்ன சோளக் கொல்லைப் பொம்மை என்று நினைத்தாயா? உன் வித்தைகளையெல்லாம் கை கட்டி வேடிக்கை பார்ப்பதற்கு. இடியட்... மூளையில்லை உனக்கு..? முட்டாள்! மடைச்சி!'' - நெற்றி நரம்புகள் எல்லாம் கோபத்தில் புடைத்தன, அவனுக்கு.

இத்தனை திட்டுகிறான். போகச் சொல்கிறானா? இருக்கச் சொல்கிறானா? கண்களைக் கரித்தது அவளுக்கு. முந்திய யுக்தா என்றால் அவன் இவ்வளவு பேசியதற்குப் பதிலுக்குப் பதில் கொடுத்திருப்பாள். ஆனால் அவள் மனம் காதலுற்றதிலிருந்தே, அவளுடைய சிந்தனைச் சக்தி, புத்திசாலித்தனம் எல்லாம் கொஞ்சம் பின் தங்கித் தான் போயிற்று. அவளா முட்டாள்? ஆமாம், முட்டாளே தான். அவன் மேல் காதல் வயப்பட்ட அவள் முட்டாளில் லாமல், புத்திசாலியா? யுக்தாவின் பலவீனமான உடம்பு தள்ளாடியது. தலை சுற்றுவது போல் நிதின் அவள் கண்களில் இரண்டாகத் தெரிந்தான்.

பதில் பேசாமல் யுக்தா கண்கள் செருக நின்ற கோலத் தில் நிதின், ''யுக்தா...'' - என்று பதட்டத்துடன் அருகில் பாய்ந்து அவள் தோள்களைத் தொட,



நினைவிழந்து யுக்தா விழவும் அவளைத் தன் கைகளில் ஏந்தினான் அவன்.

அந்த மாளிகை வண்ண வண்ண விளக்குகளால் சில மணி நேரங்களில் ஒளி வீசி நின்றது.

மயங்கி விழுந்த யுக்தாவைப் பரிசோதனை செய்த டாக்டர் சொல்லிவிட்டுச் சென்ற செய்தி, வீட்டிலிருந்த வர்களைக் குதூகலமாக்கியது. பல வருஷங்களுக்குப் பிறகு வாரிசு, குழந்தை, என்ற சந்தோஷம் அவர்களுக்கு. ஒரு சாம்ராஜ்யத்தின் வாரிசு பிறக்கப் போகிறது என்று தமுக்கடிக்காத குறையாக நியூஸ் எல்லாருக்கும் பரவியது. எப்பொழுதும், எதற்கும் பார்ட்டி வைத்து விழாக் கொண் டாடும் பழக்கமுள்ள குடும்பம் என்பதால், மறுநாள் இரவு நண்பர்கள், உறவினர்களுக்கு பார்ட்டி, நகரில் வசிப்ப வர்களுக்கு விருந்து என்று கலகலப்பானது அந்த மாளிகை.

ஆனால்...

சம்பந்தப்பட்ட இருவரின் மனமும் பல்வேறு உணர்ச்சி களால் தாக்கப்பட்டது.

மெத்தையில் முகம் கவிழ்த்துக் கண்ணீரில் நனைந்த யுக்தாவை மிரண்டு போய்ப் பார்த்தான் நிதின். டாக்டர் சொன்ன செய்தியில், ஒற்றைப் புருவம் உயர்த்தி நம்ப முடியாத ஆச்சர்யம் காட்டியவன் முகம், பின் வர்ண ஜாலங்களைக் காட்டி மலர்ந்து போனது. சந்தோஷத்தைத் தனிமையில் யுக்தாவிடம் பகிர்ந்து கொள்வதற்காக டாக்டரைத் தாய் தந்தையர் விசேஷமாகக் கவனிப்பதைக் கவனித்துவிட்டு வந்தவனுக்கு அதிர்ச்சிதான்.

இனி இருவருக்கும் இடையில் எந்தக் கருத்து வேறு பாடுகள் வந்தாலும், பக்குவமாக யுக்தாவிற்குப் புரிய வைக்க வேண்டும் என்று எண்ணியவன்,

அவளின் அழுகைக் கோலம் கண்டு மிரண்டு போனான்.

அறைக் கதவை மூடிவிட்டு நிதின் வந்ததும், எழுந்து உட்கார்ந்து கண்ணீரை அழுந்தத் துடைத்தவள், ஒரு முடிவோடு நிதினை நிமிர்ந்து பார்த்தாள்.

அவளின் அழுகையில், செய்வதறியாது திகைத்துச் சிலை போல் நின்றான் அவன்.

அவனின் தோற்றத்திற்கும் தவறான அர்த்தத்தைக் கற்பித்துக் கொண்டு, அதற்கும் வேதனைப்பட்டாள் யுக்தா. அவளிடம் பேச அவனுக்கு அவ்வளவு கஷ்டமாக இருக்கிறதா? வாழ்க்கை விளையாட்டின் அடிப்படையே விருப்பு வெறுப்புகளோடு விளையாடுவதுதான், அதில் தான் வாழ்க்கையின் சுவாரசியமேயிருக்கிறது. ஆனால் எப்பொழுதும் வெறுப்புகளோடு மட்டும் விளையாடிக் கொண்டிருந்தால்...? நொந்து போனாள் யுக்தா.

லேசாகத் தொண்டையைச் செருமியபடி,

''ஸாரி... நிதின்... நானே பாட்டியிடம் நாளை போக வேண்டும் என்று நினைத்த சமயம் இப்படி ஒரு... நியூஸ்... இதனால் நான் உங்களை இந்தப் பந்தத்தில் பிடித்து வைப்பேன்... என்று பயப்பட வேண்டாம்...'' அவனிடம் பேச நினைத்ததைக் கோவையாகப் பேச முடியாமல் நெஞ்சு வலித்தது.

''ஸ்டாப்... இட்... யுக்தா. என்ன பேசுகிறோம் என்று புரிந்துதான் பேசுகிறாயா?'' சீறினான் அவன்.



''புரிந்துதான் பேசுகிறேன் நிதின். பாட்டி தன் மக ளுக்கு நல்லது செய்வதாக நினைத்து, நமக்குத் தேவை யில்லாத திருமணத்தைக் கொஞ்சமும் யோசிக்காமல், முடித்து வைத்து விட்டார்கள். அதற்காக நாம்...''

யுக்தா பேசப்பேச, முஷ்டி இறுக, அவளுக்கு முதுகு காட்டி நின்றான் நிதின். அவன் கண்களில் அடிபட்ட காயம். முகத்தில் யாரோ பலமாக அறைந்தது போல இறுகிப் போனான். அந்த இறுக்கத்துடன்,

''பரத்திடம் உனக்கு அவ்வளவு காதலா?'' என்று அவன் கேட்ட வார்த்தைகளில் வெப்பம் தகித்தது.

''பரத்திடம் காதலா? எனக்கா...?'' வாய் பிளந்து யுக்தா கேட்ட கேள்வியில் வேகத்துடன் திரும்பினான் நிதின். அவள் பேச்சில் அவன் நெஞ்சில் சிறிய நம் பிக்கை துளிர்த்தது. அது தந்த தைரியத்துடன்,

''இன்று இதற்கு ஒரு முடிவு கட்ட வேண்டும், யுக்தா. நம் வாழ்க்கை இப்படி உப்புச் சப்பற்றுச் செல்ல நான் அனுமதிக்க முடியாது. உனக்கு என் மேல் விருப்பம் என்று தெரிந்த பின்புதான் உன்னை என்னவளாக்கிக் கொண்டேன் யுக்தா. நீ என்னுடையவள். யூ ஆர் மைன். ஆனால் இப்பொழுது நீ பரத் பரத் என்று எப்பொழுதும் அவன் நினைவாகவே இருந்தால்...? நான் தோற்று விட்டேனா யுக்தா?

''என் கணக்குத் தப்பா? நான் தவறிழைத்து விட்டேனா? நான் உன்னை நோக்கி எடுத்து வைக்கிற ஒவ்வொரு அடியும் சரியானது என்ற என் கர்வம் தவறா?''

யுக்தாவிற்கு அவன் பேச்சு ஒன்றும் தெளிவாகப் புரியவில்லை. ஆனால் புரிந்த ஒரே விஷயத்தைக் கேள்வியாக்கினாள், துடிக்கும் இதயத்துடன்.

''பாட்டியின் கட்டாயத்திற்கு அல்லவா என்னை மணந்தீர்கள்?''

''பாட்டியின் கட்டாயம்...'' புருவத்தை உயர்த்தினான் நிதின். ''இந்தப் பரத் விஷயம் சொல் யுக்தா. உனக்கு அவனை மறக்க முடியாதா?'' - அவன் கேள்வி சாதாரணமாகத் தெரிந்தாலும், அதில் இருந்த வலியை முதன் முதலாக யுக்தா உணர்ந்தாள்.

''மனசு முழுவதும் நீங்கள் நிறைந்திருக்கும்போது, அவனை நினைக்க நேரமிருந்தால்தானே மறப்பதற்கு!'' - கோபத்தில் மெல்ல முனகலாக யுக்தா முணுமுணுக்க,

''கம்... அகெய்ன்'' - ஒற்றைச் சொல்லாகப் பதட்டத்துடன் தலையைக் கோதியபடி அவன் சொல்ல, அவனின் பதட்டத்தை அவளின் பெண்மை 'சட்' என்று லாவகமாகப் புரிந்து கொண்டது. அது அவளுக்கு யானை பலத்தைக் கொடுத்தது. முகம் சூரியனைக் கண்ட தங்கத் தாமரையாகத் தகதகத்தது. இந்த தைரியத்தில்,

''ஐ அம் இன் லவ் நிதின். உங்களை உயிரை விட அதிகமாக நேசிக்கிறேன்! - இது தெரியாமலா அன்றிரவு நீங்கள் என்னை...'' அதற்கு மேல் பேச முடியாமல் முகம் சிவந்து போனது யுக்தாவிற்கு. கண்கள் தழைந்து போயின.

நம்ப முடியாமல் கண்கள் ஜொலிக்க மனைவியைப் பார்த்தான் நிதின். அடுத்த நொடி யுக்தா அவனின்



கைகளில் இருந்தாள். அவள் முகமெங்கும் கண் மூடித்தனமாக முத்தமிட்டு, அவளை மேலும் சிவக்க வைத்தான் நிதின். அந்த முத்தங்களில் அவன் சொல்லாமலேயே அவன் காதல் யுக்தாவிற்குப் புரிந்து போனது. பூரித்துப் போனாள். உலகத்தையே அடிமைப் படுத்தி விட்டது போன்ற சிலிர்ப்பு.

''உன்னை மிகவும் ஆசைப்பட்டு மடக்கி மணம் செய்தவன் நான், யுக்தா!'' - அவள் காது மடல்களில் உதட்டை அழுத்தி அவன் பேச, கூச்சத்துடன் அவன் முகம் பார்த்தாள் யுக்தா.

''பாட்டியல்லவா கட்டாயப்....''

''இல்லை யுக்தா, இதில் பாட்டி அம்பு மட்டும்தான். எய்தவன் நான்!'' - சிருங்காரமாகச் சிரித்தபடி அவன் பேச,

யுக்தாவின் முகம் இனிய குழப்பத்தில் விகசித்தது.

''உன்னை முதன் முதலாக நான் பார்த்தது ஒரு சின்ன போட்டோவில். அன்றே என் நெஞ்சில் பலமாக விழுந்து விட்டாய். உன் பாட்டியை நான் சந்தித்த சமயம், ஹார்ட் அட்டாக். அவருடைய பெட்டியில் மருந்துகள் ஏதேனும் இருக்கிறதா என்று சோதனை போட்டதில், பார்த்தது பாட்டியின் பெட்டியில் உன்னுடைய போட்டோ. உண்மையில் அதனாலேயே பாட்டி எனக்குப் பிரியமானவர்களானார்கள். அவர்களுக்கு வேண்டிய உதவிகள் செய்து, அவர்களை என் தொடர்பிலேயே வைத்திருந்தேன். என்ன ப்ராப்ளம் என்றாலும், என்ன விசேஷம் என்றாலும், என்னிடம் சொல்லிவிட்டுச் செய்யுமளவுக்கு என் நட்பை வலுப்படுத்தியிருந்தேன். அந்த 'பரத்'

விஷயமும் பாட்டி என்னிடம் சொல்லியபோது, அதிர்ச்சியாக இருந்தது. சின்ன வயதில் பெண்ணுக்கு என்ன கல்யாணம், இருபத்து மூன்று இருபத்து நான்கு வயது தான் கல்யாண வயது என்று பாட்டியிடம் ஏற்றி விட்டேன். அதனால் உன்னைக் காத்து இருக்கச் சொன்னார்கள். பரத் படிப்பை முடித்து விட்டு வரட்டும் என்று சொல்லச் சொன்னேன்.''

நிதின் பேசப் பேச அவன் கை வளைவில் சோபாவில் அமர்ந்து கேட்ட யுக்தாவிற்குச் சொல்லவே முடியாத இனிய அதிர்ச்சி.

''உங்கள் கம்பெனி மீட்டிங் என்று ஒரு முறை வர வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. அங்கே உன்னைச் சந்திக்கப் போகிற ஒரே காரணத்திற்காக என்னுடைய அத்தனை புரோகிராம்மையும் கேன்ஸல் செய்துவிட்டு வந்தேன், யுக்தா. என்னில் ஏதோ ஒன்று உன்னிடம் சரணாகதி ஆகியிருந்தது. ஏன் எப்படி நேர்ந்தது என்று எனக்குப் புரியவேயில்லை.

''பிறகு ஒரு நாள் உன்னுடைய வீரத்தைக் கண்டு திகைத்துப் போனேன். எத்தனை பேரைச் சமாளித்தாய்?'' வியந்து அவன் பேச,

''நீங்கள் உதவிக்கு வருவீர்கள் என்ற நம்பிக்கையில் தான் அத்தனை பேரையும் எதிர்க்கும் தைரியம் எனக்கு வந்தது, தெரியுமா? ஆனால் நீங்கள் ஏமாற்றி விட்டீர்கள். எனக்கு உங்கள் மேல் அபிமானம் இல்லாமல் போனதற்குத் தொடக்கத்தில் அதுவும் ஒரு காரணம்.''

''நான் உன்னை இரசித்துக் கொண்டிருந்தேன், யுக்தா. ஆனால் என்னுடைய செக்யூரிட்டிகள் என் கண்



அசைவில் அங்கு நிலைமையைச் சீர் செய்து விடவில்லையா?''

ஓ... இப்பொழுது நினைவு வந்தது யுக்தாவிற்கு. அந்த உயரமான இருவர் மற்ற ரவுடிகளை அன்று துவைத்து அடித்துவிட்டு, அவளையும் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று கட்டுப்போட வைத்தவர்கள், அவனுடைய செக்யூரிட்டிகள். அட....டா... அவன் பேச்சைத் தொடர்ந்தான்.

''பிறகு நீலவேணிப் பாட்டி ஒரு நாள் என்னுடைய பாம்பே ஆபீஸில் என் அறையில் தன் மாமா போட்டோவைப் பார்த்து மயக்கம் போடாத குறை. அவர்களை ஆசுவாசப்படுதி விஷயத்தைக் கேட்டபோது அவர்கள் சொன்ன கதை, என்னால் கனவிலும் நினைத்துப் பார்க்க முடியாத காதல் கதை. என் மாமாவின் கதை. பாட்டி எப்படியாவது இருவரையும் சேர்த்து வைக்க வேண்டும் என்று என் காலில் விழாக் குறையாக அழுதபோது, அந்த நொடி இதில் உன்னையும், என்னையும் இந்தக் கதையில் இழுத்துவிட முடிவு செய்துவிட்டேன்.

''நீயும் நானும் மணந்து கொண்டால் மட்டுமே என் மாமா, அத்தை சேர முடியும் என்று நம்பும்படியாகக் கதைகள் புனைந்தேன். பாட்டி என் வலையில் மொத்தமாக விழுந்தார்கள்.''

யுக்தா அவன் சொன்னதைக் கேட்டு வாய் கொள்ளாமல் சிரித்தாள்... கடவுளே... அவளால் சிரிப்பை நிறுத்தவே முடியவில்லை. மனசு சந்தோஷத்தில் தளும்பியது. அதன் கனத்தைத் தாங்க முடியாமல் அவள் மேலும் கிளுகிளுக்கிச் சிரித்தாள். அந்தச் சிரிப்பினூடே,

''நீங்கள் ஹீரோவா... வில்லனா?'' என்று நாயகன் சினிமா ஸ்டைலில் அப்பாவியாக யுக்தா கேட்க.

''நீயே சொல்லு, என் யுக்தா!'' என்று சிரித்த முகத் துடன் அவள் உதட்டைச் சிறைப்படுத்தினான். அது விடுதலை வேண்டாத சிறை இருவருக்கும்.

இந்த ஆட்டத்தின் நாயகன் நிதினா..? பாட்டி அல்லவா அவள் உலகத்தை இந்த ஆட்டு ஆட்டுகிறார்கள் என்று நினைத்தாள். நிதின் அவள் உலகத்தையே கலர்ஃபுல் லாக மாற்றி விட்டானே! இனிமையான மயக்கத்தில் நிதினுடன் கை கோத்தாள் யுக்தா.